www.padippakam.com

# தேசிய இனப்பிரச்சனையில் ஏகாதிபத்தியங்களின் சதி

சபா நாவலன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தேசிய இனப்பிரச்சினையில் ஏகாதிபத்தியங்களின் சதி

சபா நாவலன்

தேசம்

படிப்பகம்

www.padippakam.com

# தேசிய இனப்பிரச்சினையில் ஏகாதிபத்தியங்களின் சதி

ஆசிரியர் : சபா நாவலன்

உரிமை : இன்மை

வெளியீடு : International Tamil Magazine
P O Box 35806,
London,E11 3JX,UK
Tel /Fax :0044 208 279 0354
www.thesamnet.net
jeyabalan.thesam@ntlworld.com

விலை : £15 / ரூ. 45

விற்பனை உரிமை : எதிர் வெளியீடு,
305, காவல் நிலையச் சாலை,
பொள்ளாச்சி - 642 001
தொலைபேசி : 04259-226012

வடிவமைப்பு : பயணி வெளியீட்டகம் - 9445124576

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

இந்தியா மற்றும் இலங்கையின் பின்னணியில் தேசிய உருவாக்கம் குறித்து மார்க்சியப் பார்வையில் வெளிவரும் இன்னொரு நூல் இது. நூலாசிரியர் தோழர் சபா நாவலன் செவ்வியல் மார்க்சியப் பார்வையில் ஊறியவர். 'சமர்' இதழின் ஆசிரியர் குழுவில் ஒரு கட்டம் வரை பணியாற்றியவர். மிகவும் சரளமான நடையில், கோட்பாட்டு நூற்களுக்கே உரித்தான மேற்கோள் திணிப்புகள் எல்லாம் இன்றி இதை அவர் எழுதியுள்ளார். ஒரு வரலாற்று நூலைப் படிக்கும் சுவையோடு வாசகர்கள் இதை ஈடுபாட்டுடன் வாசிக்க இயலும்.

மார்க்சியப் பார்வையில் நின்று எழுதப்பட்ட இதர நூற்களிலிருந்து இது வேறுபடும் புள்ளி தேச உருவாக்கத்தில் ஏகாதிபத்தியம் 'திட்டமிட்டு' உருவாக்கிய பிறழ்வுகளைச் சுட்டிக் காட்டுவதில் அடங்கியுள்ளது. முதலாளிய வளர்ச்சியுடன் கூடிய சீரான சந்தைப் பரவல் தேசிய இன உருவாக்கங்களில் முடியும் என்கிற மார்க்சியக் கருத்தாக்கத்தை உறுதிபட ஏற்கும் நாவலன் அத்தகைய வளர்ச்சி காலனிய ஆதிக்கத்தின் விளைவாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தடைபட்டுப் போனதன் விளைவே இன்றைய சிக்கல்கள் என நம்புகிறார். பிரான்சு முதலான ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டு அவர் இதை விளக்குகிறார். நாவலனின் கருத்துப்படி முறையான சந்தை வளர்ச்சி மட்டும் இலங்கையில் உருவாகியிருந்தால் இன்று அங்கே தேசிய முரண்கள் இருந்திருக்காது என்பது மட்டுமல்ல, இலங்கை முழுவதும் ஒரே மொழி பேசுகிற ஒரே தேசிய இனமாகவும்கூட இருந்திருக்கும்!

மொழி மற்றும் வரலாற்றாசிரியர்கள் மத்தியில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலுக்கு வந்து ஆரிய × திராவிட முரண்களைப் பொருத்தமட்டில் அது ஐரோப்பியர்கள் திட்டமிட்டு மேற்கொண்ட ஒரு சதி. அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஓரங்கம். அதற்கு இங்கே இருந்த மக்கள் பலியாகிப் போனார்கள். வரலாற்றறிஞர்கள் இன்று ஆரிய இனப் படையெடுப்பு என்கிற கருத்தை ஏற்பதில்லை என்பது உண்மையே. ஆனால் ஆரியம், திராவிடம் என்கிற இரு வேறுபட்ட மொழிக் குடும்பங்கள் இங்கே இருந்ததையோ,

www.padippakam.com



ஆரியமொழி பேசியோர் பல நூற்றாண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக மத்திய ஆசியா வழியாக இங்கே குடியேறியதையோ மறுப்பதில்லை. ஆரிய × திராவிட என்கிற கருத்தாக்கம் பிரிட்டிஷார் வருகைக்கு முன்னதாகவும் கூட இங்கே இருக்கத்தான் செய்தது. ஆதிசங்கரர் (8ஆம் நூ.) திருஞான சம்பந்தரைத் 'திராவிட சிசு' எனக் கூறுவது ஒரு சான்று.

தவிரவும் இங்கிருந்த பார்ப்பன ஆதிக்கத்தையும், அதற்கெதிராக கனன்றிருந்த எதிர்ப்பையும் நாம் புறக்கணித்துவிட இயலாது. ஆரியப்படை எடுப்பு என்கிற கருத்தாக்கத்தை பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பாளர்களான ஜோதிபா பூலே, பெரியார் ஈ.வெரா. போன்றோர் இந்த வகையில் ஒரு ஆக்கப்பூர்வமான அரசியலுக்குப் பயன்படுத்தியவர்களாகவும் விளங்கினர்.

தேசிய இன உருவாக்கத்தில் இன்றளவும் மிகப்பெரிய தடையாக இருப்பது இங்குள்ள சாதி உணர்வு. மதம் குறித்து போதிய கவனம் செலுத்தும் இந்நூல் இந்த சாதியத் தடைகளைக் கணக்கில் கொள்ளாதது ஒரு குறை. புலம் பெயர் சூழலில் 'தலித்தியம்' குறித்து விவாதம் இன்று வீச்சுடன் மேலெழுந்துள்ள சூழலில் இதன் அவசியம் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. இன்று உருவாகியுள்ள தேசியத்தை வரையறுத்தவர்கள் எல்லோரும் ஆதிக்க சாதிகளை, குறிப்பாக வெள்ளாளச் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்ததென்பது ஏற்படுத்திய சாதக பாதகங்களும் ஆராயத் தக்கது. சாதியம் குறித்து தனி ஒரு நூலே எழுதப் போவதாக நாவலன் கூறுகிறார். அதை அவர் விரைவில் செய்ய வேண்டும்.

உலகம் மிகப்பெரிய அளவில் மாற்றமடைந்து வருகிறது. தரகு முதலாளிகள், தேசிய முதலாளிகள், பெரு முதலாளிகள் முதலான வரையறைகளை எல்லாம் நாம் மீண்டும் துவக்கித் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. வெளிநாட்டு நேரடி மூலதனம் இந்தியா போன்ற நாடுகளில் குவிந்து கொண்டுள்ள சூழலில் இங்கு உருவாகும் பெரு முதலாளிகள் தமது மூலதனத்தை வெளிநாடுகளில் முடக்கும் காலம் இது. சபா நாவலன் சொல்வது போல ஏகாதிபத்தியத்தின் பங்காளர்களாக மாறும் நிலை கவனமாக ஆராயப்பட வேண்டியது. இந்த வகையில் தேசிய உருவாக்கத்தில் ஏகாதிபத்தியத்தின் பங்கு குறித்த இந்நூல் தமிழ்ச்சூழலுக்குப் பயனுடைய ஒரு பங்களிப்பாக அமையும் என்பது உறுதி.

**அ. மார்க்ஸ்**

28-11-2007
சென்னை-20

படிப்பகம்

www.padippakam.com

தேசம்

International Tamil Magazine
P O Box 35806, London,E11 3JX,UK
Tel /Fax :0044 208 279 0354

www.thesamnet.net
jeyabalan.thesam@ntlworld.com

## பதிப்புரை

மூன்று தசாப்தங்களுக்குப் பின் தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டும் தனது தொடக்கப் புள்ளிக்கே வந்துள்ளது. இதற்கு வெவ்வேறு அக புறக் காரணிகள் காரணமாக இருந்தாலும்; தமிழீழ விடுதலைப் போராட்டம் தோல்வி அடைந்தமைக்கு அது தத்துவார்த்த விடயங்களை குறைத்து மதிப்பிட்டமையும் குறிப்பிடத்தக்க ஒரு காரணியாகும். தத்துவம் இல்லாத போராட்டமும் போராட்டம் இல்லாத தத்துவமும் பயனற்றவை என்பதற்கு தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஒரு உதாரணமாகி உள்ளது.

'தேசிய இனப்பிரச்சினையில் ஏகாதிபத்தியங்களின் சதி' என்ற சபா நாவலனின் இந்நூல் இலங்கை இனப்பிரச்சினையினதும் தோல்வியடைந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தினதும் தத்துவார்த்தப் பிரச்சினையை ஆராய முற்பட்டு உள்ளது. இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் ஈழத் தமிழர்கள் பல நூற்றுக்கணக்கான நூல்களை வெளியிட்ட போதும் சமூக விஞ்ஞானம் பற்றிய நூல்கள் மிகவும் அரிதாகவே வெளிவந்து உள்ளது. சபா நாவலனின் இந்நூல் தத்துவார்த்த விவாதங்களை சற்றுத் தூண்டுவதற்கு உதவிகரமாக இருந்தால் அது இந்நூலின் வெற்றியாகவே அமையும்.

1980க்களின் ஆரம்பத்தில் தன்னை தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைத்துக் கொண்ட சபா நாவலன் மக்களுடன் தன்னை இணைத்து போராட்டத்தில் ஈடுபட்டவர். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர் போராட்டங் களிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். தமிழீழ விடுதலைப் போராட்டம் திசைமாறிச் சென்ற போது அதில் பங்கெடுத்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமது தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்து மேற்கு நாடுகளுக்கு வந்து சேர்ந்தனர். அவ்வாறே

படிப்பகம்

www.padippakam.com



சபா நாவலனும் பிரான்ஸிற்கு வந்தார். புலம்பெயர்ந்த பின்னும் சமர் என்ற அரசியல் சஞ்சிகை ஒன்றிணை அவரது நண்பரும் தோழருமான பி. இரயாகரனுடன் இணைந்து நடாத்தினார்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற அரசியல் பின்புலத்தையுடைய சபா நாவலன் வரலாற்று நோக்கில் தேசிய இனப்பிரச்சினை என்ற இந்நூலைத் தந்திருப்பது இந்நூலுக்கு இன்னமும் வலுச் சேர்த்துள்ளது என்றே நம்புகின்றேன். இது ஒரு முடிவான நூல் அல்ல. இது சபா நாவலனுடைய பார்வை. நூறு பக்கங்கள் வரையுள்ள இந்நூலில் மனிதகுல வரலாற்றில் ஆரம்பித்து தேசிய இனங்களின் உருவாக்கம் உலகின் வெவ்வேறு பாகங்களில் அதன் நிலை என்பன பற்றி நூலாசிரியர் தனது பார்வையை முன் வைத்து உள்ளார். காலனி ஆதிக்கம் பௌத்த ஆரியக் கோட்பாடு களுக் கூடாக; இலங்கையில் உள்ள தேசிய இனங்களுக்கு இடையே யான முரண்பாட்டையும் சர்வதேசத்தின் தாக்கத்தையும் ஆராய்ந்து உள்ளார் நூலாசிரியர். தமிழ் தேசிய வாதம் பற்றிய தனது பார்வை யையும் அவர் வைக்கத் தவறவில்லை. இச்சிறு நூலில் இவற்றை யெல்லாம் ஆராய்ந்து தனது பார்வையையும் தெளிவாகவே நூலாசிரியர் பதிவு செய்துள்ளார்.

தத்துவார்த்த விடயங்களை இலகுபடுத்துவதில் சிரமங்கள் இருந்தபோதும் அதனை ஓரளவு இலகுபடுத்தி வாசகன் சலிப்படைந்து விடாமல் கட்டுரைகள் நகர்த்தப்பட்டு உள்ளது. நிற்க. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் தம்மை இணைத்துக் கொண்ட பலர் இன்று நம்முடன் இல்லை. அவ்வாறு நம்மைவிட்டுச் சென்ற பலருடன் தமிழீழ விடுத்லைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதியும் அது பற்றிய அவர்களின் பார்வையும் மறைந்துவிட்டது. இந்நிலையை மாற்றி அமைக்க போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் பங்கேற்றவர்கள் தங்கள் அனுபவங்களையும் தமது பார்வையையும்(களையும்) பதிவு செய்வது அவசியம்.

முதன் முதலாக 'RISING FROM THE ASHES :Tragic Episode of the Jaffna Library' என்ற நூலகவியலாளர் என் செல்வராஜவின் நூல் யுன் 2003ல் தேசம் வெளியீடாக வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து தேசம் வெளியீடுகள் வெளிவந்துகெண்டுள்ளன. அவ்வழியில் சபா நாவலனின் முதல் நூலாக வெளிவரும் 'தேசிய இனப்பிரச்சினையில் ஏகாதிபத்தியங்களின் சதி' என்ற இந்நூலை வெளியிடுவதில் தேசம் பெருமை அடைகிறது.

**த. ஜெயபாலன்**
ஆசிரியர் தேசம்

படிப்பகம்

www.padippakam.com

# நுழைவாயிலில்

தேசம் அல்லது தேசியவாதம் தொடர்பான விவாதங்கள் சந்தைப் பொருளாதார உருவாக்கத்தின் பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்று வரைக்கும் உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் பரந்து கிடக்கும் சமூகவியலாளர்களையும் தத்துவவியலாளர்களையும் அரசியலாளர்களையும் ஆட்கொண்ட முக்கிய கருப்பொருளாகத் திகழ்கின்றது. விஞ்ஞானபூர்வமான சமூகவியலின் தோற்றத்திற்குப் பிறகு பல்தேசிய இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளை அணுகுவதில் ஏற்பட்ட முக்கிய மாறுதலானது தேசம் அல்லது தேசிய உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறது.

சந்தைப் பொருளாதார உருவாக்கத்தோடு உருவான தேசியம் தொடர்பான கருத்தானது சரியாகப் புரிந்துகொள்ளப்படாமையாலும் தேசியப் பிரச்சினைகளைச் சரியாகக் கையாளாமையாலும் அது தொடர்பான விஞ்ஞானபூர்வமான ஆய்வு நிராகரிக்கப்பட்டமையாலும் உலகெங்கிலும் ஆயிரக்கணக்கில் மனித உயிர்கள் பலியிடப்படுகின்றன. நியாயமான தேசியப் போராட்டங்களை சமூக விரோதிகளும் பாசிஸ்டுகளும் தமது கைகளில் எடுத்துக்கொண்டு தமது தேசியவாத முகமூடியைக் காட்டி மக்களைப் பலியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு புறத்தில் அரச பயங்கரவாதத்தின் துப்பாக்கிகளுக்கும் மறுபுறத்தில் தேசியப் போராட்டத்தைக் கையில் வைத்திருக்கும் சமூகவிரோதிகளின் துப்பாக்கிகளுக்கும் நடுவில் அப்பாவி மக்கள் தமது உயிர்களையும் உடைமைகளையும் உறவுகளையும் இழந்து நடுத்தெருவில் அநாதரவாக விடப்பட்டிருக்கும் நிலையைக் கண்டு உலகெங்கும் பரந்து கிடக்கும் மனிதாபிமானிகளும் ஜனநாயகவாதிகளும் முற்போக்காளர்களும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



மறுபுறத்தில் அடக்குமுறையாளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அப்பாவி மக்களிடமிருந்து பணத்தைச் சுருட்டிக்கொண்டு தமது இருப்பை மேலும் பலப்படுத்திக்கொண்டும் உறுதிப்படுத்திக்கொண்டும் இருக்கிறார்கள்.

பல மூன்றாம் உலக நாடுகளில் ஒரு பகுதி பிணக்காடாகவும் மறுபகுதி உள்ளூர் மற்றும் சர்வதேசிய மாஃபியாக்களின் பணக் காடாகவும் மாறிவருகின்றது. ஆயுத வியாபாரிகளிலிருந்து அரசு உட்பட அரசுசாரா உதவி நிறுவனங்கள் (NGO) வரை இந்த மாஃபியாக்களின் அங்கங்களாக மாறிவருகின்றன.

உள்ளூர் மத்தியதர வர்க்க ஜனநாயகவாதிகளும் முற்போக்காளர்களும் அரச அமைப்புகளாலும் NGOக்களாலும் சர்வதேச பண உதவி அமைப்புகளாலும் சேவை என்ற பெயரில் உயர்ந்த சம்பளத்துடன் உள்வாங்கப்பட்டு சிந்திக்கவிடாமல் தடுக்கப்படுகின்றனர். சமூக அக்கறையுள்ள இளைஞர்கள் சர்வதேச அமைப்புக்களால் விலை கொடுத்து வாங்கப்படுகிறார்கள் அல்லது சவரம் செய்யப்பட்டு தெருவில் வீசப்படுகிறார்கள். மிஞ்சியவர்கள் வளர்ச்சியடைந்த அந்நிய நாடுகளுக்கு அடிமை வேலை செய்வதற்காக அனுப்பிவைக்கப் படுகிறார்கள்.

இலங்கை போன்ற நாடுகளின் தலைமைப் பொறுப்பு தெருச் சண்டியர்களின் கைகளில் ஒப்படைக்கப்படுகின்றது. இவர்கள்தான் அரச பயங்கரவாதத்தை அரங்கேற்றும் நெறியாளர்கள். இவர்களுக் கான எதிர்ப்பு இல்லாத நிலையிலும் எதிர்ப்பாளர்களைப் பிரதி நிதித்துவப்படுத்த இளைஞர்களும் அறிவுஜீவிகளும் இல்லாமல் போனதாலும் இன்று அப்பாவி மக்கள் அநாதைப் பிணங்களாக அழிக்கப்படுகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேசியவாதம் தொடர்பான இந்தக் கட்டுரை பயனுள்ளதாக அமையும் என்று நான் நம்புகின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com

# 1

## ஐரோப்பிய தேசியவாதத்தின் உருவாக்கம்

18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரெஞ்சு நாட்டு சமூகவியலின் தந்தை எனக் கருதப்படும் Emile Durkeheim போன்றோரின் பரிந்துரையின் பேரில் பிரெஞ்சு மொழியை பிரான்ஸ் நாட்டின் ஒரே கல்விமொழியாகப் பிரகடனப்படுத்தியபோது பிரான்ஸ் நாட்டில் ஏனைய மொழிகளைப் பேசுகின்ற மக்கள் மத்தியிலிருந்து சுதந்திரத்துக் கான போராட்டமோ அந்த மக்களின் மத்தியிலிருந்து பெரிய அளவிலான எதிர்ப்போ எழவில்லை. சிறிய அளவிலான எதிர்ப்புப் போராட்டங்கள் காலப்போக்கில் இல்லாது ஒழிந்துவிட்டன. இன்று பிரெஞ்சு தேசம் ஒரு மொழி மட்டுமே பேசும் தேசிய அரசாக மாறிவிட்டது.

பிரெஞ்சு மக்களின் வேறுபட்ட மொழிகளைக்கொண்ட இனப் பிரிவுகளை ஒன்றிணைத்தது சந்தைப் பொருளாதாரமும் அதனூடாக வரலாற்று ரீதியாக உருவாகி வளர்ந்த தேசிய உணர்வுமேயாகும்.

மூலதன உருவாக்கம் அல்லது சந்தைப் பொருளாதார உருவாக்கத்தினூடாகப் படிப்படியாக நடந்த இந்த மாற்றமானது மூலதனம் சீராகப் படிநிலை வழியாகப் பரிணாம வளர்ச்சியடைந்த பொதுவாக எல்லா நாடுகளினதும் இயல்பாகும்.

இங்கே பல்தேசிய இனங்களின் ஒருங்கிணைப்பாக சில நாடு களை விதிவிலக்காகக் காண முடிகின்றபோதிலும் அந்நாடுகள் பல தேசங்களின் இணைப்பாகவே காணப்படுகின்றன. சுவிட்சர்லாந்து இதற்கு ஒரு உதாரணமாகும்.

சந்தைப் பொருளாதாரம் சீராக வளர்ச்சியடையாத அல்லது குறைநிலையில் வளர்ச்சியடைந்த நாடுகளான மூன்றாம் உலக

படிப்பகம்

www.padippakam.com



நாடுகளில் தேசிய இனப் பிரச்சினை என்பது முற்றிலும் வேறுபட்ட ஒரே நாட்டுக்குள் அமைந்த தேசங்களுக்கு இடையிலான பிரச்சினை யாக அமைவதைக் காணலாம். இலங்கை என்பது வேறுபட்ட தேசிய இனங்களையும் அதற்குரித்தான தேசங்களையும் கொண்ட ஒரு நாடாக அமைகின்றது.

1789ஆம் ஆண்டு நடந்த பிரெஞ்சுப் புரட்சி பிரஞ்சு மன்ன னான லூயி xvi (Louis xiv) ஐயும் நிலப் பிரபுக்களின் ஆட்சியையும் முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் சந்தைப் பொருளாதார அமைப்பு முறையும் அதைத் தொடர்ந்த முதலாளித்துவ ஜனநாயகமும் பிரஞ்சு நாட்டையும் அதன் தேசியத்தையும் உருவாக்கிற்று.

பிரஞ்சுப் புரட்சிக் காலத்துச் சிந்தனையாளர்களான Jean Jaques Rousseau போன்றவர்கள் உருவாக்கிய Natural Law என்ற சட்ட அமைப்பு முறையும் Social contract தத்துவ முறைகளும் சமூக மாற்றத்தோடு இணைந்த சந்தைப் பொருளாதார உருவாக்கத்திற் கானதும் தேசிய அரசின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்குமான அடிப்படைத் தத்துவங்களாகின.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை தேசியம், தேசிய அரசு என்ற வார்த்தைகளுக்கு பிரஞ்சுப் புரட்சி நடைமுறை அரசியல் வடிவம் கொடுத்தது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறையிலிருந்து முதலாளித் துவப் பொருளாதார அமைப்பு முறை உருவானபோது பல்வேறு அரசியல் சக்திகள் அதிகாரத்திற்காகப் போட்டியிட்ட போதிலும் தேசியம் என்ற சக்தி மட்டுமே வரலாற்றின் நியதியாக வெற்றிகாண அதிகார அமைப்பின் மேற்கட்டுமானம் பெருநிலங்களை சொந்தமாக வைத்திருந்த நிலப்பிரபுக்களின் கைகளில் இருந்து பெரும் மூலத னத்தைச் சொந்தமாக வைத்திருந்த தேசிய முதலாளிகளின் கைகளுக்கு மாறிற்று.

ஒரு சமூக அமைப்பு முறை அல்லது சமூகக் கட்டமைப்பு அந்தச் சமூகம் சார்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் போகின்றபோது மக்கள் அந்த சமூகத்தின் அதிகார சக்திகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள்.

நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பு முறையில் அதிகளவில் நிலங் களையும் அது சார்ந்த உற்பத்திக் கருவிகளையும் சொந்தமாக வைத்திருந்தவர்களே ஆதிக்கத்திலும் அதிகாரத்திலும் இருந்த சக்திகளாவர். மன்னனும் சாம்ராஜ்யங்களும் இவர்களைப் பாதுகாப்பதையே சமூகத்தின் ஒழுக்கமாகவும் சமூக நீதியாகவும் கட்டியமைத்துச் செயற்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



தொழிற்துறை வளர்ச்சியும் அதனுடன் இணைந்த மூலதன உருவாக்கமும் அதிகாரத்திலிருந்த நிலச் சொந்தக்காரர்களைப் படிப் படியாக ஆட்டம் காணச்செய்தது. பரம்பரை பரம்பரையாக நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்தவர்கள்தான் ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பவர்களாகவும் ஆட்சி அதிகாரத்தால் பாதுகாக்கப்படுபவர் களாகவும் இருந்த நிலை மாறத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக மன்னர் ஆட்சி முறையும் சாம்ராஜ்யங்களும் முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியால் பிரதியீடு செய்யப்பட்டு தேசங்கள் உருவாகின.

பிரஞ்சுப் புரட்சி என்பதும் இந்த மாற்றங்களின் பிரதிபலிப் பேயல்லாமல் சடுதியாகத் தோன்றிய அரசியற் சதிப் புரட்சி அல்ல.

புரட்சிக்குச் சற்று முன்னதாக நிலைமைகளைப் புரிந்துகொண்ட பிரஞ்சு மன்னன் 05.05.1789இல் மூன்று ஷரத்துக்களைத் தனது அதிகாரத்தைத் தொடரும் நோக்குடன் கொண்டுவந்தான். அந்த ஷரத்துக்களின் மூன்றாவது அதிகாரப்படி எல்லா மக்களும் அரசினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

மூன்றாவது ஷரத்து என்ற நூல் சற்றுப் பின்னதாக Emmanuel Joseph Sieyes என்பவரால் எழுதப்பட்டது.

மேல்தட்டு நிலப்பிரபுத்துவ அதிகாரத்தைத் தனது நூலில் முற்றாக நிராகரிக்கும் இவர் மூன்றாவது ஷரத்து குறிப்பிடும் எல்லா மக்களும் என்பது மொத்தத் தேசமாகவும் அது தேசியமயமானதாகவும் அமையவேண்டும் என்றார்.

சமூகத்தின் வளர்ச்சிப் போக்கினூடாகவும் பொருளாதார இயக்க விதிகளினூடாகவும் தேசியம், தேசம் பற்றிய இவ்வாறான பல்வேறு பட்ட கருத்துக்கள் மூலதன உருவாக்கத்தை மேலும் பலப்படுத்திற்று.

மன்னராட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் புதிய சக்திகள் அதிகாரத்தை நோக்கி வளரத் தொடங்கின. தொழில்துறையின் முன் னோடிகளான மூலதனத்தை சொந்தமாக்கிக்கொண்ட பெருமுத லாளிகளான இந்துப் புதிய சக்திகளின் நிலச் சொந்தக்காரர்களுக்கும் அவர்களின் அதிகாரத்திற்கும் எதிரான உக்கிரமான போராட்ட மானது மொத்த தேச மக்களையும் கவர்ந்திருந்தது.

மனித சக்திகளான தொழிலாளர்களின் தேவையும் அதனூ டாகப் பெண்கள் போன்ற சமூகத்தின் கீழ்நிலையிலிருந்த அணிகளின் விடுதலைக்கான தேவையும் இந்துப் புதிய சக்திகளை கவர்ச்சிகரமான கோஷங்களை முன்வைக்கத் தூண்டிற்று. மனிதர்களுக்கு இடையிலான சமூக வேறுபாடுகளை வியாபாரத் தேவைக்காக ஒழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மேலதிக மனிதவளம் தேவைப்பட்ட நிலையில் வீட்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டு கலாச்சாரச் சங்கிலியால்

படிப்பகம்

www.padippakam.com



கட்டப்பட்டிருந்த பெண்களை விடுவிப்பதற்கான பெண்நிலைவாதக் கோஷம் முன்வைக்கப்பட்டது.

பெண்கள் தெருவுக்கு வந்தனர். பொருளாதாரரீதியாகப் பெண்கள் சமூகத்தின் ஒவ்வொரு பொருளாதார அங்கத்திலும் பங்காற்ற ஆரம்பித்தனர். இது பெண்களின் சமூக விடுதலையை முழுமையாக உறுதிசெய்யாவிட்டாலும் புதிய சமூக மாற்றத்தின் சமூகத் தேவையாக அது அமைந்தது.

மூலதன விரிவாக்கத்தின் பகுதியாகவும் சந்தையின் பரவலாக்கத்தின் பகுதியாகவும் தொலைத்தொடர்புச் சாதனங்கள் மற்றும் வேகமான போக்குவரத்து ஆகியன சிறிய கிராமங்கள்வரை பரவத் தொடங்கின. இதனால் மக்களிடையேயான தொடர்பு அதிகரிக்கத் தொடங்கியது. வியாபாரம் தொழில் தேவைகளுக்காக மனிதர்களின் இடப்பெயர்வுகளும் அதிகரித்தன.

மக்களுக்கு இடையில் ஏற்பட்ட இந்த இறுக்கமான தொடர்பு என்பதை உணர்ச்சிபூர்வமான தேசியவாதம் (Emotional Nationalism) என சமூகவியலாளர்கள் வர்ணிப்பதுண்டு. உண்மையில் இந்த உணர்ச்சிபூர்வமான தேசியவாதம் என்பது தொழிற்றுறை வளர்ச்சியும் சந்தைப் பொருளாதாரமும் அவற்றின் தேவைகளினூடாக மக்கள் மத்தியில் ஏற்படுத்திய இணைப்பேயாகும். மொத்த தேசமக்களும் ஒரு சந்தையை நோக்கி மத்தியப்படுத்தப் பட்டிருந்ததுடன் அந்தச் சந்தையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கியுமிருந்தனர்.

இவ்வாறு மக்களிடையேயான தொடர்புகளும் நெருக்கங்களும் அதிகரிக்க வேறுபாடுகள் நிர்மூலமாகத் தொடங்க புதிய தேசியக் கருத்து அதன் உண்மையான வடிவத்தை எடுத்தது. பிரஞ்சு தேசம் ஒரு தேசிய இனம் கொண்ட அரசாக உருவெடுத்து வளர்ந்தது.

இந்த மக்கள் மத்தியிலான தேசிய உணர்வு தேசம் சார்ந்த ஒரு பொதுவான தேசியக் கலாச்சாரத்தினை உருவாக்கிற்று. இந்தப் புதிய சமூக மாற்றத்தோடு எழுந்த கலாச்சாரம் என்பது சர்வதேசியக் கலாச்சாரம் அல்ல. ஒவ்வொரு தேசத்திற்கும் அல்லது தேசிய இனத்திற்கும் உரித்தான பொதுவான கலாச்சாரமாகும்.

ஐரோப்பிய தேசங்கள் தோன்றியபோது ஒவ்வொரு நாட்டிலும் அடிப்படை மூலக்கூறாக அமைந்தது தமது அடையாளங்களுடன் அந்தந்த நாடுகள் அதன் தேசியக் கலாச்சார பிம்பத்தை உருவாக்கியதே. தமது பாரம்பரிய பண்பாடுகளுடன் இணைந்து ஒவ்வொரு தேசமும் அல்லது தேசமாக உருவாகவிருந்த நாடுகளும் தத்தமது அடையாளங்களையும் கலாச்சாரத்தையும் உருவாக்கின.

தேசிய உணர்வு அல்லது தேசம் என்பது உடனடியாக வானத்தில் இருந்து இறங்கும் கருத்தல்ல. பெரும்திரளான மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



கூட்டத்தை அது சென்றடையும்வரை மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மூலதன உருவாக்கத்தின் புறச் சூழ்நிலைகள் உருவாக்கிய உற்பத்தி உறவுகளும் அதன் அதிகார சக்திகளும் இந்தத் தேசிய வாதத்தைக் கட்டியெழுப்பும் பணியினைத் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தும் நோக்குடனும் அதனை விரிவுபடுத்தும் நோக்குடனும் மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டன.

நிலப்பிரபுத்துவக் காலத்தில் எவ்வாறு வரலாற்றுக் கதைகளும் (Historical Myths) அரச பாரம்பரியமும் ஆரம்பத்திலிருந்தே உருவாக்கப்பட்டதோ எவ்வாறு அதனைச் சமூகத்தின் ஆதிக்கத்திலிருந்த சக்திகள் உருவாக்கினவோ தேசிய உணர்வும் சமூக வெளிப்பாடுகளும் நிலப்பிரபுத்துவத்திற்குப் பிற்பட்ட ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்டன.

இந்தத் தேசிய அடையாளத்தின் உருவாக்கம் என்பது பழைய பாரம்பரியம் பண்பாட்டை பேணுவதிலிருந்தும் சில சமயம் அவற்றை அழிப்பதிலிருந்தும் உருவாகின்றது. "qu'est ce qu'une nation" என்ற நூலில் Ernest Renan என்ற பிரஞ்சு எழுத்தாளன் தேசிய அடையாளம் என்பது பழைய பாரம்பரியங்களுடன் புதிய கருத்துக்கள் இணை வதிலிருந்து உருவாகுவதாகக் குறிப்பிடுகின்றார். தேசத்தின் உருவாக் கத்திற்கு பழைய வரலாறு திருத்தி எழுதப்படவேண்டும் என்கிறார்.

ஒரு புறத்தில் பாரம்பரியம் பின்பற்றப்பட வேண்டும் என்ற கோஷமும் மறுபுறத்தில் அதன் பிழையான பகுதிகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கோஷமும் புதிய தேசிய கலாச்சாரத்தை உருவாக்கிற்று. விடுதலை சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோஷம் உருவாகுவதற்கு இதுவே அடிப்படைக் காரணியாக அமைந்தது. வேறுபட்ட இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை முன்வைத்து ஒரு அரசுக்குட்பட்ட பொதுவான பிரதேசத்திற்குள் இருந்த மக்கள் கூட்டத்தை தேசிய இனமாக ஒன்றிணைத்தது.

பல மொழிகள் பேசப்பட்ட ஒரு தேசத்தில் இம்மொழிகள் ஒன்றிணைந்து ஒரு மொழி பேசும் தேசமாக மாறியதற்கு பிரஞ்சு தேசியப் புரட்சி ஒரு நல்ல உதாரணமாகும்.

இந்த மாற்றங்களின் ஒரு கட்டத்தில் குறித்தளவு கட்டாயப் படுத்தல் இருந்தாலும் அதற்கெதிராக எந்த அமைப்புமயப் படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க போராட்டங்களும் எழவில்லை.

பிரான்சில் பிரஞ்சு மொழி பேசியவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் அரைவாசிப் பகுதியினரேயாவர். வேறு பட்ட பிரதேசங்களில் வேறுபட்ட மொழிகள் பேசப்பட்ட போதிலும்

படிப்பகம்

www.padippakam.com



தேசத்தின் உருவாக்கத்தின் பின்னர் பிரஞ்சு மொழியே தனியான பேச்சுமொழியாக மாற்றமெடுத்தது.

தேசிய கலாச்சார உருவாக்கத்தினூடாக இத்தாலியிலும் இவ்வாறான பொது மொழி உருவானது மன்னர் ஆட்சிக் காலகட்டத்தில் இன்றைய இத்தாலி மொழியைப் பேசுபவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 12 சதவீதம் ஆகும். பெரும்பான்மை மக்களின் மொழியாக Piedmontese என்ற மொழியே அமைந்திருந்தது. இதற்கு அடுத்த படியாக Sicilian மொழியே பேசப்பட்டது.

தேசிய கலாச்சார அடையாளத்தை வளர்ப்பதற்கும் தேசத்தை உருவாக்குவதற்கும் மொழி என்பது அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக அமைந்தது. தேசிய உணர்வு கொண்ட மொத்த தேசமும் ஒரு மொழி பேசும் தேசமாக தேசிய அடையாளத்தை வளர்த்தது.

இங்கே குறிப்பிடத்தக்கது என்னவென்றால் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த மொழி தேசிய மொழியாக மாறவில்லை. இலவசக் கல்விமுறை, கட்டாய இராணுவ சேவை, தகவல் தொடர்புச் சாதனங்கள், போக்குவரத்து என்பன இந்தப் பொதுமொழியை வலுப்படுத்துவதற்கு உந்துசக்தியாக அமைந்தன.

இந்தப் பொதுவான கலாச்சாரம், பொதுவான மொழி என்பவற்றினூடாக ஒரு அரசின் எல்லைக்குள் வாழ்ந்த மக்களிடையே இன வேறுபாடுகளும் மறைந்துபோயின. புதிய இத்தாலிய தேசம் உருவானபோது அது ரோமர்கள், கிரேக்கர்கள், அரபு இனத்தவர்கள், ரேற்றர்கள் போன்ற பல இனத்தவரின் கலப்பிலிருந்தே உருவானது. பிரான்ஸ், ஜேர்மன், பிரித்தானியா போன்ற பொருளாதாரம் சீராக வளர்ச்சியடைந்த எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும்.

படிப்பகம்

www.padippakam.com

# 2

## பல்தேசிய
## இன
## நாடுகள்

ஐரோப்பிய தேசியவாதத்தின் உருவாக்கம் தேசியம் பற்றியும் தேசியவாதம் பற்றியும் விஞ்ஞானபூர்வமான தத்துவார்த்த விளக்கத்தை விட்டுச்சென்றிருப்பதைப் பல சமூகவியலாளர்கள் தெளிவுபடுத்திய போதும் சந்தைப் பொருளாதாரம் சீராக வளர்ச்சியடையாத மூன்றாம் உலக நாடுகளில் தேசங்களின் உருவாக்கம் சிக்கலான பிரச்சினையாக அமைகின்றது. எனினும் தேசம் பற்றிய ஐரோப்பிய உதாரணங்களி லிருந்து தேசிய இனம் தொடர்பான கருத்தாடல்களை நாம் ஆரம்பிக்கலாம்.

ஒரு தேசம் என்பது ஒரு தேசிய இனத்தை உருவாக்கிய மேற் குறித்த உதாரணங்களில் தேசிய இனம் என்பது ஒரு குறித்த தேசத்தைச் சார்ந்திருந்தமையை அவதானிக்கலாம்.

இதன் அடிப்படையில் தேசிய இனம் என்பது இன, மொழி, மத வேறுபாடுகளுக்கு அப்பால் வரலாற்றுரீதியாக உருவான வரலாற் றின் ஒரு குறித்த வளர்ச்சிக் கட்டத்திற்குரிய மக்கள் கூட்டமாகும்.

இந்த வரலாற்றுரீதியான மக்கள் கூட்டத்தையும் அதன் அடை யாளத்தையும் உருவாக்குவதற்குரிய பொதுமைப்பாடுகளில் ஒன்றாக பொதுவான மொழி காணப்பட்டது. எனவே தேசிய இனம் என்பது பொதுவான மொழியைக் கொண்டிருக்கும்.

இதன் மறுதலையாக பொதுவான மெழியைப் பேசுகின்ற வேறு பட்ட தேசங்கள் வேறுபட்ட தேசிய உணர்வுடன் காணப்படலாம். அமெரிக்கர்களும் பிரித்தானியர்களும் பொதுவாக ஆங்கில மொழியைப் பேசுகின்றபோதிலும் அவை இரண்டும் ஒரே தேசிய இனங்களைக் கொண்டவையல்ல. இந்த இரண்டும் ஒரே தேசமாகக் கருதப்படுவதில்லை. இந்தியாவில் தமிழ்நாட்டு மக்களும் இலங்கைத்

படிப்பகம்

www.padippakam.com



தமிழர்களும் ஒரே மொழியைப் பேசுகின்ற போதிலும் இந்த இரண்டு பிரிவினரும் ஒரே தேசமாகக் கருதப்படுவதில்லை.

எனவே ஒரு மொழியைப் பேசுகின்ற ஒரே காரணத்தால் மட்டுமே ஒரு தேசிய இனமாக எந்த மக்கள் கூட்டமும் கருதப்படுவதில்லை. மக்களிடையேயான பரஸ்பரத் தொடர்பு அவர்கள் ஒரு குறித்த எல்லைக்குள் வாழும்போது மட்டுமே ஏற்படுகின்றது எனக் குறிப்பிடும் சோவியத் ரஷ்யாவின் தத்துவவியலாளரான ஜே.வீ.ஸ்ராலின் பொதுவான பிரதேசத்தை தேசிய இனங்களின் இயல்பாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் பல நாடுகளில் பொதுவான மொழியைப் பேசுகின்ற அதே நேரத்தில் பொதுவான பிரதேசத்தைக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டங்கள் ஒரு தேசிய இனமாக உருவானதில்லை. ஐரிஷ் தேசிய இனம் இதற்கு ஒரு உதாரணமாகும். இங்கு பிரித்தானியா உருவானபோது அது தனது சந்தைப் பொருளாதாரத்தை ஒரு அரசின் அடிப்படையில் இருந்து அதன் எல்லைக்குள் விரிவாக்கியது.

எனவே பொதுவான பிரதேசம் என்பது ஒரு அரசின் எல்லைக்குட்பட்ட பொதுவான பிரதேசம் என்பதே ஏற்புடையதாகும். அதாவது தேசிய இனங்கள் ஒரு பொதுவான மொழியைப் பேசும் அதே நேரத்தில் ஒரு அரசின் எல்லைக்குட்பட்ட பொதுவான பிரதேசத்தையும் கொண்டிருக்கின்றன.

பிரான்ஸ் தேசம் உருவானபோது ஒரு அரசின் எல்லைக்குள் மத்தியத்துவப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரமே பொது மொழியையும் அதனூடாக பொதுவாக்கப்பட்ட பிரதேசத்தையும் பின்னர் மக்களிடையேயான பரஸ்பரத் தொடர்புகளூடாக பொதுவான கலாச்சாரத்தையும் உருவாக்கிற்று.

பிரான்சில் சீரான சந்தைப் பொருளாதார வளர்ச்சியின்போது பிரிட்டானியா இனத்துக்கும் கோலுவாக்கள் என அழைக்கப்பட்ட பிரஞ்சுமொழி பேசிய பகுதியினருக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு எல்லை சார்ந்த அல்லது மொழி சார்ந்த பாரம்பரியத் தொடர்புகள் இல்லாதிருந்தபோதிலும் இரு பகுதியினரும் ஒரு தேசிய இனமாகக் கலந்துபோயினர். இவ்விரு பகுதியினருக்கும் இடையிலான புவியியல் எல்லை என்பது பொருளாதார எல்லையை உருவாக்குவதற்கான உந்துசக்திகளில் ஒன்றாக அமைந்தபோதும் பொருளாதார எல்லை என்பதே புவியியல் எல்லையை உருவாக்குவதற்கான அடிப்படைக் காரணியாக அமைந்தது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறையில் வேறுபட்ட பொருளாதாரப் பிரதேசங்களைக் கொண்டிருந்த பல இனக்குழுக்கள் இணையும்போது பொதுவான பொருளாதார அடிப்படையைக் கொண்டவையாக மாறுகின்றன. இந்தப் பொதுவான பொருளாதார

படிப்பகம்

www.padippakam.com



அடிப்படை என்பது குறித்த சிந்தனையில் மக்களின் ஒவ்வொரு பகுதியினரும் தங்கியிருப்பதினூடாக உருவாகின்றது.

அமெரிக்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பொதுவான பொருளாதாரத் தொடர்பு மற்றைய நாடுகளுடன் இருப்பது போல அமைந்திருந்தாலும் ஆங்கிலேயர்களை இணைக்கும் பொருளாதார அமைப்பு என்பது அமெரிக்கர்களை இணைக்கும் பொருளாதார அமைப்பிலிருந்து வேறுபட்டுள்ளது. இந்த மாறுபட்ட அமைப்பு முறை என்பது மாறுபட்ட கலாச்சாரத்தையும் தேசிய அடையாளத் தையும் மாறுபடச்செய்கின்றது. இவற்றினூடாக இவ்விரு தேசங்களும் வேறுபட்ட தேசங்கள் ஆகின்றன.

இவ்வாறு வரலாற்றுரீதியாக படிப்படியாக மூலதன உருவாக்கத்தினூடாக உருவான ஒரு மக்கள் கூட்டம் என்பது தமது தேசத்தின் எல்லைக்குட்பட்ட தேசியத்தன்மையைப் பெறுகின்றது. இந்தத் தேசியத்தன்மை என்பது நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முறைக்குப் பின்பதான ஆதிக்க சக்திகளான மூலதனத்தைத் தம் வசம் வைத்துள்ள சக்திகளால் வளர்த்தெடுக்கப்படுகின்றது. இதனால் உருவாகின்ற மனோவியல்ரீதியான தேசப்பற்று இறுதியாக ஒரு தேசிய இனத்தினை உருவாக்குகின்றது.

இங்கு குறிப்பிடத்தக்கதும் விசித்திரமானதுமான நிலைமை மூன்றாம் உலக தேசங்கள் மத்தியில் காணப்படுகின்றது. தேசியத்தை வளர்த்தெடுக்க வேண்டிய தேசிய சக்திகளே தேசியப் பொருளா தாரத்திற்கு எதிராகச் செயற்படுகிறார்கள் என்பது பின்னர் வரும் பகுதிகளில் விரிவாக ஆராயப்படுகின்றது.

இவ்வாறு தேசங்களினதும் தேசிய இனங்களினதும் உருவாக்கம் என்பது வரலாற்றுரீதியாக சடுதியாக நிகழ்ந்த ஒரு மாயம் அல்ல. இந்தத் தவிர்க்க முடியாத வரலாற்றுக் கட்டத்தைப் புரிந்துகொள் ளாமல் தேசியப் பிரச்சினைகள் தொடர்பான முடிவுகளுக்கு வருதல் என்பது மிக்வும் ஆபத்தானதாகும்.

பல நாடுகளில் இந்த வரலாறு உருவாக்கிய தவிர்க்க முடியாத கட்டத்தைப் புரிந்துகொள்ளாத இடதுசாரிகளும் ஜனநாயகவாதிகளும் முழு நாட்டையும் குழப்பத்திற்குள் உள்ளாக்குவதுடன் மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டுப் போவதினூடாகப் பிழையான சக்திகளுக்கு வழிவிட்டுக் கொடுக்கின்றனர்.

இலங்கை இனப் பிரச்சினையில் முற்போக்காளர்கள் என மார்தட்டிக்கொண்ட ரஷ்ய சீன சார்புக் கட்சிகளிலிருந்து மக்கள் விடுதலை முன்னணி J.V.P. உட்பட எல்லா இடதுசாரிகளும் இந்தத் தவறினை இழைத்ததினூடாக தவறான சக்திகளால் பயன்படுத்தப் படுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# 3

## குடியேற்ற நாடுகளில் தேசிய இனங்கள்

ஐரோப்பிய தேசியவாதத்தின் உருவாக்கத்தினூடாக தேசிய இனங்களின் அடிப்படைத் தன்மையையும் அதன் அக, புறச் சூழ்நிலைகளையும் சுருக்கமாக இதுவரை ஆராய்ந்தபோது மூன்றாம் உலக நாடுகளில் இந்தத் தேசங்களின் உருவாக்கமென்பது இதே அடிப்படைகளில் இருந்தாலும் சந்தைப் பொருளாதாரத்தின் சீரற்ற வளர்ச்சி காரணமாக ஒரு தேசிய அரசு என்பது பல தேசிய இனங் களைக் கொண்டதாக அமைந்தது.

காலனி ஆதிக்கத்தால் சின்னாபின்னமாக்கப்பட்ட இந்த நாடு களின் பொருளாதார வளர்ச்சி என்பது உலகத்தின் பெரும்பகுதியான மக்களின் தலைவிதியை மாற்றி எழுதியது. காலனி ஆதிக்க நாடுகள் விட்டுச்சென்ற பினாமிகளான மேல்தட்டு நிலப்பிரபுத்துவ வர்க்கத் தினரின் ஆட்சி என்பது இனங்களுக்கிடையே இரத்தக்களறிகளை ஏற்படுத்தியது.

தேசிய நலனுக்காக தேசிய இயக்கங்கள் உண்மையிலேயே அந் தந்தத் தேசங்களிலுள்ள தேசிய மூலதனத்தை ஆதிக்கம் செலுத்தும் தேசிய முதலாளிகளினதும் அல்லது தேசிய முதலாளித்துவத்தை நோக்கி நகரும் மேல்மத்தியதர வர்க்கத்தினதும் நலன்களையே அடிப் படையாகக் கொண்டதாகும்.

மூலதன வளர்ச்சி அல்லது சந்தைப் பொருளாதார வளர்ச்சி சீராக நடைபெற்ற நாடுகளில் பொதுவாக ஒரு தேசிய இனம் ஒரு நாடாகவும் இந்த வளர்ச்சி அரைகுறையாக நடைபெற்ற நாடுகளில் பல தேசிய இனங்களின் கூட்டு ஒரு நாடாகவும் அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



முன்பு ஐரோப்பாவில் குறிப்பிட்டதுபோல் தொழிற்துறை வளர்ச்சியும் மூலதனத் திரட்சியும் எவ்வாறு தேசிய இனங்களை உருவாக்கியதோ அதே போன்ற நிலை மூன்றாம் உலக நாடுகளில் இருந்திருக்கவில்லை.

ஓரிடத்தில் மத்தியத்துவப்படுத்தப்பட்ட சந்தையை நோக்கி மக்கள் இணைவதற்கு மாறாக வளர்ச்சி பெறாத மூலதனத்தை அடிப்படையாகக் கொணடு இது பல இடங்களில் உருவானது.

தொழில் வளர்ச்சி இல்லாத நிலையில் தொடர்புசாதனங்களின் வளர்ச்சியும் போக்குவரத்துத் துறை வளர்ச்சியும் அதன் விரிவாக் கல்களும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைந்திருந்தது. ஐரோப் பாவில் இருந்த நிலைமையின் அடிப்படையில் ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குப் பிரயாணம் செய்ய மணிக்கணக்கில் செலவழித்தபோது அதே தூரத்தைக் கடப்பதற்கு மூன்றாம் உலக நாடுகளில் நாட்கணக்கிலும் சில வேளைகளில் வாரக்கணக்கிலும் செலவாகும் நிலையே இருந்தது. தொலைத்தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியின்மை மக்களை ஒரு குறித்த எல்லைக்குள்ளேயே முடக்கு கிறது. தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் வசதியின்மை கருத்துப் பரவலாக்கத்தை மட்டுப்படுத்திற்று. பரந்துபட்ட வியாபார அலகுகளின் தேக்கத்தால் மக்களின் இடப்பெயர்வு இல்லாதிருந்தது.

இருப்பினும் சமுதாயத்தின் முன்னைய அமைப்பான நிலப்பிரபுத்துவ அமைப்பில் அதிருப்தி அடைந்திருந்த மக்கள் நிலப்பிரபுகளுக்கு எதிரான மனோபாவத்தைக் கொண்டிருந்ததுடன் மட்டுமல்லாது வரலாற்றுப் போக்கின் தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்குடன் அடுத்த கட்டத்தை நோக்கி நகர முயன்றனர். ஆனால் மேற்கு நாடுகளின் மூலதனமும் அதன் ஏகபோக ஆதிக்கமும் இந்த நகர்வைத் தடுக்க முயன்றது. இந்நிலையில் சமூகத்தின் ஆதிக்கநிலைக்கு வந்துகொண்டிருந்த சக்திகளான உள்ளூர் உற்பத்திகளையும் மூலதனத்தையும் தமது ஆதிக்கத்துக்குக் கீழ் கொண்டுவர முனைந்த சக்திகள் இந்த அந்நிய மூலதனத்தின் திணிப்பிற்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு எதிர்மறையாக தொழிற்துறை வளர்ச்சியின்மையால் தொடர்புகள் அற்றிருந்த மக்களை ஏற்கெனவே இருந்த பொதுமைப்பாடுகள் இணைத்தன. மொழி, பண்பாடு, பிரதேசம் போன்ற பொதுத் தன்மைகள் அடிப்படையானவையாக அமைந்தன. இந்த அடிப்படைக் காரணிகள் சந்தைப் பொருளாதாரத்தின் மத்தியத்துவத்தினூடாக மக்கள் கூட்டங்கள் தேசிய இனங்களாக உருவெடுக்கத் தொடங்கின.

நிலப்பிரபுத்துவக் காலகட்டம் வரை இயல்பாகப் பரிணாம வளர்ச்சியடைந்துவந்த மூன்றாம் உலக நாடுகள் இந்த வரலாற்றின்

படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சிப் போக்கிற்கு எதிராகத் திணிக்கப்பட்ட அந்நிய மூலதனம் என்பது இந்நாடுகளின் தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியைத் தடுத்தது. தேசிய மூலதனத்தை அந்நிய மூலதனத்தால் பிரதியீடு செய்தது.

ஒரு நாட்டில் தேசிய மூலதனம் உருவெடுக்கும்போது ஐரோப்பிய நாடுகளில் நடந்ததுபோல நிலப்பிரபுகளுக்கும் அவை சார்ந்த அமைப்பு முறைக்கும் எதிரான போராட்டங்கள் தோன்றுவதும் தேசிய உணர்வு என்பது நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான உணர்வாக உருவெடுப்பதும் இயல்பு.

மூன்றாம் உலக நாடுகளிலும் இந்த நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டங்களும் அதற்கு எதிரான உணர்வும் உருவான அதே நேரத்தில் தேசிய மூலதனத்திற்கு எதிரான அந்நிய மூலதனத்தின் ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும் போராட்டங்கள் எழுந்தன.

இந்த நிலையில் தேசிய மூலதன உருவாக்கத்திற்கும் தேசிய முதலாளித்துவத்திற்கும் எதிரான சக்திகள் ஒன்றிணைந்தன. அதாவது நிலப்பிரபுக்களும் அந்நிய ஆதிக்க சக்திகளும் ஒன்றிணைந்தன. இதனூடாக மூன்றாம் உலக நாடுகளில் நிலப்பிரபுக்கள் அந்நிய ஏகாதிபத்தியத்தின் நண்பர்களாயினர். இவர்களுக்கிடையில் அதிகாரப் போட்டிக்கான உள்முரண்பாடுகள் எழுந்தபோதிலும் தேசிய மூலதனம், தேசிய முதலாளித்துவம் என்ற பொது எதிரிக்கு எதிராக நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் என்ற இரு பகுதிகளும் ஒன்றிணைந்தன.

பிரித்தானியர்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை விட்டு வெளியேறிய பின்னர் இந்த நிலப்பிரபுக்களினதும் அவர்களின் ஆதரவு சக்திகளினதும் கைகளிலேயே ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

இது முன்னைய சமூக அமைப்பின் ஆதிக்க சக்திகளைப் பாதுகாப்பதாகவும் சமூகத்தினால் தூக்கியெறியப்படும் நிலையில் இருந்தவர்களைத் தரகுகள் ஆக்குவதனூடாக அவர்களை ஏகாதிபத்திய நாடுகள் பயன்படுத்திக்கொள்வதாகவும் அமைந்தது.

இவ்வாறு அந்நிய ஆதிக்க சக்திகளின் நலனுக்காக மட்டுமே உருவாக்கப்பட்ட சமூக அமைப்பு என்பது இன்று வரைக்கும் தொடர்வது மட்டுமல்லாது உலகம் முழுவதும் போராட்டங்களையும் இரத்தக்களறிகளையும் அது ஏற்படுத்தி வருகின்றது.

எந்தவொரு சமூக அமைப்பும் அடித்தளம் என்றும் மேற்கோப்பு என்றும் பின்னிப் பிணைந்த இரு பகுதிகளைக் கொண்டதாக சமூகவியலாளர்கள் வரையறுத்திருந்தனர்.

அடித்தளம் என்பது உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் அதனுடன் கூடியதான முரண்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் உற்பத்தி

படிப்பகம்

www.padippakam.com



உறவு என்பது பிரதானமாக நிலப்பிரபுக்களுக்கும் வறிய மற்றும் அடிமை விவசாயிகளுக்கு இடையிலானதாக இருக்கும்.

உற்பத்திச் சக்திகள் என்பவை மனித உழைப்பிலிருந்து உற்பத்திக் கருவிகள் உட்பட அனைத்து வகைப்பட்ட சக்திகளுமாகும்.

இந்த உற்பத்திச் சக்திகள் நாளாந்தம் வளர்ந்தவண்ணமே இருக்கும். மேலும் மேலும் வளர்ச்சியடைந்த உற்பத்திச் சக்திகள் ஒரு குறித்த நிலையை அடையும்போது உற்பத்தி உறவில் மாற்றம் விளையும். இந்த மாற்றம் நிகழும்போது சமுதாயத்தின் மேற்கோப்பிலும் அதற்கேற்ப மாற்றம் விளையும். இந்த நிலையில் பழைய சமூக அமைப்பு அழிந்த புதிய சமூக அமைப்பு தோன்றும்.

மூன்றாம் உலக நாடுகளில் இந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி அந்நிய மூலதனத்தின் வருகையால் தடைசெய்யப்பட்டது. உற்பத்தி உறவுகள் ஏகாதிபத்திய நாடுகளின் வசதிக்கேற்ப மறு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் பாதுகாக்கப் பட்டன.

அதே நேரத்தில் வளர்ச்சியடைந்துகொண்டிருந்த மூலதன முதலாளித்துவ உற்பத்திச் சக்திகள் உருவாக்கிய உற்பத்தி உறவுகளின் ஆதிக்க சக்திகளாக ஐரோப்பிய நாடுகளைப்போலத் தேசிய முதலாளிகள் உருவாகவில்லை. மாறாக மத்தியதர வர்க்கத்தின் மேலணிகள் தேசிய முதலாளிகள் என்ற நிலைக்கு உயர்வதற்காக நிலப்பிரபுத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட இவர்களே இந்த நாடுகளில் தேசிய சக்திகளாக உருவெடுத்தனர்.

ஒரு புறத்தில் இந்தத் தேசிய உணர்வு என்பது அந்நிய மூலதனத் திற்கு எதிரான மறுதலிக்க முடியாத உணர்வாகப் பரிணாமம்பெற்ற அதே வேளையில் மறுபுறத்தில் ஒரு நாட்டுக்குள் உருவான வெவ் வேறு சந்தைகளுக்கிடையில் போட்டி மனப்பான்மையும் வளர்ந்தது. இதிலிருந்து ஒரு நாட்டுக்குள்ளேயே பல தேசிய இனங்களும் அத் தேசிய இனங்களின் இணைவிற்கெதிரான போட்டி மனப்பான்மையும் வளர்ந்தன.

ஒழுங்கமைக்கப்பட்ட வர்க்க அடிப்படையிலான தேசிய முதலா ளிகளுக்கு மாறாக தேசிய உணர்வு கொண்ட ஒரு சமூகக் குழு மூன்றாம் உலக நாடுகளிலும் ஏனைய முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு சீராக வளர்ச்சி பெறாத நாடுகளிலும் உருவானது.

இந்தத் தேசிய உணர்வின் ஆதிக்கச் சக்திகளாக மத்தியதர வர்க்கத்தின் மேலணிகள் திகழ்ந்தன. இந்தச் சமூக அணி தேசிய

படிப்பகம்

www.padippakam.com



மூலதனத்தைத் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவரத் தலைப்பட்ட அணியாகும். இவர்களே அந்நிய மூலதனத்தின் ஆதிக்கத்திற்கும் நிலப்பிரபுத்துவத்தின் ஆதிக்கத்திற்கும் எதிராகச் செயற்பட்டனர்.

மூன்றாம் உலக நாடுகளில் அந்நிய மூலதனத்தின் ஆதிக்கத்தால் உருவான இந்த தேசிய சூழல் தொடர்பாக இடதுசாரிகள் எல்லோருமே குழப்பமான கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

ஒரு புறத்தில் ஐரோப்பியத் தேசிய இன உருவாக்கத்தின் அடிப் படைகளைக் கருத்திற்கொண்டு அதை அப்படியே பிரதியெடுப்பது போல் மூன்றாம் உலக நாடுகளில் தேசிய இனங்களுக்குப் பிரயோகித் தனர். இந்தப் பிரதி சரிவர ஒட்டிக்கொள்ளாமல் போன நிலையில் தத்துவார்த்தத் தெளிவின்மையின் அடிப்படையில் தலைமை தாங்கப் பட்ட அவர்களின் சமூக இயக்கங்கள் தோல்வியைத் தழுவிக்கொண்டன.

இந்தத் தேசிய உணர்வு கொண்ட தேசிய இனங்களுக்கும் தேசிய இனங்களாக உருவெடுத்து அதிகாரத்துக்கு வந்த நாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளாத 1980களின் ஆரம்பத்தில் உருவாகிய மாவோ சார்பு தேசிய விடுதலை இயக்கங்கள் அரிக்கன் விளக்கை எடுத்துக்கொண்டு தேசிய முதலாளிகளைத் தேடியதில் வடக்கிலங்கையில் மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை முதலாளியையும் தென்னிலங்கையில் மலிபன் பிஸ்கற் தொழிற்சாலை உரிமையாளர்களையும் கண்டுபிடித்து இவர்களைத் தேசிய முதலாளிகள் என வாதித்தனர்.

ஒரு சில முதலாளிகளின் தொழில் நடவடிக்கைகள் ஒரு வர்க்கத்தின் கட்டமைப்பாகாது எனப் புரிந்துகொள்ளத் தவறிய இவர்கள் மூன்றாம் உலக நாடுகளில் தேசிய இனங்கள் தொடர்பாக மிகவும் குழப்பகரமான கருத்துக்களையே முன்வைத்தனர்.

ஆக மூன்றாம் உலக நாடுகளிலும் முதலாளித்துவம் அரை குறைப் பரிணாம வளர்ச்சியடைந்த ஏனைய குடியேற்ற நாடுகளிலும் அந்நிய மூலதனத்திற்கு எதிரான உணர்வுகொண்ட பெரு நிலப்பிரபுக் களுக்கும் அதன் அமைப்புமுறைக்கும் எதிரான பொதுவான கலாச்சாரம், மொழி, இணைந்த பொருளாதாரம், ஒரு அரசின் எல்லைக்குட்பட்ட இணைந்த பிரதேசம் ஆகியவற்றைக் கொண்ட இனக்குழுக்கள் உருவாகின. இந்த இனக்குழுக்கள் தேசிய முதலாளிகளை அதிகாரச் சக்திகளாகக் கொண்டிருக்கும் இயல்பைத் தவிர தேசிய இனத்திற்குரிய எல்லா இயல்புகளையும் கொண்டிருந்தன.

மேலும் ஐரோப்பிய நாடுகளில் சந்தைப் பொருளாதார அமைப்பு முற்றாக நிறுவப்படுவதற்கு சற்று முன்னர் இருந்த சமூகச் சூழ்நிலைகளை இன்றும் இந்த மூன்றாம் உலக தேசிய இனங்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



மத்தியில் காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் தமது அரசுகளைத் தத்தமது எல்லைக்குள் நிறுவும் நோக்குடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ போராடிக்கொண்டே இருக்கின்றனர்.

இதில் முக்கியமானது என்னவென்றால் சமூகத்தை ஆதிக்கம் செலுத்துகின்ற மூலதனத்தை வசமாக்கிக்கொள்கின்ற நிலைக்கு வருகின்ற தேசிய முதலாளிகள் அந்நிய மூலதனத்துடன் சமரசம் செய்துகொள்வதென்பது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது. அந்நிய மூலதனத்துடனும் அதன் ஆதிக்க சக்திகளுடனும் போட்டிபோட முடியாத நிலையில்தான் இவர்கள் இந்த முடிவிற்குத் தள்ளப்படுகின்றனர். இறுதியில் நிலப்பிரபுத்துவ மேலணிகளுடனும் அந்நிய மூலதனத்துடனும் சமரசம் செய்துகொள்ளும் இவர்கள் தேசிய மூலதனத்திற்கும் தேசியத்திற்கும் எதிரானவர்கள் ஆகிவிடுகின்றனர்.

மறுபடி மத்தியதர வர்க்கமும் அதன் நேச அணிகளும் இவர்களுக்கு எதிராக நேரடியாகவோ மறைமுகமாகவோ நாளாந்தம் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். ஆனால் இந்த மேலாதிக்க சக்திகளின் பலம்வாய்ந்த கருத்தியல் அங்கங்களான சமூக சேவை நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், சில சமயங்களில் தீவிரவாத அமைப்புக்கள்கூட தேசியப் பொருளாதாரத்தை அழித்து நாட்டின் சுதந்திரமான வளர்ச்சியைச் சீரழிக்கும் வேலையை மேற்கொள்கின்றன. மறுபுறத்தில் அரசும் அதன் துணைப் பாகங்களும் இதற்கு உறுதுணையாகின்றன.

தேசியவாதத்தையும் தேசியப் பொருளாதார வளர்ச்சியையும் கூறுபோட்ட இந்த ஆதிக்கச் சக்திகள் நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் இருந்த முரண்பாடுகளான பிரதேசம், மதம் போன்றவற்றுக்கான முரண்பாடுகளை மேலும் கூர்மைப்படுத்தியதனூடாக சந்தைப் பொருளாதார உருவாக்கத்தினூடாக உருவாகிக் கொண்டிருந்த தேசிய வளங்களைக் கூறுபடுத்தின. இந்தியாவில் ஆரிய திராவிடத் தத்துவக் கோட்பாடும் இலங்கையில் பௌத்தமத அடிப்படைவாதமும் திட்டமிட்டே உருவாக்கப்பட்டன. முதலாளித்துவக் காலகட்டத்தில் மதம் என்பது கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான கூறுகளில் ஒன்றாக இருந்தபோதிலும் மதம் என்பது நிலப்பிரபுத்துவக் காலகட்டத்திற்குரிய சமூக மேற்கட்டுமானமேயாகும். இந்த மத அடிப்படைவாதம் என்பது நிலப்பிரபுத்துவ சிந்தனையைப் பாதுகாத்து தேசிய மூலதனத்தின் வளர்ச்சியைத் தடுப்பதற்காகவும் அந்நிய மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக தேசங்களையும் மக்களையும் கூறுபோடவும் பயன்படுத்தப்பட்டது. வரும் அத்தியாயங்களில் மதம் பற்றிய சுருக்கமான ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

# 4

## மதமும் மனிதகுல வரலாறும்

தேசங்களோ தேசிய உணர்வோ சந்தைப் பொருளாதாரத்திற்கும் மூலதன உருவாக்கத்திற்கும் முற்பட்ட காலப்பகுதியில் இருந்ததில்லை. சாம்ராஜ்யங்களால் இணைக்கப்பட்ட மக்கள் கூட்டம் தேசத்தால் இணைக்கப்பட்டு தேசிய இனமாகிய நிலை மூலதன உருவாக்கத்திற்கும் அதன் மூலம் சந்தையை நோக்கி மக்களை இணைத்ததற்கும் பின்னரே உருவானது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தோன்றிய காலம் முதலே சமூகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளான். கூட்டம்கூட்டமாகக் காடுகளில் ஆதிமனிதன் பரிணாம வளர்ச்சியடைந்தான். அவனது உடலமைப்பு மாறியது. உருவம் மாறியது. ஆதிமனிதன் தனது செயற்பாட்டையும் அது இணைத்திருந்த பொருளையும் குறிப்பதற்கு ஓசைகளை எழுப்பினான். அந்த ஓசையைக் குறிப்பதற்குக் குறியீடுகளைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் இவ்வோசைகள் பேச்சுமொழியாகவும் குறியீடுகள் எழுத்துமொழியாகவும் மாறின.

காலநிலை; மண்ணின் அமைவு போன்ற பௌதிகச் சார்பு நிலைகளுக்கேற்ப மனிதர்களின் உருவமும் மாறத் தொடங்கியது. அவன் வாழ்ந்த பகுதிகளின் வளம், புவியியல் நிலைமைகளுக்கேற்ற பண்பாட்டு அம்சங்கள் உருவாகின. மக்களிடையேயான தொடர்புகள் அதிகரிக்க மொழியின் தேவையும் அதிகரித்தது. மக்கள் செறிந்து வாழ்ந்த சீரான காலநிலையைக் கொண்ட சிந்துவெளிப் பள்ளத்தாக்கு போன்ற பகுதிகளில் மொழியின் வளர்ச்சி வேகம் மற்றைய நாகரிகப் பகுதிகளைவிட அதிகமாக இருந்தது.

காட்டுவாசிகளாக அலைந்த மனிதன் காலநிலை மாற்றங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள உடைகளை அணியத் தொடங்

படிப்பகம்

www.padippakam.com



கினான். உடை அமைப்புமுறை அவன் பயன்படுத்திய வளங்களுக் கேற்ப மாறுபட்டது. காலப்போக்கில் இந்த உடை பாலியல் உணர்வு களில் இருந்து மனிதனை ஒழுங்குபடுத்தவும் பயன்படுத்தப்பட்டது.

காடுகளில் அலைந்த காட்டுமிராண்டி மனிதனின் சூழ்நிலை எண்ணிக்கை பெருகத் தொடங்கியதும் வேட்டையாடுதலும் அதற் கான வேலைப் பிரிவினைகளும் சாத்தியமற்றதாகி நாடோடிகளாக வாழ்தல் சுமையாகிவிட ஆற்றங்கரைகளில் நிலையாகக் குடியேறத் தொடங் கினான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மனிதகுலம் சமூக அடித்தளமான உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளிடையேயான முரண்பாடு களையும் கொண்ட வரையறுக்கப்பட்ட சமூகத்தின் மேற்கட்டுமானத் தைக்கொண்ட சமூகம் என்ற கருத்தாக்கத்தைப் பெற்றது.

இந்தச் சமூகத்தை நிர்வகிக்க நிர்வாக அமைப்பு முறைகள் உரு வாகத் தொடங்கின. சொத்துக்களைச் சேர்த்துக்கொள்ளத் தொடங்கிய மனிதன் அதன் தொடர்ச்சியான உரிமையைப் பேணுவதற்காக வாரிசு களை உருவாக்க வேண்டிய நிலையில் குடும்பம் உருவானது.

காலப்போக்கில் பெரிய நிலங்களைச் சொந்தமாக வைத்திருந் தவர்கள் நிர்வாக ஆதிக்கத்திற்கு வந்தபோதுதான் நிலப்பிரபுத்துவச் சமூகம் உருவானது. சாம்ராஜ்யங்கள் இதன் அம்சங்களாகின.

நில உடமைச் சமூகத்தில் பணமோ மூலதனமோ நிர்ணயிக்கும் கருவியாக இருந்ததில்லை. மன்னர்கள், சிற்றரசர்கள், சிறு நில உடமையாளர்கள், பண்ணை அடிமைகள் எனப் பல தட்டுகள் கொண்ட சிக்கலான சமூக அமைப்புமுறை உருவானது.

பணம் அல்லாது நிலம் நிர்ணயிக்கும் கருவியாக இருந்தபோது பண்ணை அடிமைகளுக்கு உழைப்பின் கூலியாக நிலம் வழங்கப் பட்டது. கூலியாகப் பெற்ற சிறு துண்டு நிலத்தில் விவசாயம் செய்து தன்னைப் பராமரித்துக்கொண்ட அதே வேளை அவனது உழைப்பு நில உடமையாளர்களுக்கும் வழங்கப்பட்டது. சமூகத்தின் ஒரு சிறு பகுதியான நில உடமையாளர்கள் பெருந்திரளான மக்களின் உழைப்பை இவ்வாறுதான் சுரண்டிக்கொண்டார்கள். இந்தச் சுரண்டலைப் பாதுகாக்க மதங்கள் உருவாகின.

நிலப்பிரபுத்துவ அரசுகள் மதத்தின் பெயரால் மக்களைக் கட்டிவைத்திருந்தன. மதத்தின் அமைப்புமயப்படுத்தப்பட்ட அங்கங்களான கோவில்கள், மடங்கள், திருச்சபைகள் போன்றன நிலப் பிரபுத்துவ அரசைப் பாதுகாக்கும் அமைப்புகளாகச் செயற்பட்டன. மதவாத சித்தாந்தங்கள் அரசமைப்பு முறையையும் மன்னராட்சியையும் சாம்ராஜ்யங்களையும் பாதுகாக்கும் சித்தாந்தங்கள் ஆகின. மன்னனின் மதத்தை மக்கள் தழுவிக்கொண்டனர். இதனூடாக மன்னனைத்

படிப்பகம்

www.padippakam.com



தலைமையாகக் கொண்ட அரசமைப்பு வலுவடைந்தது. மன்னர்கள் பல சந்தர்ப்பங்களில் கடவுளுக்கு அண்மையானவர்களாகக் கருதுப் பட்டனர். அவர்களைச் சுற்றி மக்கள் சங்கிலி போல் பிணைந்து கொண்டனர்.

மொழி என்பது நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் மதம் பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. மொழி என்பது மக்களை இணைக்கும் இன்னொரு அடிப்படைக் கருவியாக இருந்தது என்றாலும் மன்னர்களோடு மதங்கள் இடம்பெயர்ந்து பரவியதுபோல மொழி இடம்பெயர்ந்ததில்லை.

அந்தந்த சமூகச் சார்பு சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபட்ட மதங்களும் அதனோடு ஒன்றிய வேறுபட்ட தெய்வங்களும் உருவாகின. நிலப்பிரபுத்துவ சமூகம் உருவானபோது மதங்கள் அமைப்பு மயமாக் கப்பட்டதுடன் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே சொந்தமாகவிருந்த வேதங்கள், இதிகா சங்கள், புராணங்கள் என்பன பெருந்திரளான மக்களுக்குப் புரியும் வகையில் உருவாக்கப்பட்டு அடிமட்ட மக்கள் வரை அவை கொண்டு செல்லப்பட்டன. இந்து தத்துவத்திலிருந்து சமணம், புத்தமதம் என்பன உருவாகின. கால்நடை வளர்ப்பை ஆதாரமாகக் கொண்ட மத்திய ஆசியாவில் உருவான கிறிஸ்தவம், யூதமதம் இஸ்லாமிய மதம் என்பன மாமிச உணவைக் கலாச்சாரமாக்கியபோது இந்தியாவில் கால்நடைகளை விவசாயத்திற்காகப் பயன்படுத்திய நிலையில் மதங்கள் மாமிச உணவுக்கெதிரான ஜீவகாருண்யத்தைப் போதித்தன.

இவ்வாறு மதங்கள் நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தின் ஒரு இயல்பாக உலகெங்கும் உருவெடுத்தன.

முதலாளித்துவக் காலகட்டத்தில் மதங்களின் முக்கியத்துவம் குறைந்து மக்களிடையேயான வேறுபாடுகளை அழித்தது. இந்த இயல்பான சமூக வளர்ச்சிக்கு எதிராக மதங்களை முன்னிறுத்தும் போது அது அடிப்படைவாதமாக உருவெடுக்கிறது. இந்த அடிப்படை வாதம் பெருந்திரளான மக்கள் மத்தியில் பரவும்போது பாசிச வடிவத்தைக் கொள்கின்றது. இஸ்லாமிய அடிப்படைவாதத்திலிருந்து பௌத்த அடிப்படைவாதம் வரை இவ்வாறுதான் உருவாகின.

ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய மதத்தின் முக்கியத்துவம் குறைந்திருந்த நிலையில் பொருளாதார மத்தியத்துவம் வளர்ந்து கொண்டிருந்தபோது அமெரிக்காவின் சொந்த நலனுக்காக இஸ்லாமிய மதம் முன்நிறுத்தப்பட அது அடிப்படைவாதமாக வளர்ந்தது. இன்று அது பாசிச வடிவத்தைக் கொண்டு உலகத்தையே ஆட்டிப் படைக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

# 5

## பௌத்தத்தின் ஆரம்பம்

கி.மு.700ம் ஆண்டளவில் வேதமரபின் தொடர்ச்சியாக உபநிடதங்கள் தோன்றி வலுப்பெறத் தொடங்கின. பிரமம், ஆத்மா என்பவற்றை முதன்மைப்படுத்தும் உபநிடதங்கள் உடலுக்குள் அதிலிருந்து வேறுபட்ட நிலையில் ஆத்மா இருப்பதாகவும் உலகில் கலந்தும் அதிலிருந்து வேறுபட்டும் பிரமம் என்ற பொருள் உள்ள தென்றும் குறிப்பிடுகின்றன. இவை உணரப்பட வேண்டியது என்பதே உபநிடதங்களின் நிலைப்பாடு. இந்த வகையான உணர்வு பரஞானம் என்றும் இதனை எய்துவதற்கு தியானம் அதனூடாக மனப்பக்குவம் போன்ற பயிற்சிகளை முன்வைக்கும் உபநிடதம் வேதங்களின் வளர்ச்சிநிலைத் தொடர்ச்சியாகும்.

உபநிடதக் காலகட்டம் என்பது இந்தியாவில் இரும்பு உபயோகத்துக்கு வந்த காலகட்டமாகும். அக்காலத்திலேயே அடிமைச் சமூக அமைப்பு முறைக்கெதிரான சித்தாந்தங்களும் போராட்டங்களும் தீவிரமடைந்தன. நிலத்தோடு மனிதன் பிணைக்கப்பட்டுக் கொண்டிருந்தான். பிராமணர்களின் சமூக ஆதிக்கத்தால் சித்தாந்தங்களிலும் பலம்பெற்றிருந்த அதிகார வர்க்கம் வேத அமைப்பின் உள்ளும் புறமும் போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்தது.

இருக்கு வேத காலத்தின் தொடக்கநிலையில் காணப்பட்ட வேள்வி முறையானது பின் வந்த வேத காலங்களிலும் பிராமண ஆதிக்கம் எழுந்த சூழலிலும் மிகப்பெரிய வளர்ச்சியை எய்தியது.

பெரும் பொருட்செலவில் கால்நடைகளைப் பயன்படுத்தி வேள்விகள் நடத்தப்பட்டன. விவசாயத்திற்காக அதிக அளவில் விலங்குகள் பயன்படுத்தப்படாத இந்தக் காலகட்டத்தில் அடிமைமுறை மேலோங்கியிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



சமூக அமைப்பு முறை மாற ஆரம்பித்தபோது விலங்குகளின் தேவை விவசாயத்திற்கு அதிகமானது. இரும்பின் உபயோகம் இதனோடு இணைந்துகொள்ள புதிய உற்பத்திச் சக்திகள் உருவாகின.

இந்த வேதவேள்விக் கலாச்சாரத்திற்கு எதிராக வேதத்திற்கு உள்ளிருந்தே எழுந்த முதற் போராட்டத்தின் வெளிப்பாடே உபநிடதச் சிந்தனை என்று கருதப்படுகின்றது. உபநிடதச் சிந்தனை ஞானம், தியானம், முக்தி, ஒடுக்கம் போன்ற சமுதாய நெறிகளை முதன்மைப்படுத்தின.

எதேச்சாதிகாரத்திற்கு எதிராகவும் மனிதர்கள் நேரடியாக அடிமைகளாகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிராகவும் உணர்வுகள் எழுந்த நிலையில் இந்தச் சமூகநெறி தேவையானதாக அமைந்தது.

உபநிடதம் உருவாக்கிய முக்திநிலை என்பது அதிகார ஆசைக்கு எதிரான உணர்வை முன்நிலைப்படுத்திற்று. இரும்பு உபயோகத்திற்கு வந்ததிலிருந்து உற்பத்திச் சக்திகளில் ஏற்பட்ட ஆரம்ப மாற்றத்திலிருந்து உருவான சமூகப் பகைப்புலமே இந்த சித்தாந்த மாற்றத்தை முன்நிறுத்திற்று.

இந்தக் காலகட்டத்தின்போதே சமணம், பௌத்தம் போன்ற வேத நிலையிலிருந்து வேறுபட்ட தத்துவங்கள் உருவாகின. கி.மு.7ம் நூற்றாண்டிலிருந்து உருவாகத் தொடங்கிய இந்தச் சமூக அமைப்பிலான மாற்றம் பல ஆண்டுகள் வரையில் தொடர்ந்தது.

கி.மு. 5ம் நூற்றாண்டளவில் உற்பத்தி உறவுகளிடையே உள் முரண்பாடுகள் அதிகரித்தன.

அதிகார சக்திகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. மரணமும் பீதியும் வறுமையும் மேலோங்கியிருந்த இந்தக் காலகட்டம் எல்லாச் சமூக மாற்றங்களினதும் ஆரம்ப கட்டத்தினைப் போலவே துன்பியல் நிறைந்திருந்ததாகக் காணப்பட்டது.

இவற்றுக்கெதிரான போராட்டங்களினதும் நிலப்பிரபுத்துவக் காலகட்ட எழுச்சியின் ஆரம்பத்தினதும் நிறுவன மயமாக்கல்தான் உபநிடதத்தின் தோற்றமும் இதே போல புத்தமதத்தின் தோற்றமுமாகும்.

போருக்கு எதிரான புத்தமதம் என்பது சமத்துவத்தையும் சமாதானத்தையும் போதித்தது. தம்மைச் சுற்றியிருந்த சமுதாயத்தில் போரையும் அதனால் ஏற்பட்ட மரணங்களையும் பேரழிவுகளையும் சீரழிவுகளையும் எதிர்த்தவர் புத்தர். ரோகிணி என்ற நதியின் நீருக்காக புத்தரின் உறவு சார்ந்த இனத்தவர் ஆயுதம் தாங்கிப் போராடியதைக் கண்டவர் கௌதம புத்தர்.

கி.மு.7ம் நூற்றாண்டிலிருந்து 5ம் நூற்றாண்டு வரையில் இந்தியா முழுவதும் தீவிரமான நிலப்பிரபுத்துவ மறுமலர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com



ஏற்பட்டது. இக்காலப் பகுதியில்தான் இந்தியா முழுவதும் இருந்த சிறிய இனக்குழுக்களும் அதன் அரசுகளும் மோதிக்கொண்டன. நிலப்போட்டி அதிகரித்துப் பலர் அழிந்துபோயினர். சாம்ராஜ்யங்கள் உருவாகத் தொடங்கின. இதே காலப்பகுதியில் கிரேக்கத்திலும் சிறிய குழுநிலை அரசுகள் அழிந்து சாம்ராஜ்யங்கள் உருவாகின. இந்தியா வைப் போலவே இதனுடன் இணைந்து பல தத்துவங்கள் உருவாகின. அரிஸ்டோட்டில் போன்ற தத்துவாசிரியர்களை இந்தப் போர்கள் தான் உருவாக்கின.

கௌதம புத்தர் இந்தச் சமூக மாற்றம் உருவாக்கிய மிகப்பெரும் தத்துவாசிரியராவார். பல நூற்றாண்டுகள் முன்னோக்கிச் சிந்தித்தவர் இவர். இந்தியர் சிந்தனை மரபின் முற்போக்குப் பகுதியின் கதாநாயகன். ஐரோப்பிய பின்நவீனத்துவ காலப்பகுதியின் சிந்தனைகளைக்கூடத் தனது தத்துவத்திலேயே அடக்கியவர்.

புத்தர் தோற்றம் பெற்ற காலத்தில் மல்வம், மகதம், கோசலம், விரலி முதலிய இனக்குழுப் பிரதேசங்களில் சிறிய இனக்குழுக்கள் அழிக்கப்பட்டு போர்களின் முடிவில் இராசதானிகளும் சாம்ராஜ் யங்களும் உருவாகின. இவரின் காலத்தில் அஜத்சாரு என்ற மன்னன் சாம்ராஜ்யங்களை விரிவுபடுத்துவதில் முன்நின்றதாக வரலாறு கூறும்.

இதனைத் தொடர்ந்து வட இந்தியா முழுவதிலும் இருந்த சாம்ராஜ்யங்கள் தெற்கு வரை பரந்து விரிந்தன. இந்த சாம் ராஜ்யங்களின் விரிவாக்கம் இனக்குழுக்களின் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று.

இனக்குழுக்கள் சுய அதிகார நிலையை இழந்து பேரரசுகளின் அங்கங்களாக மாற நேர்ந்தது. அதிகார நிலையில் நிகழ்ந்த இந்த மாற்றம் சமுதாயப் பண்பாட்டு நிலையில் மாற்றங்கள் நிகழவும் வழிகோலியது.

சமூகத்தின் மேற்கட்டுமானமாகிய இந்தச் சமூக பண்பாட்டு நிலை என்பது மிகப்பெரிய மாற்றத்திற்கு உள்ளானது. பேரரசுகளால் வென்றெடுக்கப்பட்ட இனக்குழுப் பிரதேசங்களில் சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் போன்றவை மையப் பேரரசின் பொதுவான நிலைக்கு ஏற்ற இயைபு பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனூ டாகப் பல புதிய சிந்தனைகளும் தத்துவார்த்த மோதல்களும் உருவாகின.

இந்த நிலையில் பௌத்தம், சமணம், வேதமரபு, ஆரீவகம் போன்ற சிந்தனைகளையும் தத்துவங்களையும் பேணி நின்றோருக்கு அதனைப் பெருந்திரளான மக்களுக்கு ஏற்றதாக ஜனரஞ்சகப்படுத்த வேண்டிய தேவை முன்னெழுந்தது.

அந்தந்த இனக்குழுக்களின் தொழில்முறைகள், பண்பாடு என்பன வர்ணப் பாகுபாட்டுடன் பொருத்தப்பட்டன. சிறிய தெய்வங்கள் வேத மரபின் தெய்வங்களுடனும் வழிபாட்டு முறையுட

படிப்பகம்

www.padippakam.com



னும் பிராமண அறிஞர்களால் பொருத்தப்பட்டன. இந்துக் கடவுளான சிவன் சாம்ராஜ்ய ஒருமைப்பாட்டின் குறியீடாக்கப்பட்டார்.

சிந்துவெளிக் காலகட்ட லிங்க வழிபாட்டுடன் சிவ வழிபாடும் இணைக்கப்பட்டது. இந்திய இலங்கையின் பூர்வீக வழிபாடான நாக வழிபாட்டின் குறியீடாக கழுத்தில் நாகம் சுற்றப்பட்டது. புராதன மண்டை ஓட்டு வழிபாடு என்பது குறிக்கப்படுகின்றது.

வேத மரபுக் கதைகள் சிறிய தெய்வங்களை ஒருங்கிணைத்தன. சிவன் வடக்கு, பார்வதி வங்காளம், முருகன் தமிழகம் என்பன பொதுவாக எல்லாத் தெய்வங்களுக்கும் ஒருங்கிணைக்கப்பட்டன.

குறுநிலக் கடவுள் வழிபாட்டு முறையும் அமைப்பு மயப்படுத்துப் பட்டது. பாலைக் கடவுளான கொற்றவை பார்வதியாகவும் குறிஞ்சிக் கடவுளான முருகன் கார்த்திகேயனாகவும் முல்லைக் கடவுளான மாயோன் விஷ்ணுவாகவும் (கிருஷ்ணர்) மருதக் கடவுளான வேந்தன் இந்திரனாகவும் நெய்தல் கடவுளான கடலோன் வருணனாகவும் சித்திரிக்கப்பட்டனர்.

நிலப்பிரபுத்துவ எழுச்சிச் சூழலுக்கேற்ப வேத மரபின் அடிப்படையாகக் கொண்டெழுந்த சமுதாய மாற்றம் பெருந்திரளான மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியது. உபநிடதக் காலத்தில் கூறப்பட்ட பிரமம், தியானம் என்பனவும் ஆத்மா, ஒழுக்கநெறிகள் போன்றவையும் இதிகாச கால தெய்வ நம்பிக்கைக்கேற்ப தெளிவு படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. சாம்ராஜ்யங்களின் விரிவாக்கத்தால் சீரழிந்துபோன உள்நாட்டு சமூகக் கட்டமைப்பைச் சீர்செய்யவும் மக்கள் மத்தியில் எழுந்த சமூக மாற்றத்தினால் எற்பட்ட சீரழிவையும் குழப்பத்தையும் சீர்செய்யவும் ஆட்சியாளர்கள் மீதான நம்பிக்கையை வலியுறுத்தவும் ஏற்கெனவே உருவாகி வளர்ந்த வர்ணாச் சிரம ஒழுங்கு முறையைக் கட்டிக்காக்கவும் தெய்வ நம்பிக்கையுடன் கூடியதொரு தத்துவ விளக்கம் தேவைப்பட்டது. இந்தத் தேவையின் பொருட்டே கீதை உருவானது.

சாம்ராஜ்யங்களின் விரிவாக்கத்தின் தொடர்ச்சியாக கலிங்கப் போர் உருவானது. ஆயிரக்கணக்கில் மனித உயிர்கள் பலிகொள்ளப் பட்டன. அசோகனது சாம்ராஜ்யத்தில் ஒழுங்கு சீர்குலைந்து மக்கள் விரக்திக்குள்ளாகும் நிலை ஏற்பட்டது. சமாதானத்தைத் தொடர்ந்து சமரசத்தையும் பிரச்சாரம் செய்த புத்தமதக் கொள்கைகளை அசோகனது சாம்ராஜ்யம் முன்நிறுத்தியது.

வட இந்தியாவின் சமூக அமைப்பு முறையும் தென் இந்தியா, இலங்கை போன்றவற்றின் சமூக அமைப்பு முறையும் அதன் மேற்கட்டுமானத்தின் வித்தியாசங்களைக் கொண்டிருந்தன.

திருக்குறள் என்ற, திருவள்ளுவர் என்பவரால் எழுதப்பட்ட இரு வரிக் கவிதைகளைக் கொண்ட தத்துவநூல் கீதையின் சமகால

படிப்பகம்

www.padippakam.com



நூலாகக் கருதப்படுவதுண்டு. தமிழர் வரலாற்றின் ஆரம்பகாலச் சின்னமாகக் கருதப்படும் இந்நூல் உருவான காலம் என்பதும் தென் இந்தியாவில் நிலப்பிரபுத்துவ எழுச்சிக் காலமேயாகும்.

அந்நியப் படையெடுப்புக்களாலும் பெருந்தொகையான அடிமைக் கலாச்சார அமைப்பு முறைகளாலும் தொடர்ச்சியான போர்களாலும் வன்முறை ஆதிக்கம் வட இந்தியப் பகுதிகளில் அதிகரிக்க தென் இந்தியாவில் இந்த நிலை சற்று மாறுபட்டதாக இருந்தது. அன்பிணைந்திணை என்ற தூய அறவொழுக்கம் அந்தச் சமூகத்தில் போற்றப்பட்டது. இலக்கியத் துறையில் செவியறிவுறு என்ற ஒரு துறை ஆளும் வர்க்கத்தைத் தொடர்ச்சியாகக் கண்டித்து நெறிப்படுத்துவதைக் கடமையாகக் கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டும் சமூகவியலாளர்கள் பலர் தென் இந்தியாவிலிருந்த ஜனநாயக அமைப்பினைத் தமது ஆய்வுகளின் கருத்தில் கொள்கின்றனர்.

இனக்குழு அமைப்பு முறையும் தோல்வியடைந்த இனக்குழுக்களை அடிமைகளாகப் பாவித்த அமைப்புமுறையும் தகர்ந்து நிலவுடமைச் சமூகம் உருவாகிக்கொண்டிருந்த இந்தக் காலகட்டத்தில் மதம் தொடர்பான உணர்வுகள் நிலவின என்றாலும் வடக்கின் பண்பாட்டுக் கூறுகள் தென்னிந்தியாவில் ஊடுருவியிருந்தாலும் அவை பொதுவான சமூகத்தில் முதன்மைப்பட்டிருக்கவில்லை. கீதை உருவான அதே காலகட்டத்திலேயே எந்த மதக் குழுவையும் சாராத திருக்குறள் உருவானது என்ற வரலாற்றாதாரம் தென் இந்தியாவில் இந்து மத வேதக் கலாச்சார மரபின் ஊடுருவல் சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் ஊடுருவி இருக்கவில்லை என்பதைக் காட்டி நிற்கின்றது. இறுக்கமான கட்டுக்கோப்புகளற்ற இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த திறந்த சமூக அமைப்பு முறையே நிலவிற்று. தமிழ்ச் சங்கங்களின் நெறிப்படுத்தலால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஜனநாயகம் ஆளுமை செய்தது.

இந்த மரபின் தொடர்ச்சியானது நிலப்பிரபுத்துவ எழுச்சிக் காலப் போர்களின் கொடுமையைத் தணிப்பதிலும் கணிசமான பங்கினை வகித்திருந்தது.

நிலப்பிரபுத்துவ எழுச்சிக் காலத்தில் கி.பி.2ம் நூற்றாண்டுக்குப் பின்னர் இனக்குழுக்களிடையே மோதல்கள் அதிகரித்தன. சாம்ராஜ்யங்களினதும் பேரரசுகளினதும் உருவாக்கத்தால் அழிவுகள் உச்ச நிலையை அடைந்தன. மருத நிலப்பகுதியை மையமாகக் கொண்ட வேந்தர்குலம் தமிழகத்தில் எழுச்சிபெற்றது. போரில் ஆண்களின் இழப்பினால் பாலியல் ரீதியில் சமூகம் சீரழிந்தது. குடும்ப அமைப்புமுறை உடைந்து சமூகச் சீரழிவு உருவாகிக்கொண்டிருந்தது.

இதனை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை அதிகார வர்க்கத்திற்கு அவசியமானது.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவின் மற்றைய பகுதிகளைப் போலல்லாது தமிழகத்தினைப் பொறுத்த வரையில் மதம் என்பது சமூகத்தை ஒழுங்கு படுத்தும் கருவியாக முன்னெப்போதுமே இருந்ததில்லை. நிலப்பிரபுத்துவ எழுச்சியின்போது ஏற்பட்ட மத அமைப்பிற்கான சமூகத் தேவையை நிறைவுசெய்ய வேண்டிய நிலையில் இந்து மதமும் கூடவே சமணமும் பௌத்தமும் வேர்விடத் தொடங்கின.

ஏற்கெனவே இருந்த சமூகச் சீரழிவுகள் ஒரு புறத்தில் துன்பியல் நிறைந்ததாகவும் மறுபுறத்தில் இறுக்கமான சமூகக் கட்டமைப்பைக் கோரி நிற்பதாகவும் இதில் பௌத்தமதம் என்பது வாழ்க்கையைத் துன்பியல் நிறைந்ததாகவும் அதிலிருந்து விடுதலையைத் தேடுவதற்கான தத்துவமாகவும் அமைந்ததால் ஏற்கெனவே இருந்த சமூகச் சீரழிவுகளின் தாக்கத்தாலும் மற்றைய மதங்களின் ஆதிக்கமின்மையாலும் அதனூடாக ஏற்பட்ட மதத்தின் தேவையினாலும் தென்னிந்தியாவிலும் அதன் தொடர்ச்சியாக இலங்கையிலும் பௌத்த மதமும் சமணமும் பரவத் தொடங்கின.

புத்த மதம் கி.மு. 3ம் நூற்றாண்டிலேயே தமிழகத்திற்குள் அறிமுகமாகி இருந்தமையை பிராமிக் கல்வெட்டுக்களின் ஆதாரமும் அகநானூறின் பாடல்களும் கூறுகின்றன. அசோகனால் தர்மவிஜயத் தூதுக்குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டபோதே தென்னிந்தியாவிற்கும் அனுப்பப்பட்டிருந்தது.

இதே நேரத்தில் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் சமூகத்தை ஒழுங்குபடுத்தும் பிரதான அமைப்புகளாக கோவில்கள் மட்டுமல்லாது ஏனைய சடங்குகளான திருமணம், கர்ப்பம், மகப்பேறு, ஈமச் சடங்குகள், புதுமனை புகுதல் போன்ற பல்வேறு வைபவங்களும் அமைந்திருந்தன.

பௌத்தமதம் இந்தச் சடங்குகளையும் ஏனைய ஸ்தாபன முறைகளான கோவில்கள் போன்றவற்றையும் புறக்கணித்தமையால் பௌத்தமோ சமணமோ மக்களின் வாழ்க்கைமுறையின் அடிநிலை வரை சென்று நிலைத்திருக்கவில்லை. எனினும் திருக்குறள், அகநானூறு போன்ற தத்துவங்கள் பௌத்த சமயக் கொள்கைகளை வலியுறுத்தின.

மணிமேகலை, குண்டலகேசி போன்ற தமிழ்ப் பெரும் காப்பியங்கள் பௌத்தமத தத்துவத்தை வலியுறுத்துபவையாக அமைந்ததுடன் பௌத்தமதத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் அவற்றின் இந்துமதக் கூறுகளையும் காணக்கூடியதாகவும் அமைந்தது.

இந்திய வரலாற்றை அதன் சமூக மாற்றங்களுடன் பொருத்தி ஆராயும் இந்திய சிந்தனை மரபு என்ற நூலில் கலாநிதி நா.சுப்பிரமணியன் புறநானூற்றின் ஒரு பாடலை பௌத்த அறநூலான தம்மபதத்துடன் ஒப்பிடுகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com



"காமே வாயாதி நின்னேவா" என்ற பாலி மொழி வரிகள் புறநானூறின் "நாடா கொன்றோ காடா கொன்றோ" என்ற பாடலின் மொழிபெயர்ப்பாகவே இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

இதே சமூகப் பகைப்புலத்தின் அடிப்படையிலிருந்துதான் இலங்கையிலிருந்த தமிழர்கள் மத்தியிலும் பௌத்தமதம் பரவத் தொடங்கியது. இது தவிர புவியியல் சூழ்நிலை காரணமாக தென்னிந்தியாவின் அரசியல் சமூக மாற்றங்கள் இலங்கையையும் பாதித்தன.

சாம்ராஜ்யங்களை விரிவுபடுத்தலுக்கான போராட்டம் என்பது தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வரை விரிந்துசென்றபோது. இலங்கை மன்னர்கள் அதற்கெதிராகப் போராட வேண்டியவர்களாகவும் மக்கள் தொடர்ச்சியான அழிவுகளைச் சந்திக்க வேண்டியவர்களாகவும் ஆயினர். மறுபுறத்தில் இலங்கையை வெற்றிகொண்ட தென்னிந்திய மன்னர்கள் புவியியல் சூழ்நிலை காரணமாகத் தமது சாம்ராஜ்யங்களைத் தொடர்ச்சியாக நிலைப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. இதனால் இலங்கையில் தோற்கடிக்கப்பட்ட மன்னர்களுக்கும் தென்னிந்திய மன்னர்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான போராட்டம் மன்னராட்சிக் காலம் முழுவதும் காணப்பட்டது. இந்துப் போர்களினால் ஏற்பட்ட அநர்த்தங்களினால் மத்தியத்துவப்படுத்தப்பட்ட சாம்ராஜ்யத்தை உருவாக்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் நிலப்பிரபுத்துவ மறுமலர்ச்சியும் தாமதம் அடைந்ததுடன் சமூகம் துன்பியல் நிறைந்ததாகக் காணப்பட்டது.

இந்தியப் படையெடுப்புகளும் இந்திய மன்னர்களின் நிலையற்ற ஆட்சிகளும் இந்திய மன்னர்களுக்கு எதிரான உணர்வினை இலங்கை மக்கள் மத்தியில் தோற்றுவித்தது.

மகாவம்சக் கதைகளில் கூறப்படும் எல்லாளன் துட்டகைமுனு போரும் இதே அடிப்படையைக் கொண்டதாகவே அமைகின்றது. இந்திய ஆதிக்கத்திற்கெதிரான உணர்வு இலங்கையில் தேரவாத பௌத்தத்தின் பரவலுக்குப் பின்னர் வலுவேற்றியது.

இந்த வரலாற்றுப் பகைப்புலத்தை நிராகரிக்கும் பல ஆய்வாளர்களும் சமூகவியலாளர்களும் தேசியவாதம் என்ற கருத்தாக்கம் சந்தைப் பொருளாதார உருவாக்கத்திற்கு முன்னரே உருவானதாக நிறுவ முற்பட்டு தேரவாத பௌத்தம் என்பது தேசியவாதத் தன்மையை ஆரம்பத்திலிருந்தே கொண்டிருந்ததாக முடிவுக்கு வருகின்றனர். Earnest Gellnerஆல் எழுதப்பெற்ற மிகப் பிரபல்யமான தேசியவாதம் பற்றிய Nation and Nationalismஇனை விமர்சிக்கும் சமூக விஞ்ஞானிகள் இலங்கையில் தேரவாத பௌத்தம் தேசியவாதத்தைக் கொண்டிருந்ததாக விவாதிக்கின்றனர்.

பௌத்தத்தின் செல்வாக்கும் வேதமரபின் தொடர்ச்சியான இந்து மதத்தின் வளர்ச்சியும் காணப்பட்ட இந்தியாவில் குறிப்பாகத்

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டில் நிலவுடைமைச் சமூகக் கட்டமைப்பைப் பேணுவதற்கான கலாச்சாரப் பண்பாட்டுக் கட்டமைப்பையும் கருத்தாக்கங்களையும் பௌத்த மதம் தொடர்ச்சியாக நிராகரித்தமையால் பௌத்தத்தின் வளர்ச்சி புராண இதிகாசங்களின் பரவலுடன் தாக்குப்பிடிக்க முடியாமல் பிரிவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

கி.பி. 3ம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட இந்தப் பிளவு மகாயான பௌத்தம் என்ற பௌத்தமதத்தின் புதிய பிரிவை உருவாக்க இதன் பழமைவாதிகளான பௌத்தர்கள் தம்மை தேரவாத பௌத்தர்கள் என வரையறுத்துக்கொண்டனர்.

இந்த மகாயான பௌத்தம் என்பது புராண இதிகாசங்களின் தாக்கத்திற்கு உட்பட்டு இறுதியில் கௌதம புத்தர் என்ற மகா மனிதனை, தத்துவாசிரியரை, புரட்சியாளனை இதிகாச, புராண, மாயக் கதைகளின் கதாபாத்திரமாக்கியது.

வேத மரபு என்பது முன்னரே குறிப்பிட்டது போன்று நிலப் பிரபுத்துவ சமுதாயத்தை ஒழுங்குபடுத்தப் பயன்பட்டபோது இனக் குழுக்களை இணைப்பதற்காக அந்த மக்களின் சடங்குகளையும் தொழில்களையும் கடவுள்களையும்கூட உள்வாங்கிக்கொண்டு இந்து மதத்தின் அங்கங்களாக இணைத்துக்கொண்டது.

பௌத்தத் தத்துவம் பரவத் தொடங்கியபோது அதன் புரட்சிகரமான தத்துவார்த்தப் பகுதிகளைக் கண்டு பயந்த ஆளும் வர்க்கத்தினரும் அதன் தத்துவகர்த்தாக்களாகவும் நெறியாளர் களாகவும் திகழ்ந்த பிராமணர்களும் கௌதம புத்தரையும் ஒரு புராணக் கதாநாயகனாக உள்வாங்கிக்கொண்டு நவீன சமூக விஞ்ஞானத்திற்கு ஈடான உபநிடதக் காலத்து பௌத்த தத்துவத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டனர்.

இந்த மகாயான பௌத்தத்தின் தாக்கம் இலங்கையிலும் எதிரொலித்தது.

கி.பி. 3ம் நூற்றாண்டளவில் நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தின் தொடக்க காலங்களில் தமிழ்நாட்டில் உருவாகிய மகாயான பௌத்தம் என்ற பிரிவு கி.பி. 6ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இந்து சமயப் பாதிப்பு மேலோங்கிய சமூகப் பின்னணியில் மச்ச புராணம், பாகவத புராணம் என்பவற்றின் அடிப்படையில் புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என மகாயானம் உள்வாங்கிக்கொண்டது. கி.பி. 7ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று இதை உறுதிப்படுத்துகின்றது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்த பௌத்தக் கோவில் கள் அனைத்தும் விஷ்ணு ஆலயங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

இலங்கையில் கி.பி. 5ம் நூற்றாண்டில் ஐந்து தென்னிந்திய அரசர்களின் தொடர்ச்சியான 27 ஆண்டுக்கால ஆட்சி நிலவியது.

படிப்பகம்

www.padippakam.com



இவர்களின் ஆட்சிமுறை நேரடியான மன்னர் ஆட்சி அமைப்பாக இல்லாதிருந்தமையாலும் வரலாற்று, புவியியல் காரணங்களால் தமிழகத்துடன் வேறுபட்டு நின்றதாலும் நிலையற்றிருந்ததாலும் ஏனைய இடங்களின் சாம்ராஜ்ய விரிவாக்கங்களின்போது மக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்பங்களின்போது வழங்கப்பட்ட தத்துவார்த்த ஒருமைப்படுத்தலை வழங்குவதற்கான சாத்தியப்பாடு இருந்ததில்லை. எதேச்சையான இந்த அதிகாரப் போக்கென்பது நிலப்பிரபுத்துவத்தின் சீரான வளர்ச்சிப் போக்கிற்கும் சூழுநிலை சமூக அமைப்பிற்கும் இடையில் ஒரு குழப்பகரமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. நிர்வாகம் சீர்குலைந்திருந்தது. நிலப்பிரபுத்துவக் காலம் முழுவதும் இந்தியாவெங்கும் இருந்த பிராமண ஆதிக்கம் இலங்கையில் இன்று வரை இல்லாதிருந்ததும் இதன் தொடர்ச்சியேயாகும். மறுபுறத்தில் இந்திய சாம்ராஜ்ய விரிவாக்கம் மேற்சொன்ன காரணங்களால் இலங்கை மக்களைப் பொறுத்தளவில் துன்பியலாகவே கருதப்பட்டது.

இந்த நிலையில் பௌத்தத் தத்துவம் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தது.

கி.பி. 6ம் நூற்றாண்டில் உருவான இந்தச் சமூகப் பின்னணியில் இதே காலப்பகுதியில் 5ஆவது தென்னிந்திய மன்னனைத் தோற்கடித்த தாதுசேனனின் மாமாவான மகாநாம தேரவால் மகாவம்சம் எழுதப்பட்டது.

இந்துத் தத்துவத்தின் அமைப்புமயப்படுத்தப்பட்ட ஆதிக்கம் இல்லாத நிலையில் மக்கள் மத்தியில் பௌத்தம் பரவியிருந்த நிலையில் தென்னிந்தியப் படையெடுப்பின் ஒரு பகுதியாக, அடையாளமாக தென்னிந்தியாவில் உருவான மகாயான பௌத்தம் முன்னிறுத்தப்பட்டது.

இந்த முரண்பாட்டின் அடிப்படையிலிருந்துதான் இந்திய சாம்ராஜ்ய விரிவாக்கலில் இருந்து இலங்கை தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முற்பட்டது.

இந்நிலையில் உருவான தேரவாத, மகாயான பௌத்தப் பிரிவுகள் என்பன சிங்கள மொழியின் உருவாக்கத்திற்கும் காரணமாக அமைந்திருந்ததுடன் தமிழ் மொழி என்பது மகாயான பௌத்தத்தின் ஊடகமாகக் கருதப்பட வழிவகுத்ததுடன் இந்த முரண்பாட்டை, பிற்காலத்தில் பிரித்தானியர்கள் திட்டமிட்டுக் கூர்மைப்படுத்தி இலங்கை என்ற அழகிய நாட்டை இரத்தத்தால் குளிப்பாட்டவும் வழிவகுத்தது.

படிப்பகம்

www.padippakam.com

# 6

## பௌத்தம்
## தமிழ்
## சிங்களம்

இவ்வாறு 6ம் நூற்றாண்டில் உருவான இரு பௌத்தப் பிரிவுகளுக்குப் பின்னர் இலங்கையில் நிலப்பிரபுத்துவ வளர்ச்சியின் காலகட்டம் பெரும்பகுதியும் இந்து மதத்தால் உள்வாங்கப்பட்ட பௌத்தத்திற்கும் பௌத்த மதத்திற்கும் எதிரான போராட்டமாகவே அமைந்தது.

6ம் நூற்றாண்டில் உருவான புராண இதிகாசங்களின் பாணியிலான மகாவம்சம் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட அதிகாரப் போராட்டங்களை இதிகாசங்களையும் புராணங்களையும் போலவே மக்கள் மயப்படுத்த முற்பட்டது. இதன் ஒரு வடிவமே எல்லாளச் சோழனுக்கும் துட்டகாமினிக்கும் இடையில் நடந்த போராட்டம் தொடர்பான மகாவம்சத்தின் விவரணையாகும்.

உலகத்தில் எந்த நாட்டிலும் நிலப்பிரபுத்துவக் காலகட்ட முரண்பாடு என்பது மொழிகளுக்கு இடையேயான முரண்பாடாக இருந்ததில்லை. மன்னர்களுக்கும் இராசதானிகளுக்கும் இடையிலான முரண்பாடாகவே அமைந்திருந்தது. மன்னர்களும் இராசதானிகளும் சாம்ராஜ்யங்களும் மாறும்போது நாட்டின் எல்லை சுருங்கியும் விரிந்தும் வேறுபட்ட மொழிகளையும் பண்பாடு கலாச்சாரங்களையும் கொண்ட மக்களையும் இராசதானி என்ற சங்கிலிக்குள் இணைத்தது. நிலப்பிரபுத்துவம் வலுப்பெற அதனை மேலும் நிலைநிறுத்தும் கருவியாக மதங்கள் உருவாகின. இந்த மதங்கள் மட்டுமே மக்களிடையே வேறுபாடுகளை உருவாக்கின. மன்னராட்சியின் கீழ்மட்ட அமைப்பு வடிவங்களாக மதங்கள் மாறுதலடைந்தபோது சாம்ராஜ்யங்களிடையேயான முரண்பாடு மதங்களிடையேயான முரண்பாடாகவும் உருவகப்படுத்தப்பட்டது. இதன் ஒரு வடிவமாகவே

www.padippakam.com



கிறிஸ்தவத்திற்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையேயான முரண்பாடு இரு வேறுபட்ட சாம்ராஜ்யங்களுக்கு இடையேயான முரண்பாடாகச் சித்திரிக்கப்பட்டது.

இருப்பினும் ஒரு மன்னன் இன்னொரு மன்னனை வெற்றி கொண்டு தனது ராஜ்யத்தை நிலைநிறுத்திக்கொள்ளும்போது மக்களும் அந்த ராசதானிக்குள் தம்மை இணைத்துக்கொண்டனர்.

இதே காரணங்களால் தமிழ்சிங்கள முரண்பாடு என்பது 19ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வரலாற்றுக்காலப் பகுதியில் எப்போதுமே பிரதான முரண்பாடாகவோ அடிப்படை முரண்பாடாகவோ இருந்ததில்லை. மாறாக மக்களிடையேயான முரண்பாடென்பது ராசதானிகளுக்கும் மன்னர்களுக்கும் இடையிலான முரண்பாடாகவும் இதன் தொடர்ச்சியாக மதங்களிடையேயான முரண்பாடாகவுமே அமைந்திருந்தது.

மூன்றாம் உலக நாடுகள் பற்றியதும் குறிப்பாக இலங்கை பற்றியதுமான நவீன வரலாறு என்பது 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே எழுதப்பட்டது.

பெரும்பாலான வரலாற்றாசிரியர்களும் சமூகவியலாளர்களும் பிரித்தானிய அல்லது ஆதிக்க நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். பிரித்தானியர்களின் ஒரே நோக்கம் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்வதாகவே இருந்தது. இதனால் சமூகவியலாளர்களும் வரலாற்றாசிரியர்களும் நாடுகளின் வரலாற்றுப் போக்குத் தொடர்பான சரியான பார்வையைக் கொண்டிருக்கவில்லை என்பது மட்டுமல்லாது பிரித்தானிய ஏகாதிபத்திய ஆதரவு அறிவுஜீவிகளினாலும் அதன் கல்வி மற்றும் ஆய்வுமுறையாலும் காலனி ஆதிக்க நலன்களுக்காக மட்டும் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளையும் தத்துவங்களையுமே தமது ஆய்வுகளின் ஆதாரமாகக் கொண்டிருந்தனர்.

இதன் அடிப்படையிலிருந்தே 6ம் நூற்றாண்டின் சமூகப் பகைப்புலத்தை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட மகாவம்சம் பிரித்தானிய ஆட்சியாளர்களால் பாளி மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு இந்த இரு இனங்களுக்கும் இடையேயான முரண்பாடு கூர்மைப்படுத்தப்பட்டபோது இதற்கெதிரான கருத்தாக்கங்கள் எழுந்திருக்கவில்லை.

ஆனால் இந்த மகாவம்சம் என்பது சிங்கள மக்கள் மத்தியில் அடிப்படைவாதக் கருத்தை உருவாக்குவதற்கும் பௌத்த அடிப்படை வாதப் (sect) பாணியிலான விகாரைகளை ஆதாரமாகக் கொண்டு இனவாத அரசியலை வளர்த்து நாட்டைக் குட்டிச்சுவராக்குவதற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை கறுவா விளையும் நாடாகையால் கறுவாவின் சமஸ்கிருதுப் பெயரான சிங்கலெ (Sinhale) என்பதே சிங்களமாக மருவியிருப்பதாகப் பொதுவாகப் பல நவீன வரலாற்றாசிரியர்கள் ஒத்துக்கொள்ளும்போது சிறீலங்கா பள்ளிப் பாடப் புத்தகங்களி லிருந்து அரச ஆய்வாளர்கள் வரை மகாவம்சத்தின் மாயாவிக் கதைகளை ஆதாரம் காட்டி சிங்கத்தின் வம்சாவளியினரே சிங்களவர் எனக் குறிப்பிடும் அளவிற்கு இந்த அடிப்படைவாதம் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப் பட்ட பௌத்த அடிப்படைவாதமும் அதனால் எழுந்த தமிழ்த் தேசிய வெறியும் மொத்த நாட்டையும் சீரழித்துக்கொண்டிருக்கும் இன்றைய நிலைக்கும் ஆரம்பகால பௌத்த மதத்திற்கும் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை.

இலங்கையில் பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்ட காலத்தில் தென்னிந்தியாவின் காஞ்சிபுரம் என்ற நகரமே பௌத்துப் பள்ளிகளின் மத்தியபீடமாக அமைந்திருந்தது. தென்னிந்தியத் தமிழ் மதகுருக் களான தர்மபால தேரர், தர்மதேவர், திக்குநாகர் போன்றோர் வட இந்தியாவில் நாலந்த பல்கலைக்கழகத்திற் கற்பித்தனர்.

இலங்கை முழுவதும் பரவியிருந்த பௌத்தம் வட இலங்கை யிலும் பரவி வலுப்பெற்றிருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படு கின்றன. கி.மு. 3ம் நூற்றாண்டிற்கான வடபகுதியிலுள்ள கந்தரோடை என்னுமிடத்தில் கிடைக்கப்பெற்றுள்ள பிரமி எழுத்துச் சாசனங்களும் பௌத்தச் சின்னங்களும் இப்பகுதிகளில் பௌத்தமதம் நிலை கொண்டிருந்ததற்கான ஆதாரங்களாகக் காணப்படுகின்றன.

இதே காலப்பகுதியில் இலங்கையின் வடபகுதியில் உள்ள வல்லிபுரத்தில் கிடைக்கப்பெற்றிருக்கும் தொல்லியல் ஆய்வுகளும் பௌத்தத்தின் இருப்பை நிர்ணயிக்கின்றன.

இதே காலப்பகுதியில் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் பரந்து வாழ்ந்ததற்கான ஆதாரங்களாகப் பிராமிக் கல்வெட் டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று அனுராதபுரத்தில் உள்ள Tamil House Holders terrace inscription ஆகும்.

இதுபோன்று வேறுபட்ட ஆதாரங்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பௌத்த மதம் பரவியிருந்ததையும் அதே நேரத்தில் தமிழ் மொழி பேசப்பட்டதையும் நிரூபிக்கின்றன. தவிர 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் சிங்கள மொழி பேசப்பட்டதற்கான எந்த நம்பகரமான வரலாற்றாதாரங்களும் காணப்படவில்லை.

மேலும் இலங்கையில் இயக்கர்கள், நாகர்கள் என்ற இரு குழுக்கள் இருந்ததாகவும் இயக்கர்கள் எலு மொழியையும் நாகர்கள்

படிப்பகம்

www.padippakam.com



தமிழையும் பேசியதாகவும் எலு மொழி பாளியுடன் கலந்து சிங்கள மொழியாக மாறியதாகவும் ஒரு கருத்து உள்ளது. ஆனால் எலு பாளியுடன் கலந்ததற்கும் அது சிங்களமாகப் பரிணாமம் அடைந்ததற்கும் எந்தவொரு தர்க்கரீதியான வரலாற்று ஆதாரங்களும் காணப்படவில்லை.

முன்னரே குறிப்பிட்டது போல தென்னிந்தியாவில் 6ம் நூற்றாண்டில் எழுந்த புராண காலத்து பௌத்த இந்து முரண்பாடு ஊடாக உள்வாங்கப்பட்ட மகாயான பௌத்தம் கிபி 3ம் நூற்றாண்டளவிலேயே இலங்கையிலும் பிரிவினைகளை ஏற்படுத்தியிருந்த போதிலும் அதன் முரண்பாடு 6ம் நூற்றாண்டிலேயே உச்சநிலையை அடைந்திருந்ததாக மகாவம்சம் காட்டிநிற்கின்றது.

முதன்முதலில் கிபி 3ம் நூற்றாண்டளவில் மகாயான பௌத்தம் அரச அளவில் இலங்கையில் பரப்பப்பட்டது. தென்னிந்தியாவைச் சேர்ந்த சங்கமித்தர் என்ற தமிழ் பௌத்தத் துறவியொருவர் இலங்கை அரசனான மகாசேனனை 3ம் நூற்றாண்டின் இறுதியில் வட இலங்கைத் துறைமுகத்தில் சந்தித்து மகாயான பௌத்தத்திற்கு அவனை மாற்றினார்.

பௌத்தக் கொள்கைகள் இலங்கையில் அறிமுகம் செய்யப் பட்டபோது (கி.மு.221-கி.மு.207) புத்த சமயத்தைப் போதிக்கும் பீடங் களாக இருந்தவை அனுராதபுரத்தில் இருந்த மகா விகாரையும் அபய கிரி விகாரையுமாகும். மகா விகாரையில் பாளி மொழியிலும் அபயகிரி விகாரையில் தமிழ் மொழியிலும் பௌத்த மதம் போதிக்கப்பட்டது. சிங்கள மொழியில் பௌத்த மதம் போதிக்கப்பட்டதற்கான ஆதாரமோ சிங்கள மொழியின் மறுபாகமாகக் கருதப்படும் எலு மொழியில் பௌத்தக் கொள்கைகள் பரப்பப்பட்டதற்கான ஆதாரங் களோ இல்லை.

தமிழ்நாட்டில் பௌத்த மதம் தமிழிலேயே போதிக்கப்பட்ட தால் அபயகிரி விகாரை மகாயான பௌத்தத்தின் தாக்கத்துக்குட் பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்த மகாயான பௌத்தம் என்பது தமிழில் போதிக்கப்படும் பௌத்தம் என்ற கருத்தும் வளரத் தொடங்க தேரவாத பௌத்தம் பாளி மொழியினூடாக விரிவடையத் தொடங்கியது.

முன்னமே குறிப்பிட்டது போல தென்னிந்தியாவின் தொடர்ச்சி யான நிலையற்ற படையெடுப்புகளுக்கு எதிரான தத்துவார்த்த வடிவமாக தேரவாத பௌத்தம் மாறத் தொடங்கியது.

பௌத்த பிரிவுகளுக்கிடையிலான முரண்பாடுகள் விரிவடையத் தொடங்க தேரவாத பௌத்தத்தைப் பாதுகாத்துக்கொள்ள அது

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் உருவாகிய நிலப்பிரபுத்துவ அதிகாரச் சக்திகளின் ஆதரவுடன் பாளி மொழியூடாக கிராமங்கள்தோறும் பரவியது. பிற்காலத்தில் பாளி மொழிக் கலப்பினூடாக தமிழ் மொழி சிங்களவர்களின் சிங்கள மொழியாக மாறியது என்ற வாதம் இதனால்தான் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

தமிழ் மொழியில் வேதத் தத்துவப் பரவலூடான சமஸ்கிருதக் கலப்பிலிருந்து கன்னடம், துளு முதலிய மொழிகள் உருவானது போன்று பாளி மொழியின் நேரடிக் கலப்பால் உருவானதுதான் சிங்கள மொழி என்பதற்கு சிங்கள மொழியின் இலக்கண அமைப்புமுறை தென்னிந்திய மொழிகளை ஒத்திருப்பது இன்னொரு காரணம் என மொழியியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மறுபுறத்தில் தொடர்ச்சியான தென்னிந்தியப் படையெடுப்பி னூடாக வடபகுதியில் தமிழும் இந்து மதமும் நிலைபெற்றுக்கொண் டது. ஒரு புறத்தில் பலம்மிக்க தென்னிந்தியப் படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக இலங்கை இராசதானிகள் அனுராதபுரம், பொலந்நறுவை, தம்பதெனியா எனத் தெற்கு நோக்கி நகர்ந்து தம்மை வலுப்படுத்திக்கொள்ள முடிந்தது.

கி.பி. 6ம் நூற்றாண்டு வரை சிங்களம் என்ற மொழி பேசப் பட்டதற்கான ஆதாரம் எங்கும் காணப்படவில்லை.

பிற்காலப் பகுதியில் தென்னிந்தியப் பகுதியில் இருந்தும் பொதுவாக தூத்துக்குடி போன்ற இடங்களில் இருந்தும் மலாய் குடியேற்றங்களும் சிங்கள இனத்துடன் இணைந்தன. தவிர ஒல்லாந்தர் போர்த்துக்கேயரின் கலப்பினூடாகவும் சிங்கள தேசிய இனம் உருவானதாக வரலாறு குறிப்பிடுகின்றது.

12ம் நூற்றாண்டுக் காலப் பகுதிவரை சிங்கள மொழியின் உபயோகம் சிறிதளவிலேயே காணப்பட்டது. தமிழ்சிங்களம் என்ற மொழி ரீதியான முரண்பாடு இருந்ததற்கான வரலாற்று ஆதாரங்களை யாரும் குறிப்பிட்டதில்லை.

17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டி அரசனால் சிறைப் பிடிக்கப்பட்ட Robert Knox என்ற ஆங்கிலேயர் அங்கிருந்து தப்பி வடக்கு நோக்கிச் சென்றபோது அனுராதபுரத்தை அடைந்தார். பின்னர் 1681இல் A Historical Relation of the Island of Ceylon என்ற நூலை அவர் வெளியிட்டார். இந்த நூலில் அனுராதபுரத்தை அடைந்த Robert Knox அந்த மக்களுக்குச் சிங்களம் விளங்கவில்லை என்றும் அவர்கள் தலைவனிடம் தான் கூட்டிச்செல்லப்பட்டபோது அவனுடன் உரையாடுவதற்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவி தேவைப்பட்டது என்றும் அங்கிருந்தவர்கள் பேசிய மொழி தமிழ் என்றும் எழுதியிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் பௌத்த மதத்தின் பிறப்பிடமாகக் கருதப்படும் அனுராதபுரத்திலேயே சிங்கள மொழி பரந்தளவில் பேசப்படாது இருந்திருக்குமானால் இந்த மொழியின் பரந்துபட்ட வளர்ச்சி என்பது மிகவும் அண்மைக் காலத்துக்குரியது என்று புலனாகின்றது.

எது எவ்வாறாயினும் இன்று சிங்கள தேசிய இனம் பரந்து வாழும் நிலப்பரப்பு சிங்கள தேசத்தின் நிலப்பரப்பேயாகும். அவ்வாறே தமிழ்த் தேசிய இனத்தின் நிலப்பரப்பு அவர்கள் பரந்து வாழும் பிரதேசங்களேயாகும். இந்தத் தர்க்கவியல் ஆய்வின் நோக்கம் நிலப் பிரிப்பு அல்ல. வரலாற்று ரீதியாக தமிழ்சிங்களம் என்ற மொழிப்பிரச்சினையோ தமிழ் பௌத்தர்கள்-சிங்கள பௌத்தர்கள் என்ற பகையோ இருந்திருக்கவில்லை என்பதை நிறுவுவதே. நிலப் பிரபுத்துவ சமூகத்திற்கே உரித்தான மதங்களிடையேயான முரண் பாடு என்பது பிற்காலத்தில் பிரித்தானிய காலனி ஆதிக்கவாதிகளின் சொந்த நலனுக்காகத் தந்திரமான முறையில் தூண்டிவிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# 7

## குடியேற்ற ஆதிக்கமும் பிரித்தாளும் தந்திரமும்

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தரின் ஆதிக்கத்திலிருந்த இலங்கை 18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் கைக்கு மாறத் தொடங்கியது. ஒல்லாந்தர்களிடமிருந்து பெரியளவில் எதிர்ப்பு எதுவும் இல்லாமலேயே ஆங்கிலேயர்கள் நாட்டைத் தம்வசம் கொண்டுவந்தனர். இதன் அடிப்படை சமூகத்தின் அடிக்கட்டுமானத்தில் ஏற்பட்ட மாறுதலில் இருந்தே உருவானது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்புமுறை நிலவியபோது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால் தொழிற் புரட்சி ஏற்படத் தொடங்கிய போது உற்பத்தி உறவுகளில் தேவைப்பட்ட மாற்றத்தின் அடிப்படையிலிருந்தே மூலதனம் உருவானது. சந்தைப் பொருளாதாரம் உருவானது. முதலாளித்துவ சமூக அமைப்புமுறை உலகுக்கு அறிமுகமானது. இந்த வளர்ச்சிப் போக்கு நிலப்பிரபுத்துவ அமைப்பு முறைக்குச் சாதகமாக அமைந்திருந்த இயல்பான இயற்கை வளங்களைக் கொண்டிருந்த ஆசிய நாடுகளைவிட இயற்கைக்கெதிரான போராட்டங்களை வாழ்க்கை முறையினூடாகவே நடத்த வேண்டியிருந்த ஐரோப்பிய நாடுகளில் சற்று முன்னதாகவே நிறைவேறியது.

மேலும் துருக்கியுடான வியாபாரப் பாதை மூடப்பட்டபோதெழுந்த தேவையும் இதன் வேகத்தை ஐரோப்பாவில் அதிகரித்து இந்தியா போன்ற நாடுகளில் மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியபோது மக்களின் தேவைகள் வேறுபடத் தொடங்கிய போது தொழிற் புரட்சிக்கான ஆரம்பநிலை காணப்பட்டபோது மேற்கு நாடுகளால் இது சீரழிக்கப்பட்டு சிதைக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பு வன்முறையினூடாகச் சிதைக்கப்பட்டு மொத்த தேசமும் சூறையாடப்பட்டது. ஒரு புறத்தில்

படிப்பகம்

www.padippakam.com



இயல்பான வளர்ச்சி அழிக்கப்பட்டதுடன் மறு புறத்தில் அந்நிய மூலதனத்தால் அது நிரப்பப்பட்டது.

ஒல்லாந்தர் ஆட்சி இலங்கையில் நிலவியபோது நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையும் மன்னராட்சியும் சிதைக்கப்பட்டதால் நிர்வாகம் அங்கு சீர்குலைந்துபோனது.

போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் எந்தவிதமான பரிணாம வளர்ச்சியுமின்றித் தமது சொந்த நலன்களுக்காக நிர்மூல மாக்கப்பட்ட மன்னர் ஆட்சிமுறை மறுபடி அவர்களால் கட்டி யமைக்கப்பட முடியாத ஒன்றாகவே அமைந்தது. வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறையைக் கட்டியெழுப்ப ஒல்லாந் தரிடமும் போதிய இராணுவ பலமோ அதற்கான தந்திரோபாய அடிப்படையோ இருக்கவில்லை. இதனால் இந்த நிர்வாகச் சீர்குலைப்பிற்குப் பின்னால் எழுந்த மாற்றங்களைத் தடுப்பதற்காக அவர்கள் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவும் தமது குடியேற்ற நாடுகளின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அதனூடாக நிர்மூலமாக்கவும் முனைந்தனர். இவற்றினூடாக ஒருங்கிணைந்த நிர்வாக அமைப்பு முறையைக் கட்டியெழுப்புவதில் தோல்வி கண்ட ஒல்லாந்தர்கள் தமது இராணுவக் கூலிப்படைகளுக்காகப் பெருந் தொகையான பணத்தைச் செலவிட வேண்டிய நிலையில் குடியேற்ற நாடுகளிடமிருந்து போதியளவு வருமானம் பெற முடியாமல் போனது. இறுதியாக தமது குடியேற்ற நாடுகளைப் பெரியளவில் எந்தவித எதிர்ப்புகளுமின்றி ஆங்கிலேயர்களிடம் கையளித்தனர்.

நிலப்பிரபுத்துவ அடிக்கோப்பு அமைப்பானது பரிணாம வளர்ச்சியின்றி வன்முறையால் சீரழிக்கப்பட்டதைத் தொடர்ந்து உருவான சமூக மாற்றத்தைச் சமாளிப்பதற்கும் அதனூடான சுரண்டலைத் தீவிரப்படுத்தவும் ஆங்கிலேயரின் தந்திரோபாயம் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடைமுறைக்கு வரத் தொடங்கியது.

பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில்கூட பயன்படுத்தப்படாத ஆங்கிலேய அரசியல் தந்திரோபாயமுறை மொத்த தேசத்தையும் ஆங்கிலேயர் இலாபமீட்டக்கூடிய வகையில் ஒழுங்கிற்குக் கொண்டுவந்ததுடன் மட்டுமல்லாது அந்தந்த நாடுகளிலுள்ள சமூகப் பொருளாதார அரசியல் வாழ்வில் பாரிய மாற்றங்களையும் ஏற்படுத் திற்று. இதே வகையான ஏற்றுமதி செய்யப்பட்ட அரசியல் பொருளாதார சமூக வாழ்வுமுறை மற்றைய குடியேற்ற நாடுகளைப் போல இலங்கையிலும் நீண்டு தொடரக்கூடிய தொடர்ச்சியான பாதிப்புகளை ஏற்படுத்திற்று.

1815இல் கண்டி ராஜ்யம் ஆங்கிலேயரின் பிடிக்குள்ளே வந்த துடன் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் அதிகாரத்திற்கு உட்

www.padippakam.com



பட்டிருந்தது. இதன் பின்னர் சீரழிக்கப்பட்ட நிலப்பிரபுத்துவ நிர்வாக அமைப்பு முறையைப் பிரதியீடு செய்வதற்காக ஆங்கிலேயர் மத்திய நிர்வாகத்திற்கான அமைப்புகளை உருவாக்கத் தொடங்கினர்.

1828இல் மேஜர் கோல்புரூக்கின் வழிகாட்டலின் கீழ் இலங்கையினது நிர்வாகத்தை ஆராய்வதற்காக ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

1829இல் கோல்புரூக்கும் 1830இல் கமறோன் என்பவரும் இதன் நோக்கமாக இலங்கைக்கு வந்தனர். இலங்கை தொடர்பாக மூன்று பிரதான அறிக்கைகளை இவர்கள் பிரித்தானிய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தனர்.

1. நிர்வாகம் பற்றியது
2. வருமானம் பற்றியது
3. நிதித்துறை பற்றியது

இந்த ஆய்வினை ஏற்றுக்கொண்ட பிரித்தானிய பாராளுமன்றம் புதிய வகையான நிர்வாக அமைப்புமுறை ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதற்குச் சம்மதித்தது. இதன் முதற்படியாக 1833இல் முதலாவது நிர்வாகசபை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் சபையில் ஐந்து ஆங்கிலேய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இதில் ஆறு உத்தியோகப் பற்றற்ற உள்ளூர் உயர்வகுப்பைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த உயர்வகுப்பினர் பெரும் நிலங்களைச் சொந்தமாக வைத்திருந்த, எதிர்காலச் சமூக மாற்றங்களுக்கு முகம் கொடுத்து எதிர்கொள்ளக்கூடிய நிலப்பிரபுக்களாவர்.

மேலும் இலங்கை ஐந்து மாகாண சபைகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் அரசாங்க அதிபர்களின் ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டுவரப்பட்டது.

இறுதியாக முழு இலங்கையும் ஒரே மத்தியத்துவப்படுத்துப்பட்ட நிர்வாகத்துக்குக் கீழ் கொண்டுவரப்பட்டது. மாகாணங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவை உதவி அரசாங்க அதிபர்களால் நிர்வாகிக்கப்பட்டன. அரச அதி ர்கள் யாவரும் பிரித்தானியர்களாக இருந்ததுடன் அவர்களின் உதவியாளர்கள் பிரித்தானிய விசுவாசிகளாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்ட தேசாதிபதி தனது நிர்வாக சபை உறுப்பினர்களினூடாகவும் அரச அதிபர்களினூடாகவும் முழு நாட்டையும் கொழும்பில் இருந்தவாறே நிர்வகித்தார்.

உள்நாட்டவரும் ஐரோப்பியரும் அங்கத்தவர்களாக இருந்த சட்டசபைகள் நாட்டின் நிர்வாகத்தை மத்தியப்படுத்தவும் விரிவாக்கவும் வசதியாக இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



நிலப்பிரபுத்துவ நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்ட பின்னர் உருவான சமூக மாற்றத்தின் விளைவுகளைச் சந்தித்து குடியேற்ற நாடுகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு ஆங்கிலேயர்களுக்கு இவ்வகையான கட்டமைப்பு அவசியமாகியது.

உள்ளூர் நிலப்பிரபுத்துவ மேலணிகளுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட இந்த நிர்வாக அமைப்புக்குப் பின்னதாக இயல்பான சமூக பொருளாதார மாற்றங்கள் உருவாகின.

அங்கு வர்த்தகப் பொருளாதார வளர்ச்சிக்கான சூழல் உருவாகியதுடன் புதிய மூலதனத்தைக் கையாளும் வலிமையுள்ள மத்தியதர வர்க்கம் ஒன்றும் உருவாக ஆரம்பித்தது.

வர்த்தகப் பயிர்ச்செய்கை நாடு முழுவதும் பரவி வளர ஆரம்பித்தது. புகையிலை, வெங்காயம், மிளகாய், ஆமணக்கு, நிலக்கடலை போன்ற பணப் பயிர்ச்செய்கை வகைகள் அதிகரித்தன.

1851ம் ஆண்டில் 10000 ஏக்கர் நிலம் புகையிலைச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது. மர வியாபாரம் அதிகரித்தது. ஏற்றுமதிப் பொருளாதாரம் வளர ஆரம்பித்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 1844இல் இருந்து 1873ஆம் ஆண்டு வரை விற்கப்பட்ட மரங்களின் மதிப்பு 1954537.00 ரூபாய்களாகும்.

இதே காலப்பகுதியில் தங்க வேலை, கொல்ல வேலை, தச்சு வேலை போன்ற பாரம்பரிய வினைத்திறன் கொண்ட வேலைகள் அமைப்புமயப்படுத்தப்பட்டு நவீனமடையத் தொடங்கின. தையல், நெசவு, சாயமிடுதல் போன்ற ஏனைய தொழிற்துறைகளும் வளர்ச்சியடையத் தொடங்கின. இந்தியாவிலிருந்து துணி இறக்குமதி செய்யப்பட்டு சாயமிடப்பட்ட பின்னர், வேறு நாடுகளுக்கு அவை ஏற்றுமதி செய்யப்பட்டன. கோப்பி தேயிலை போன்ற பணப் பயிர்ச்செய்கையுடன் கூடவே சிங்களப் பகுதிகளிலும் சந்தைப் பொளாதார அமைப்பு முறை வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அதனால் புதிய உற்பத்தி உறவுகள் உருவாகின. போக்குவரத்து முகவர்களை உருவாக்கியது. மேலும் தரகர்கள், ஒப்பந்தக்காரர்கள், வியாபாரிகள், தொழிற்சாலை உரிமையாளர்கள் என்று தேசிய சந்தையின் பங்காளர்களையும் அது உருவாக்கியது. சமூகத்தின் மேற் கட்டுமானத்தின் பல கூறுகள் மாறத் தொடங்கின. குறிப்பாகப் புதிய பொருளாதாரத்தின் கீழ்நிலையில் இருந்த மீன்பிடிக்கும் இனத்தைச் சேர்ந்த கராவ சாதியினரும் கறுவாத் தொழிலாளர்களான சலகம சாதியினரும் மேல்நிலைக்கு வர ஆரம்பித்தனர்.

ஆங்கிலேயர்கள் மட்டுமே நாட்டின் நிர்வாகத் துறையில் இருந்த நிலைமையும் படிப்படியாக மாற்றமடையத் தொடங்கியது.

படிப்பகம்

www.padippakam.com



புதிய படித்த மத்தியதர வர்க்கமொன்று அரச நிர்வாகத் துறைக்குள் புகுந்துகொள்ள ஆரம்பித்தது. இதில் பெரும்பாலானவர்கள் சிங்கள கராவ இனத்தைச் சார்ந்தவர்களும் தமிழர்களுமாவர். குறிப்பாக வடகிழக்கு இலங்கைத் தமிழர்கள் மத்தியில் கல்வி என்பது பிரதான முதலீடாக எண்பதுகளின் பிற்பகுதி வரை காணப்பட்டது.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு வடக்குகிழக்கு இலங்கை உகந்த இடமாகக் கருதப்பட்டமையாலும் புவியியல் சீதோஷ்ண நிலைமைகளாலும் இந்த ஆரம்பகால மாற்றங்களால் இப்பகுதிகள் பெரிதும் பாதிப்படையவில்லை. இதன் விளைவாகத் தென் பகுதியில் ஏற்பட்ட வேகமான சமூக மாற்றம் வடகிழக்கில் ஏற்படவில்லை யானாலும் வியாபாரப் பயிர்ச்செய்கையும் கல்வி கற்ற நிர்வாகிகளின் வரவும் சமூகத்தின் அமைப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பித்தன.

இந்தப் படித்த தமிழ் சிங்கள நிர்வாகத் துறையைச் சுற்றி புதிய மத்தியதர வர்க்கம் உருவாக ஆரம்பித்தது. வைத்தியத் துறை நவீனமயப்படுத்தப்பட்டதனூடாகப் புதிய வைத்தியர்களும் அதைச் சுற்றிய வியாபாரமும் உருவானது. இந்த வைத்தியர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களே. கல்லூரிகள், கல்வித்துறை ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் என மொத்த நாட்டின் பொருளாதாரமுமே இன்னொரு புதிய மாற்றத்திற்கு உள்ளாகிக்கொண்டிருந்தது.

இந்த ஆரம்ப மாற்றங்கள் தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அத்திவாரமாக அமையக்கூடிய மாற்றங்களே. இவ்வாறான சமூக இயக்கமே மேற்கு நாடுகளின் முதலாளித்துவ உருவாக்கத்தின் ஆரம்பமாக அமைந்திருந்தது.

இவ்வாறான சமூக மாற்றங்களையும் சுய பொருளாதார உருவாக்கத்தையும் கண்டு பிரித்தானிய காலனி ஆதிக்க அரசு அச்சமடைய ஆரம்பித்தது. தேசியப் பொருளாதார உருவாக்கத்திற்கெதிரான எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டிக்கொண்ட பிரித்தானிய அரசு தேசிய மூலதன வளர்ச்சியினால் அச்சமடைந்திருந்த நிலப்பிரபுக்களுடன் சமரசம் செய்துகொண்டது.

எந்த நாட்டிலும் முதலாளித்துவ மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் பரம்பரை நிலப்பிரபுக்கள் புதிய மாற்றங்களுக்கு எதிரானவர்களாகவே இருந்தனர். தேசிய மூலதன உருவாக்கம் என்பது அடிப்படையில் நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையை நிர்மூலம் செய்து முதலாளித்துவ பொருளாதார அமைப்புமுறையை நிலைநிறுத்தும் இவ்வாறான முதலாளித்துவ சக்திகளுக்கும் நிலப்பிரபுத்துவ அமைபபின் அதிகார சக்திகளான நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான போராட்டம் தேசிய மறுமலர்ச்சிக்கான போராட்டமாக உருவெடுத்தபோது அதே தேசிய

படிப்பகம்

www.padippakam.com



மறுமலர்ச்சிக்கெதிரான பிரித்தானியக் காலனி ஆதிக்க அரசு இந்த நிலப்பிரபுக்களைத் தமது நம்பிக்கைகுரிய பிரதிநிதிகளாகக் கண்டது. தமது அந்நிய மூலதன ஆதிக்கத்தினூடான லாபத்தை நிலப்பிரபுக் களுடன் பங்குபோட்டுக்கொண்டு அவர்களைத் தமது தரகர் களாக்கியது.

இதனால் ஒரு புறத்தில் உள்நாட்டிலேயே தமது விசுவாசிகளை உருவாக்கிக்கொண்ட ஆங்கிலேய அரசு மறுபுறத்தில் தமது அந்நிய மூலதனத்தையும் அதன் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக்கொண்டது.

இதன் விளைவாக சமூகம் ஒரு புதிய சிக்கலான மாற்றத்தையும் சீரழிவையும் சந்தித்தது. தரகு முதலாளித்துவ வர்க்கம் என்ற ஒரு சமூக அணி உருவானது. அதே நேரத்தில் நிலப்பிரபுத்துவத்தின் ஆதிக்கமும் முற்றாக அழிந்துவிடவில்லை. முதலில் தரகு முதலாளி களாக உருவான இந்த நிலப்பிரபுக்களே தமது நிலப்பிரபுத்துவ நேச அணிகளையும் அதன் கட்டமைப்பையும் பாதுகாத்தனர். இவர்களே காலனி ஆதிக்க பிரித்தானிய அரசுடன் இணைந்து நாட்டின் சுய பொருளாதாரத்தைச் சீர்குலைத்தனர். தமது சொந்த நாட்டையே அந்நியர்கள் சுரண்டுவதற்கு உறுதுணையாகினர்.

படிப்படியாகப் பிரித்தானிய அரசு தமது தேவைக்கேற்ப நாட்டை அடக்கியாளவும் மூலதன உருவாக்கத்தைத் தடுக்கவும் தேவையான அதிகாரிகளாக நிலப்பிரபுத்துவ மேலணிகளைப் பயன் படுத்தி புதிய உள்ளூர் அதிகார வர்க்கத்தை உருவாக்கினர். இவர்கள் தான் நாட்டின் எதிர்காலப் பிரதம மந்திரிகளாகவும் ஜனாதிபதி களாகவும் மாறினர்.

இந்த அதிகார வர்க்கத்தை நிலப்பிரபுக்களில் இருந்து உருவாக்கும் முதற்கட்டமாகத் தமது நிர்வாக அமைப்புக்களின் உயர் மட்டத்தில் இவர்களை இணைத்துக்கொள்ளத் திட்டமிட்டனர்.

1840ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட லண்டனில் நடத்தப்பட்ட தேர்வுப் பரீட்சையூடாக இந்த நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். பணம்படைத்த பெருநிலப் பிரபுக்களைச் சார்ந்தவர்கள் மட்டுமே தோற்றக்கூடியதும் தாய்நாட்டுக்கு வெளியில் நடத்தப்பட்டதுமான இந்தத் தேர்வுப்பரீட்சை கறுப்புத் தோல் வெள்ளையர்களை உருவாக்குவதற்கு பிரித்தானிய அரசு மேற்கொண்ட முயற்சியின் முதற்கட்டமாகும்.

மறுபுறத்தில் உருவாகி வளர்ந்துகொண்டிருந்த தேசியப் பொருளாதாரமும் மத்தியதர வர்க்கமும் பிரித்தானிய காலனிய அரசுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிரான தேசிய உணர்வு கொண்டவைகளாக இருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவாக நிலத்தின் விலை அதிகரித்தது. பல மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த இலங்கையர்கள் நிலமற்றவர்களாயினர். இவர்கள் தொழிலுக்காக நகரங்களை நோக்கி நகர்ந்தனர். வியாபாரப் பொருளாதாரத்துடன் தம்மை இணைத்துக்கொள்ளத் தலைப்பட்டனர்.

இதனால் இந்தப் புதிய தேசிய உணர்வுகொண்ட மத்தியதர வர்க்கத்திற்கும் நிலப்பிரபுத்துவ தரகர்களுக்கும் இடையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் போராட்டங்கள் உருவாகின.

தேசியப் பொருளாதாரத்தையும் முதலாளித்துவ உருவாக்கத்தையும் விரும்பிய சந்தைப் பொருளாதார அமைப்புமுறையுடன் தன்னை இணைத்துக்கொண்ட தேசிய உணர்வுகொண்ட மத்தியதர வர்க்க மேலணிகளும் அதன் உறவு சக்திகளும் தேசிய வளர்ச்சிக்கு எதிரான அந்நியர்களின் தரகர்களை எதிரிகளாகக் கண்டது. இதனால் போராட்ட அமைப்புகள் ஆங்காங்கே உருவாகின.

சாராம்சத்தில் இந்த நிலைமையானது ஒரு சுற்றுவட்டம் போலத் திகழ்ந்தது. ஒரு தேக்க நிலைக்கு மொத்தப் பொருளாதார அமைப்பையும் இட்டுச்சென்றதுடன் தேசிய மூலதன உருவாக்கத்தையும் தடுத்து நிறுத்தியது.

ஒரு புறத்தில் சந்தைப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் மறு புறத்தில் அதற்கு எதிரான அந்நிய மூலதனத்தின் ஆதிக்கமும் அதன் உள்ளூர் தரகர்களும் நிலப்பிரபுத்துவ எச்ச சொச்சங்களும் தேசியப் பொருளாதாரத்தை வளர்க்க முயன்ற மத்தியதர வர்க்க அணிகளுமான உற்பத்தி உறவுகளிடையே ஒரு சிக்கலான கட்டமைப்பு உருவாகியது.

அந்நிய மூலதனமும் அதன் தரகர்களாக உருவாகிய நிலப்பிரபுக்களும் மொத்த சமூகத்திற்குமே எதிரிகளாயினர். முன்னூறு ஆண்டுகளாக அந்நியர்களால் சூறையாடப்பட்ட நாடு மறுபடியும் அவர்களின் தரகர்களின் கைகளில் அகப்பட்டது. நாட்டின் முழு நிர்வாகமும் இவர்களின் கைகளில் படிப்படியாக ஒப்படைக்கப்பட்டது.

இந்த மூலதனச் சுரண்டலால் ஏற்பட்ட பணத்தில் ஏகாதிபத்திய நாடுகள் தமது நாடுகளை செல்வம் கொழிக்கும் நாடுகளாக்கியதுடன் தமது நாடுகளில் சமூக உதவித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தினர்.

வன்முறைப் போராட்டங்களாக இந்தியா முழுவதும் ஏற்பட்ட தேசியப் போராட்டங்களின் உணர்வலைகள் இலங்கை போன்ற ஏனைய நாடுகளிலும் தேசிய சக்திகள் மத்தியில் எதிரொலிக்க ஆரம்பித்தன.

படிப்பகம்

www.padippakam.com



இது புதிய சிக்கலான சூழ்நிலை ஒன்றை ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசுக்கு ஏற்படுத்தியது.

இந்நிலையில்தான் ஆங்கிலேயரால் குடியேற்ற நாடுகளில் ஏற்கெனவே இருந்து வந்த அழிந்துகொண்டிருந்த நிலப்பிரபுத்துவ கால முன்னேற்பாடுகள் தூண்டிவிடப்பட்டன.

ஆரியர் திராவிடர் என்ற தத்துவக் கோட்பாடு இங்கிலாந்தில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டது. இவ்வாறான தத்துவார்த்த விளைவுகள் மேலை நாடுகளில் மேற்படிப்பை மேற்கொண்ட காலனி நாட்டுக் கல்வியாளர்களின் உதவியுடன் உள்நாடுகளில் பரவப்பட்டன. திட்டமிடப்பட்ட இவ்வாறான முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் முயற்சியானது எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் அந்தந்த நாடுகளின் சமூகப் புறச் சூழ்நிலைக்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தியாவிலும் இலங்கையிலும் பிரித்தாளும் நோக்குடன் இவர்களால் உருவாக்கப்பட்ட ஆரியத் தத்துவமானது ஜேர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லர் வரை சென்று முழு உலகத்தையுமே சீர்குலைத்தது.

படிப்பகம்

www.padippakam.com

# 8

## ஆரியர் தத்துவம்

ஆரியர் திராவிடர் என்ற கருத்து முதன்முதலில் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானிய கல்வித்துறையினரால் முன்வைக்கப்பட்டது. பிரித்தானியா இந்தியாவை ஆட்சிசெய்த காலப்பகுதியில் சமஸ்கிருதத்திற்கும் முக்கியமான ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளன என முன்வைக்கப்பட்ட கருத்தில் இருந்து உருவானதே இந்தத் தத்துவம்.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் தனது ஆதிக்கத்தை விரிவாக்கிச் சென்ற காலத்தில் எழுந்த மூர்க்கத்தனமான எதிர்ப்புகளைச் சமாளிக்க முடியாமல் பிரித்தானிய ஆதிக்கவாதிகள் திண்டாடினர்.

இந்நிலையில் ஐரோப்பிய வெள்ளை இனத்தின் மேலாதிக்கத்தை நியாயப்படுத்த வேண்டிய தேவை பிரித்தானியாவிற்குள்ளும் இந்தியாவுக்குள்ளும் அவர்களுக்கு எழுந்தது.

அநாகரீகமான இந்தியர்களை நாகரீகப்படுத்தியவர்கள் வெள்ளை இனத்தவரே என்றும் இதனால் இந்தியாவில் தமது இருப்பு என்பது அதனை மேலும் செழுமைப்படுத்தி நாகரீகமடையச் செய்யும் என்றும் தம்மை நியாயப்படுத்த முயன்றனர். இதன் அடிப்படையில் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவில் இருந்த திராவிடர்களைக் கொன்றொழித்து முன்னேறிய நாகரிகத்தை இந்தியாவில் பரப்பியவர்கள் இந்த வெள்ளை இன ஆரியர்களே என்றும் இவர்கள் ஆரிய வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்ற கருத்தையும் பரப்பினர்.

மறுபுறத்தில் இந்தியாவை ஆரியர்கள் திராவிடர்கள் எனக் கூறுபடுத்தி ஆங்கிலேயர்களுக்கு எதிரான சக்திகளை ஒன்றிணைய விடாது தடுக்க முற்பட்டனர். இதன் விளைவாக இந்தியாவின் வட பகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையில் பல முரண்பாடுகள் எழுந்தன.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு புறத்தில் ஆட்சியாளர்கள் பிரித்தானிய மக்களின் மனச்சாட்சி அடிப்படையிலான எதிர்ப்பினை மட்டுப்படுத்தவும் மறுபுறத்தில் இந்தியாவைப் பிரித்தாளவும் இவர்களுக்கு ஆரியர் தத்துவம் உதவி புரிந்தது.

1857இற்குப் பின்னர் இந்தியக் கல்விமுறை ஆரியர் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு தமக்கு விசுவாசமான பிரதிநிதிகளை உருவாக்கு வதற்காக மட்டுமே வரையப்பட்டது. இந்த ஆரியத் தத்துவம் இந்தியா முழுவதும் படிப்படியாகப் பரவி இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு தார்மீக நியாயத்தை வலிந்து உருவாக்கிற்று.

கி.மு. 1500 வருடங்களில் வடக்கு ஐரோப்பியப் பகுதிகளில் இருந்து ஆப்கானிஸ்தான் ஊடாக இந்தியப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த வெள்ளைநிறமுடைய ஆரியர்கள் நாகரீகமடையாத பின்தங்கிய திராவிட ஆதிக் குடிகளை வென்று புதிய முன்னேற்றமடைந்த ஆரிய நாகரிகத்தை நிலைநாட்டினர் என்று கூறும் இந்தப் பிரித்தானியத் தத்துவம் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினூடாக இந்திய மக்கள் உருவாக்கிய பண்பாட்டையும் கலாச்சாரத்தையும்கூட ஐரோப்பியர் களினது எனப் பறைசாற்றிற்று.

ஐரோப்பிய மொழியியல் பார்வையின் அடிப்படையிலிருந்து உருவாகிய இந்தோஆரியத் தத்துவமானது இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் சொந்த நலனுக்காக மேலும் ஆழப்படுத்தப்பட்டு உலகெங்கும் விதைக்கப்பட்ட இந்தத் தத்துவம் ஆரம்பத்தில் ஐரோப்பிய மொழியியலின் தந்தை எனக் கருதப்பட்ட William Jones என்ற மொழியியல் அறிஞரால் முதலில் முன்வைக்கப்பட்டது. 1790களில் இவர் ஐரோப்பிய மொழிகளின் அடிப்படையான லத்தீன் மற்றும் கிரேக்க மொழிகள் சமஸ்கிருதத்தின் முக்கூறுகளுடன் ஒத்திருப்பதாகத் தனது கருத்தை முன்வைத்தார்.

அடிப்படையில் எல்லா மொழிகளுமே ஒரு மொழியின் மூலத்திலிருந்து பிறந்தவையே என்ற கருத்தை முன்வைத்த William Jones இன் கருத்துக்குப் பின்னர் பல மொழியியலாளர்களின் தொடர்ச்சியாக Carl Wilhelm Friedrich Schlegel என்ற பிரபல்யம் வாய்ந்த ஜேர்மன் மொழியியல் வல்லுநர் எல்லா மொழிகளினதும் மூலமானது இந்திய மொழிகளிலிருந்தே ஆரம்பிப்பதாக 1808இல் கூறிய கருத்தானது சிந்துவெளி நாகரீகத்தின் கண்டுபிடிப்பிற்குப் பின்னதாக மேலும் வலுப்பெற்றது.

இதே கருத்தையே சற்று முன்னதாக பிரஞ்சு தத்துவவிய லாளரும் மொழியியல் வல்லுநருமான Voltaireஉம் முன்வைத்தார். 1777ம் ஆண்டு Voltaire எழுதிய விஞ்ஞானத்தின் மூலக்கூறும் ஆசிய மக்களும் தொடர்பான கடிதங்கள் என்ற 1777 ஆம் ஆண்டு பாரிசில்

படிப்பகம்

www.padippakam.com



வெளியிடப்பட்ட நூலில் மொழியிலிருந்து வானியல் கணிதவியல் ஈறாக பல்வேறு நாகரீகக் கூறுகளும் கங்கை நதிக் கரையிலிருந்தே நமக்கு வந்ததாகக் குறிப்பிடுகின்றார். Voltaireஇன் இந்தக் கருத்துக்கு Jean-Sylvain Bailey என்ற பிரஞ்சு மொழியியல் அறிஞரில் ஆரம்பித்து பலமான எதிர்ப்புகள் மேற்குலகில் எழுந்தன.

இவ்வாறாக இந்திய மொழிகளிலிருந்தே மேற்குலக் மொழிக் கூறுகள் உருவாகின என்ற கருத்தை Voltaireகாலம் வரைக்கும் ஏற்றுக் கொண்ட பல தத்துவவியலாளர்கள் 1840இற்குப் பிறகு அதனைத் தலைகீழாக மாற்ற ஆரம்பித்தனர்.

1846ம் ஆண்டு இந்தியாவை அடிமைப்படுத்தி ஆட்சிசெய்த வர்த்தக ஸ்தாபனமான கிழக்கிந்தியக் கம்பெனி (East India Company) உடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்ட மொழியியல் மற்றும் சம்ஸ்கிருத அறிஞரான Max Muller என்பவர் இது தொடர்பான மேலதிக ஆய்வுகளை முன்வைத்தார். Oxford பல்கலைக்கழகத்துடனும் கிழக்கிந்திய கொம்பனியுடனும் இவருக்கு இருந்த இறுக்கமான தொடர்பினூடாக இங்கிலாந்திலேயே தங்கிவிட்ட இவர் பிரித்தானியா இந்தியாவை ஆண்ட காலத்தில் இந்தியக் கலாச்சாரத்தின் மூலக்கூற்றைக் கண்டுபிடித்ததாகப் போற்றப்பட்டார்.

இவர் பின்னதாக 1860இல் Oxford பல்கலைக்கழகத்தின் நவீன மொழிகளின் தலைமை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். Oxford பல்கலைக்கழகத்தில் All Souls College இன் முதலாவது Comparative Theology பிரிவின் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

டார்வினின் (Darwin) கூர்ப்புக் கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரான கருத்தை முன்வைத்த Max Muller இயக்கவியல் கோட்பாட்டையும் முற்றுமுழுதாக நிராகரித்தார்.

வடக்கு ஆப்கானிஸ்தான் பகுதிகளில் குடியேறிய வெள்ளை நிறமுடைய ஆரியர்கள் கி.மு. 1500 ஆண்டளவில் இந்தியாவை ஆக்கிரமித்து சம்ஸ்கிருதத்தைப் பரப்பியதாக நம்பிய Max Muller இந்தியாவையும் அது சார்ந்த நாடுகளையும் தமது சொந்த வியாபார நலனுக்காக நிர்மூலமாக்கிய கிழக்கிந்தியக் கம்பெனியுடன் கைகோர்த்துக்கொண்டு ஆரியத் தத்துவத்தை எந்தவித ஆதாரமும் இன்றி வெறுமனே மொழிக்கூறுகளுக்கிடையில் காணப்பட்ட மிகச்சிறியளவிலான ஒற்றுமையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார்.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இன்று வரைக்கும் வெள்ளை நிறத்தவரின் மேலாதிக்கத்தைப் பறைசாற்றும் இந்த ஆரியத் தத்துவத்தின் செல்வாக்கால் பல நியோ நாஸி (Neo-Nazi) இயக்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சியடைந்து ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டுள்ளன.

வெள்ளை நிறமுடையவர்களே நாகரீகத்தின் கர்த்தாக்கள் என்ற கருத்தை முன்வைத்த ஆரியத் தத்துவத்தின் தொடர்ச்சியானது பிரித்தானியர்களால் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட Madame Blavatsky போன்றவர்களால் கையாளப்பட்டது.

இலங்கை போன்ற நாடுகளில் இனவாதத்தையும் மத அடிப்படைவாதத்தையும் விதைப்பதில் கவனம் செலுத்திய Madame Blavatsky, Colonel Olcott போன்றோர் ஆரியர் என்று கருதப்படாத தமிழர்கள் போன்றோரை அரை மிருகங்களாகச் சித்திரித்தனர்.

Max Muller தனது இறுதிக்கால எழுத்துக்களில் ஆரியர் என்போர் ஆரிய மொழியைப் பேசியவர்களே தவிர ஆரியர் என்ற இனமல்ல என்று தான் கருதுவதாகக் குறிப்பிட்டார். Biographies of Worlds and Home of the Aryans என்ற நூலில் இது தொடர்பாகத் தெளிவாக இவர் குறிப்பிட்டபோதிலும் நிறவாதிகளும் பிரித்தானிய காலனி ஆதிக்கசக்திகளும் தமது அழிப்பு நடவடிக்கைக்காக ஆரியர் கோட்பாட்டை முன்நிறுத்தினர்.

அமைப்புவாத (Structuralism) மொழியியிலின் ஆரம்பகர்த்தா எனக் கருதப்பட்ட Ferdinand de Saussure என்பவர் Max Muller இன் கருத்தை நிராகரித்ததைத் தொடர்ந்து பல தத்துவாசிரியர்களும் சமூகவியலாளர்களும் இந்த ஆரியத் தத்துவத்தை நிராகரிக்க ஆரம்பித்தனர்.

குறிப்பாக 1920ம் ஆண்டு சிந்துவெளி நாகரீகக் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவின் மொழியையும் நாகரீகத்தையும் அறிமுகப்படுத்தியவர்கள் ஆரியர் என்ற கருத்து அடிபட்டுப்போனது.

1999ம் ஆண்டில் தொல்லியலாளர்களான Jim Shafter மற்றும் Diane Lichtenslien ஆகியோர் வட இந்தியாவில் ஆரியர்களின் வரவிற்கோ படையெடுப்பிற்கோ எந்தவிதமான ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை என்ற கருத்தை முன்வைத்தனர். இந்தியாவை ஆக்கிரமித்து அதன் தேசியப் பொருளாதார வளர்ச்சியைச் சீரழித்துச் சிதைத்த பிரித்தானிய கவர்னர்களே இந்த ஆரியத் தத்தவத்தை முதன்முதலில் இந்தியாவில் அறிமுகப்படுத்தினர்.

இந்திய உபகண்டத்தின் தொன்மையான உயர்ந்த நாகரீகக் கூறுகளைக் கொண்ட மக்களுக்கும் வெள்ளை இனத்துக்கும் இடையிலான கலாச்சாரத் தொடர்ச்சியை உரிமை கோருவதினூடாக வெள்ளை ஆரிய இனத்தவர் என்று கருதப்பட்டவர்கள் உப

படிப்பகம்

www.padippakam.com



கண்டத்தின் கலாச்சாரத்தை நிலைநிறுத்த வந்தவர்களாகக் காட்ட முனைந்தனர். மேலும் இந்த உயர்ந்த ஆரியக் கலாச்சாரத்தை மறுபடியும் அறிமுகப்படுத்துபவர்களாகவும் முஸ்லிம் படை எடுப்புக்களால் சீரழிக்கப்பட்ட இந்தக் கலாச்சாரத்தை மறுபடியும் உயிர்த்தெழச் செய்தவர்களாகவும் தம்மைக் காட்டிக்கொண்டனர்.

நாஜித் தன்மை கொண்ட இந்த நிறவாதக் கருத்தினை வெள்ளை நிறம் கொண்ட உயர்சாதி இந்துப் பிராமணர்களை தமது இனத்தின் தொடர்ச்சியாகக் காட்ட முனைந்ததிலிருந்து ஆரம்பித்தனர்.

இறுதியாக இந்தியாவை ஆரியமயமாக்குவதற்கு பிரித்தானிய நிர்வாகத்திற்கு ஆதரவு அளிக்குமாறு சமூகத்தில் மேல்தட்டிலிருந்த நிலப்பிரபுக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டு அதில் குறித்தளவு வெற்றியையும் கண்டனர்.

இந்திய சுதந்திரத்திற்குப் பின்னரும்கூட இந்த ஆரியத் தத்துவம் தெற்காசியாவில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்திற்று. பிராமணர்கள் உட்பட ஏனைய உயர்சாதி இந்துக்கள் குறிப்பாக நிலப்பிரபுகளான இவர்கள் ஆரியத் தத்துவத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். ஆரியத் தத்துவம் நிலப்பிரபுக்கள் தேசிய எழுச்சிக்கு எதிராகச் செயற்படவும் அந்நிய மூலதனத்திற்குத் தரகர்களாகச் செயற்படவும் மிகவும் பயன்பட்டதான தத்துவமாகும்.

இந்தத் தத்துவமானது வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதியில் அமைந்த நேரடியான ஆதாரங்களற்ற இந்திய மேற்தட்டு நிலப்பிரபுக்களாலும் ஆங்கிலேய அறிவுஜீவிகளாலும் தொடர்ச்சியாக நியாயப்படுத்தப்பட்டு வந்தது.

ஹரப்பன் நாகரீகக் காலகட்டத்தில் குருக்களாக இருந்தவர்களே பின்னர் பிராமணர்களாகினர் என்றும் ஹரப்பன் நாகரீகத்தின் தொடர்ச்சியே வேதகால நாகரீகம் என்பதற்கும் பல ஆதாரங்களை இந்த ஆதாரமற்ற ஆரியத் தத்துவத்திற்கு எதிராகச் சமூக விஞ்ஞானிகள் முன்நிறுத்துகின்றனர். இது தொடர்பான விரிவான ஆய்வு என்பது இங்கு அடிப்படை நோக்கமல்ல எனினும் ஆரியக் கோட்பாட்டிற்கு ஆதரவளிக்கும் அறிவுஜீவிகள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கோட்பாட்டை அப்படியே ஏற்றுக்கொள்வதினூடாக இதற்கெதிரான ஆய்வு முறைகளை நிராகரிக்கின்றனர்.

தவிர சமஸ்கிருதத்திற்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையில் அமைந்திருக்கும் சிறியளவிலான தொடர்புகள் என்பது ஆரிய மேல்சாதியினரின் படையெடுப்பால் வந்ததல்ல என்று வாதிடும் இவர்கள் ஹரப்பன் நாகரிகக் காலத்தில் மிகவும் இறுக்கமாக இருந்த ஹரப்பன், பபிலோனியன், மேலும் மேற்கு நாகரீகங்களுடனான

படிப்பகம்

www.padippakam.com



வர்த்தகத் தொடர்புகளினூடாகவே இந்த மொழிப் பரிமாற்றம் நிகழ்ந்திருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் இருப்பதாக வாதிடுகின்றனர். ஹரப்பா பகுதிகளின் இயற்கைச் சூழ்நிலைகளின் காரணமாக அந்த மக்களின் இயற்கைக்கெதிரான போராட்டமென்பது ஏனைய ஐரோப்பிய நாகரீகத்தைப் போலல்லாது மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இதனால் மக்களிடையேயான பாரம்பரியத் தொடர்பும் நாகரீகமும் ஒப்பீட்டளவில் வளர்ச்சியடைந்ததாகவே இருந்தது. கடற்பயண முறைகளிலும் சிற்பத் துறைகளிலும் ஹரப்பன் நாகரிகத்திற்கும் பபிலோனியன் மற்றும் மெடிட்டிரேனியன் நாகரீகத்திற்கும் இருக்கக்கூடிய பொதுமைப்பாடுகளை அவதானிக்குமிடத்து மொழி வடிவங்கள் தெற்கிலிருந்து (ஹரப்பன் பகுதிகளிலிருந்து) வடக்கு நோக்கி (ஐரோப்பியப் பகுதிகளை நோக்கி) இடம் பெயர்ந்திருப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் இருப்பதாகவும் சமூக விஞ்ஞானிகள் வாதிடுகின்றனர்.

மிகச்சிறியளவில் காணப்படும் அமைப்பு வடிவிலான மொழியின் பொதுமைப்பாட்டைப் பற்றிப் பேசும் ஆரியத் தத்துவவாதிகள் வட இந்திய மொழிகளுக்கும் தமிழ் மற்றும் ஆதிவாசி மொழிகளுக்கும் இடையிலான மிகப்பெரிய பொதுமைப்பாட்டைத் திட்டமிட்டே புறக்கணிக்கின்றனர்.

கி.மு. 7000ம் ஆண்டிலிருந்து 3000ம் ஆண்டு வரையான கற்காலத்திற்குப் பின்னர் ஆற்றங்கரைகளை நோக்கிய நிலையான வாழ்க்கைக்காகக் குடியேறிய மனிதகுலம் மனிதப் பயன்பாடுகளை நிலைநிறுத்தும் நாகரீகங்களுக்கூடாகத் தன்னைப் பண்படுத்திக் கொண்டது. கி.மு. 7000 முதல் 3300 வரை ஆநாபயசா கலாச்சாரத்தையும் கி.மு. 3000 முதல் 1700 வரை சிந்துவெளி (Indus Valley) நாகரீகத்தையும் பின்னர் கி.மு. 1700இலிருந்து 1300 வரை ஹரப்பன் கலாச்சாரத்தையும் கி.மு.1500இன் பின்னதாக வேதமரபுக் கலாச்சாரத்தையும் உலகுக்கு அறிமுகப்படுத்திய மிகத் தொன்மையான கலாச்சாரத்தினை ஐரோப்பியப் பகுதிகளிலிருந்து குறித்த ஆரியர்களினது கலாச்சாரம் என உரிமை கோருதலானது திட்டமிடப்பட்ட பிரித்தாளும் சதித்திட்டமென இன்றைய DNA ஆராய்ச்சிகளும் தெளிவுபடுத்திவருகின்றன.

Estonian Bio Centreஇனால் மேற்கொள்ளப்பட்ட DNA ஆய்வின் அடிப்படையில் எத்தியோப்பியப் பகுதிகளில் தோன்றிய ஆரம்ப மனிதகுலமானது வடக்கே ஐரோப்பியப் பகுதிகளுக்கும் கிழக்கே இந்தியாவை நோக்கியும் இடம்பெயர்ந்ததாகவும் பின்னர் சீனாவையும் அவுஸ்திரேலியாவையும் நோக்கி நகர்ந்ததாகவும் கூறுகின்றது.

இந்த ஆய்வின் நெறியாளர்களில் ஒருவரான Dr. Richard Villems கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவிலுள்ள இந்தியர்களிடையே மிகச்

படிப்பகம்

www.padippakam.com



சிறிதான பிறப்புரிமை வித்தியாசங்களே காணப்படுவதாகத் தெரிவிக்கின்றார். ஆரியர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்களுக்கும் திராவிடர்கள் மற்றும் ஆதிக்குடிகள் எனக் குறிக்கப்படுபவர்களுக்கும் இடையில் எந்தப் பெரிய வித்தியாசமும் இருக்கவில்லை எனக் குறிப்பிடும் இவர் பழமைவாதக் கருத்துக்களுடனான ஆரியத் தத்துவம் ஏற்கெனவே இறந்துபோன தத்துவம் எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறான DNA விஞ்ஞானமுறை தொடர்பாகவும் ஆரியர் கோட்பாடு தொடர்பாகவும் பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் இருப்பினும் இதனை முடிந்த முடிபாக பிரித்தானியர்கள் தெற்காசியாவின் வகுப்பறைகள் வரை அறிமுகப்படுத்தித் தமது தொடர்ச்சியான ஆளுமையை நிலைநிறுத்திக்கொள்ளப் பயன்படுத்திய இந்த ஆரியத் தத்துவமானது தெற்காசியப் பிராந்தியத்தைச் சின்னாபின்னமாக்க ஆங்கிலேயரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் என்பது வெளிப்படையாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# 9

## ஆரியக் கோட்பாடு பௌத்தம் இலங்கை

எவ்வாறு மன்னராட்சிக் காலகட்டத்திலும் நிலப்பிரபுத்துவத்திற்கு முற்பட்ட காலகட்டங்களிலும் வேறுபட்ட நாடுகளிடையே பொதுமைப்பாடுகள் காணப்பட்டனவோ அதே போலத்தான் சமூகத்தின் பரிணாம வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த சமூக அமைப்பிற்கேற்ப பொதுமைப்பாடுகள் வெவ்வேறு பிரதேசங்களுக்கிடையே காணப்பட்டுள்ளன.

ஐரோப்பிய மன்னர்களுக்கும் பாரசீக மன்னர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் காணப்படாவிட்டாலும் இவர்களிடையே பொதுமைப்பாடுகள் வெளிப்படையாகவே காணப்பட்டன.

மதங்களின் வளர்ச்சியும் அரசர்களின் உருவாக்கமும் அரசாட்சியும் நிலப்பிரபத்துவ அமைப்பு முறையின் பண்புகளாயின. நிலையான இராணுவ அமைப்பினை ஒரு புறத்திலும் சமயக் கலாச்சார கருத்துக்களை மறுபுறத்திலும் முன்நிறுத்திய சாம்ராஜ்யங்களை சூழவிருந்த மக்களை மன்னர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். மக்களை ஒழுங்குபடுத்துவதில் சமயங்களின் பங்கு மிக முக்கியமானதாக அமைந்திருந்தது. ரோமானிய காலத்தில் கிறீஸ்தவ மதத்தின் உருவாக்கமும் முஸ்லீம் சாம்ராஜ்யங்களும் இந்தியாவில் இந்துத் தத்துவத்தைப் போலவே அதிகாரத்தைப் பாதுகாக்கும் தத்துவங்களாயின.

ஆரியக் கோட்பாடு கூறுவது போல் இந்த சமூகமாற்றம் எந்த மேல்நிலைக் கலாச்சாரத்தாலும் ஏற்றுமதி செய்யப்படவில்லை. அது சமூக பரிணாம வளர்ச்சியின் ஒரு படிநிலையே.

படிப்பகம்

www.padippakam.com



முதன்முதலாக ஐரோப்பா தனது இராணுவ, அரசியல், பொருளாதார ஆதிக்கத்தை மற்றைய நாடுகள் மீது திணித்து அந்த நாட்டு மக்களைப் பிரித்தாளத் தொடங்கியபோதே உலகம் சீரழிக்கப் பட்டது.

இந்தச் சமூகச் சீரழிவின் தொடர்ச்சியே இலங்கையின் இனப்பிரச்சினையுமாகும்.

முன்னமே குறிப்பிட்டபடி மத்தியதர வர்க்க அணிகளுக்கு மத்தியில் உருவான அந்நிய மூலதனத்திற்கும் அந்நிய ஆட்சியாளர் களுக்கும் அதன் நேரடித் தரகர்களாக உருவான நிலப்பிரபுத்துவ மேலணிகளுக்கும் எதிரான தேசிய உணர்வு என்பது பிரித்தானியக் குடியேற்ற நாடுகளில் அவர்களைப் பயமுறுத்தியது.

ஒரு புறத்தில் வெற்றிகரமாக உள்ளூர் நிலப்பிரபுக்களைத் தமது பிரதிநிதிகளாக மாற்றிவிட்டபோதிலும் மத்தியதர வர்க்கத்தின் தேசிய உணர்வுள்ள பகுதிகளில் தவிர்க்க முடியாத எழுச்சியையும் தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்நிலையில் ஏற்கெனவே சிறிய அளவில் இருந்து அருகிவந்த உள் முரண்பாட்டைத் தூண்டிவிட்ட ஆங்கிலேய ஆட்சி மறுபுறத்தில் ஆரியக் கோட்பாடு போன்ற புதிய ஆதாரமற்ற கோட்பாடுகளையும் முன்வைத்து மக்களைப் பிரித்தாள முற்பட்டனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஏனைய நாடுகளின் நிலப் பிரபுத்துவக் காலகட்டத்தில் காணப்பட்டது போல மதங்களுக் கிடையே முரண்பாடுகள் காணப்பட்டன. மன்னர்கள் தங்களது ஆதிக்கத்தை அமைப்புமயப்படுத்தவும் சமூகத்தை ஒழுங்குபடுத்தவும் இந்த மத முரண்பாடுகளைப் பயன்படுத்திக்கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் தேசிய சக்திகளைக் கூறுபடுத்த இதே மத முரண்பாடுகளைப் பயன்படுத்த ஆரம்பித்ததின் விளைவே இன்றைய தேசிய இனப்பிரச்சினை ஆகும்.

தேசிய உணர்வினையும் தேசியப் போராட்டங்களையும் மழுங் கடிக்கும் நோக்கத்தில் அடிப்படையில் அமைப்புமயப்படுத்தப்பட்ட பெரும் பணச்செலவிலான கிறீஸ்தவ மதத்தினை நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்ட ஆங்கிலேயர் இந்த முயற்சி குறித்த எல்லைக்கு அப்பால் வெற்றியடையாது போகவே உள் முரண் பாடுகளைக் கூர்மைப்படுத்த ஆரம்பித்தனர்.

கிறீஸ்தவ மதத்தைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த ஆங்கிலேய அரசு இந்த நடவடிக்கைகளுக்கு நடுவிலே பௌத்த மதத்தை முன்நிறுத்தும் பாளி மொழியில் எழுதப்பட்ட இந்து புராணக் கதைகளை ஒத்ததான, இந்து மன்னர்களுக்கு எதிரான

படிப்பகம்

www.padippakam.com



கருத்தோட்டத்தைக் கொண்டிருந்த மகாவம்சம் என்ற வரலாற்றுக் கதையை பாளி மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்க உத்தரவு பிறப்பித்தது.

இந்து மதத்தின் ஆதாரமாகக் கருதப்படும் வேத மந்திரங்கள் எந்தத் தென்னிந்திய மொழிகளிலும் ஆங்கிலேயரால் மொழி பெயர்க்கப்படவில்லை. பௌத்தமதத்தினை ஆதாரமாகக் கொண்ட தமிழ் இலக்கியங்களான மணிமேகலையும் குண்டலகேசியும் ஆங்கிலேயரால் வடமொழியில் மொழிபெயர்க்கப்படவில்லை.

ஆனால் மகாவம்சம் என்ற, மர்மக்கதை போன்ற, பாலி மொழியில் அமைந்த, மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தக் கூடிய நூலானது ஆங்கிலேயரின் உத்தரவின்பேரில் அவசர அவசர மாக சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

1874ம் ஆண்டு இலங்கையில் இங்கிலாந்து அரசின் கவர்னராகப் பணியாற்றிய சேர் வில்லியம் எச்.கிரகரி (William H.Gregory) என்பவர் இங்கிலாந்து நாட்டில் கல்விகற்று வந்த இலங்கைப் பௌத்தர்களுடன் இணைந்து வண. ஹிக்கடுவ - சமுனன்கல நாயக்க தேரர் (Ven. Hikkaduwe Siri Samunankala Nayaka) மற்றும் வண. பந்துவந்தாவ - தேவராக் கித்த தேரர் (Ben Banduvantarlawa siri Devarakkitha) ஆகியோரைக் கொண்டு மகாவம்சம் என்ற, பாளி மொழியிலமைந்த, பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுக் கதைகளை சிங்கள மொழிக்கு மொழிப்பெயர்ச்சி செய்து கிராமமட்டங்கள் வரை இருந்த விகாரைகள் முழுவதுமாக விநியோகம் செய்தனர். இதனூடாக மொத்த மக்கள் மத்தியிலும் இந்த மகாவம்சம் பரப்பப்பட்டது.

மூலதன உருவாக்கத்துடன் கூடவே எழுந்த நாடுதழுவிய தேசிய உணர்வினைச் சீர்குலைத்து தமது பிரித்தாளும் தந்திரத்தினை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் மக்கள் மத்தியில் பரவப்பட்ட மகாவம்சம் உருவாக்கிய முதலாவதும் முக்கியமானதுமாக அறியப் பட்ட மனிதன்தான் அனகாரிக்க தர்மபால என்னும் பௌத்த துறவியாவார்.

இன்றைக்கும் இலங்கை பேரினவாத அரசால் பௌத்தர்களின் நாயகனாகப் போற்றப்பட்டு பள்ளிப் பாடப்புத்தகங்களையும் தபால்தலைகளையும் ஆக்கிரமித்துள்ள இந்த அனகாரிக்க தர்மபால என்ற மகாவம்சத்தின் நவீனகால வாரிசான இவர்தான் புதிய இலங்கையின் பௌத்த பேரினவாதத்தின் கர்த்தாவானார்.

சிங்கள இனத்தைச் சார்ந்த கிறிஸ்தவ மதத்தவரான இவர் ஆரிய பௌத்த பேரினவாதக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பினார்.

படிப்பகம்

www.padippakam.com



Madame Blavatsky என்ற மேற்கத்தையை தத்துவாசிரியரின் நேரடியான மேற்பார்வையில் உருவான அனகாரிக்க தர்மபால தமிழர்களைத் திராவிடர்கள் என்றும் சிங்களவர்களை ஆரியர்கள் என்றும் வகுத்து ஆரியர்களே ஆளப் பிறந்தவர்கள் என்று தமது ஆசிரியரின் கொள்கைகளைப் பரப்பி மக்களைக் கூறுபடுத்தினார்.

Madame Blavatsky என்று பிரபலமான ஹெலனா பெற்றொவ்னா ஹான் (Helena Petrovna Hahn) அல்லது Helena Blavasky என்ற தத்துவவியலாளரின் எழுத்துக்களினால் அனகாரிக்க தர்மபால மட்டுமல்ல ஹிட்லர் உட்பட மற்ற உலகத் தலைவர்களும் கவர்ந்திழுக்கப்பட்டிருந்தனர்.

31.07.1831இல் ரஷ்யாவின் உக்ரெயின் பிரதேசத்தில் பிறந்த இவர் அமெரிக்காவின் நியுயோர்க்கிலும் ஜேர்மனியிலும் இறுதியாக இங்கிலாந்திலும் வசித்துவந்தார்.

பல தத்துவவியலாளர்களால் புதிய தத்துவகாலத்தின் ஆரம்ப கர்த்தா என வர்ணிக்கப்பட்ட Blavasky பல சர்ச்சைக்குரிய தத்துவங் களை முன்வைத்து அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும் முனைந்தவர். குடியேற்ற நாடுகளில் தனது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்திய இவரின் கருத்துக்கள் எதிர்காலத்தில் இலங்கை என்ற நாட்டை இரத்த ஆறு பாயும் மனிதக் கொலைகளின் மண்ணாக மாற்றியது என்பது பலருக்கும் ஆச்சரியமான விடயமாக அமையலாம்.

1873ம் ஆண்டு நியுயோர்க் நகரில் குடியேறிய இவரின் திருமண வாழ்வு தொடர்பாகவும் அதனூடாக அரசியல் தொடர்புகள் தொடர்பாகவும் பல சர்ச்சைக்குரிய கருத்துக்கள் நிலவுகின்றன.

1874ம் ஆண்டு Colonel Steal Olcott என்பவரை நியுயோர்க்கில் சந்தித்த Madame Blavatsky அவருடன் ஒன்றாக வாழ ஆரம்பித்தார். பின்னதாக வேறொருவரைத் திருமணம் செய்துகொண்ட இவர் 1875ம் ஆண்டு Theosophical Society என்ற அமைப்பை Colonel Steal Olcott உடன் இணைந்து ஆரம்பித்தார். எந்த மதத்தினையும் சாராத இந்த அமைப்பானது எல்லா மதங்களினதும் அடிப்படைக் கருத்துக்கள் சரியானது என்றும் அதன் மனித சிந்தனை ஊடான வெளிப்பாடுகள் தவறானவை என்றும் கருத்துக்களைக் கொண்டிருந்த இவர் ஆரியர்களே மனித இனங்களில் மேலானவர்கள் என்றும் நாகரீக மடைந்த உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்கள் என்றும் கருத்துக்களை முன்வைத்ததினூடாக மனித இனத்தைக் கூறுபோட்டார்.

Helena Blavaskyயின் எல்லா எழுத்துகளுமே இனவாத நிறவாதக் கருத்துக்களைக் கொண்டவையாக அமைந்திருந்தன.

The Secret of Doctrine என்ற நூலில் ஆரியர்களைப் பிறப்பால் மனித இனத்தின் உச்சநிலையிலுள்ள நாகரீகமடைந்தவர்களாகவும்

படிப்பகம்

www.padippakam.com



அப்ரொஜன் இன மக்கள் போன்ற ஆதிக்குடிகளை அரை மிருகங் களாகவும் வர்ணிக்கிறார்.

இவ்வாறு இனவாதத்தையும் நிறவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டு மனித இனத்தைக் கூறுபோட முனைந்த இவர் இந்த நோக்கத்திற்காக இலங்கையில் தேர்ந்தெடுத்த மனிதர்தான் அனகாரிக்க தர்மபால என்பவராவார்.

1864ம் ஆண்டு செல்வாக்கு மிகுந்த ஒரு செல்வந்தரின் மகனாகப் பிறந்த அனகாரிக்க தர்மபாலவின் பிறப்புப்பெயர் டேவிட் ஹேவவிதாரண (David Hewavitarana) என்பதாகும். கிறீஸ்தவராகப் பிறந்த அனகாரிக்க தர்மபால தமது ஆரம்பக் கல்வியைக் கிறீஸ்தவக் கல்லூரிகளிலேயே மேற்கொண்டார்.

மகாவம்சம் ஆங்கிலேயர்களால் சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட பின்னர் இலங்கையில் எழுந்த சிங்களபௌத்த எழுச்சியினால் உந்தப்பட்டார்.

இதே காலப்பகுதியில் 1882ம் ஆண்டில் Madame Blavatskyயின் Theosophical Society இன் தலைமையகம் தென் இந்தியாவிலுள்ள அடையாறு என்ற இடத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் Theosophical Societyஇனைச் சார்ந்தவர்கள் பௌத்த மதத்துடன் தமது ஆரிய இனவேறுபாட்டுத் தத்துவத்தை அடையாளப்படுத்த ஆரம்பித்தனர்.

Madame Blavatskyயும், Colonel Olcottஉம் பௌத்தத்தை ஆரியர்களின் உயர்ந்த மதமாகப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர். இந்த இருவரினதும் இறுதிக்கால வாழ்க்கை பௌத்தக் கொள்கைகளுடன் எந்தச் சார்புநிலையினையும் கொண்டிராத போதிலும் பௌத்த மதத்தைச் சுற்றிய இவர்களது ஆர்வத்தினால் இலங்கைக்குப் பலமுறை பயணம் செய்தனர்.

Colonel Olcott மட்டும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதை நோக்க மாகக் கொண்டிருந்த ஆங்கிலேய கவர்னர்களின் ஆதரவுடன் 300 பௌத்தப் பாடசாலைகளை ஆரம்பித்தார். இந்த நேரத்தில்தான் Colonel Olcott இன் பௌத்தமதப் பிரச்சார வேலைகளுக்கு அனகாரிக்க தர்மபால ஆதரவாக இருந்தார். ஆரிய மேலாதிக்கவாத நாஸிசத் தத்துவத்தால் ஆட்கொள்ளப்பட்டார்.

Madame Blavatskyயின் ஆளுமைக்கு உட்பட்ட இவர் அவரது ஆதரவுடன் பாளி மொழியைக் கற்றுத் தேர்ந்தார். அனகாரிக்க தர்மபாலவிற்கு 20 வயதாக இருக்கும்போது 1884ம் ஆண்டில் Madame Blavatsky அவரை தென் இந்தியாவிலிருந்த Theosophical Societyஇன் தலைமையத்திற்கு அழைத்துச்சென்றார்.

படிப்பகம்

www.padippakam.com



இதன் பின்னர் இலங்கை திரும்பிய அனகாரிக்க தர்மபால இலங்கையிலிருந்த Theosophical Society இன் காரியாலயத்தில் தங்கி முழுநேரமாகப் பணியாற்றினார்.

1886ம் ஆண்டு Colonel Olcott பௌத்தப் பாடசாலைகளை நிறுவும் நோக்குடன் இலங்கைக்கு வந்தபோது அவருடன் இணைந்து பணியாற்றிய அனகாரிக்க தர்மபால பின்னதாக பௌத்த துறவியாக மாறினார்.

மகாவம்ச மொழிபெயர்ப்பிற்கும் Theosophical Society இன் உருவாக்கத்திற்கும் பின்னதாக எழுந்த பௌத்தசிங்கள மேலாதிக்க உணர்வின் ஆரம்பகர்த்தாவாகத் திகழ்ந்த இவரின் கருத்துக்கள் கிராமப்புறங்கள் வரை சென்று மிகவும் அடிமட்ட மக்களின் சிந்தனை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தின.

தேசியவாதம், மகாவம்சம், Madame Blavatskyயின் சிந்தனைகள் ஆகியவற்றின் நச்சுக் கலவையான இவரின் கருத்துக்களும் பிரச்சாரங்களும்தான் பௌத்தசிங்கள அடிப்படைவாதத்தினை சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவித்தது. அமைதியையும் சமாதானத்தையும் போதித்த பௌத்த விகாரைகள் இனவாதத்தையும் சிங்கள பௌத்த அடிப்படைவாதத்தையும் கக்கும் நெருப்பாக மாறின. இது ஆங்கிலேய அரசின் ஆதிக்கத்திற்கு மிகப் பாரிய வெற்றியைக் கொடுத்தது.

இந்தியாவில் உருவான தேசிய எழுச்சியினது தாக்கத்தாலும் இயல்பாக பொருளாதார மாற்றத்தாலும் உருவான ஏகாதிபத்திய மூலதனத்திற்கு எதிரான இலங்கை மக்களது உணர்வலைகள் கூறு போடப்பட்டு தேசிய சக்திகளும் தேசிய உணர்வும் சீர்குலைக்கப்பட்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அத்திவாரமிடப்பட்டது.

Madame Blavatsky யின் சிந்தனைகள் எவ்வாறு ஜேர்மனியில் ஹிட்லர் பரப்பிய நாஸிசத்தின் உருவாக்கத்திற்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக அமைந்ததோ அதுவே காலனி ஆதிக்கத்தால் எற்கெனவே சீரழிந்துபோன இலங்கையிலும் அனகாரிக்கவில் ஆரம்பித்து பௌத்த சிங்கள மேலாதிக்கத்திற்கும் இனப்பிரச்சினையின் உருவாக்கத்திற்கும் காரணமாக அமைந்தது.

அனகாரிக்கவும் Blavatsky யைப் போலவே பிரித்தாளும் நோக்கத்திற்காக பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட ஆரியத் தத்துவத்தைத் தமது எழுத்துக்களினதும் பிரச்சாரங்களினதும் அடிப்படையாகக் கொண்டிருந்தார்.

பிற்காலத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கும் கிறீஸ்தவ மதத்திற்கும் எதிராக அனகாரிக்க கடும் பிரச்சாரங்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டபோதிலும் இலங்கையில் உருவாகிவந்த

படிப்பகம்

www.padippakam.com



அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உணர்வையும் நாட்டின் சொந்த மூலதனத்தை அபிவிருத்தி அடையச்செய்யும் தேசியவாதத்தைக் கூறுபோட்டு நாட்டைச் சீரழிப்பதில் அனகாரிக்கவின் பங்கானது பிரித்தானிய பிரித்தாளும் தந்திரத்திற்குப் பெரும் சேவையாற்றியதுடன் சிங்களபௌத்த தேசியவாதத்தையும் தமிழ் தேசியவாதத்தையும் உருவாக்கி பெரும் தேசிய இன மோதல்களை ஏற்படுத்திற்று.

ஆங்கிலேயர் உருவாக்கிய ஆரியர் கோட்பாட்டின் முதலாவது சர்வதேசப் பிரதிநிதி Madame Blavatsky என்றால் அதன் இலங்கைப் பிரதிநிதி அனகாரிக்க தர்மபாலவாகத் திகழ்ந்தார்.

இந்த அழகான பிரகாசமான தீவு ஆரியச் சிங்களவர்களால் சொர்க்க பூமியாக மாற்றப்பட்டிருந்தது. அதன் மக்களுக்கு மதச்சார்பற்ற நிலை பற்றித் தெரியாது. இந்துக்களும் கிறீஸ்தவர்களும் மிருகக் கொலைக்கும் களவுக்கும் பொய்க்கும் விபச்சாரத்திற்கும் பொறுப்பானவர்களாவர் என்று குறிப்பிடும் அனகாரிக்கவின் உரைகளில் ஒன்று மிகப் பிரபல்யம் வாய்ந்ததாகும்.

இவரின் உரைகள் இலங்கையின் கல்வி கலாச்சார அமைச்சினால் தொகுத்தும் நூலுருவில் வெளியிடப்பெற்றுள்ளது.

Colonel Olcott மற்றும் Madame Blavatsky ஆகியோரால் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்பட்ட இந்த அனகாரிக்க தர்மபால தமிழர்களையும் முஸ்லீம்களையும் சிங்கள மக்களின் எதிரியாகக் காட்டுவதற்கு தம்மாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட தனூடாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு மகத்தான சேவை செய்து வந்தார். துட்டகமுனு எல்லாளன் போரைத் தமிழர்களுக்கு எதிரான போராகச் சித்தரித்து தமிழர்களை இலங்கையின் எதிரிகளாகக் காட்ட முற்பட்டார்.

மேலும் நிறவாதத்தைத் தூண்டும் நோக்குடன் சிங்களவர் களைத் தூய்மையான ஆரியர்களாகக் குறிப்பிட்ட இவர்தாம் வட இந்தியர்கள் ஐரோப்பியர்கள், ஈரானியர்களை ஒத்த ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் தமிழர்கள் இரண்டாம்தர நாகரீகமடையாத திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் பிரச்சாரம் செய்தார்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஏனைய சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களையும் இலங்கையை விட்டு வெளியேற்றி இலங்கையை மறுபடி பௌத்த சிங்கள ராஜ்யமாக்க வேண்டும் என்று இவர் ஆரம்பித்துவைத்த அமைப்புமயப்படுத்தப்பட்ட இனவாதம் இன்றைக்கு இலங்கையைப் பிணக்காடாக மாற்றியுள்ளது.

காலனி ஆதிக்க சக்திகளால் தமது சொந்த நலன்களுக்காக ஊக்குவித்து வளர்க்கப்பட்ட அனகாரிக்க தர்மபால இன்றும் அரச

படிப்பகம்

www.padippakam.com



பாடப்புத்தகங்களிலும் கலாச்சார பண்பாட்டு வைபவங்களிலும் விகாரைகளிலும் வரலாற்றுக் கதாநாயகனாக வர்ணிக்கப்படுகிறார். அநகாரிக்கவினூடாக பள்ளிப் பாடப்புத்தகங்களில் ஆரம்பிக்கும் இனவாதம் அமைப்புமயப்படுத்தப்பட்ட அடிப்படைவாத விகாரைகளினூடாக விரிவுபடுத்தப்பட்டு அரசியற் கட்சிகளால் உந்தப்பட்டு சர்வதேசிய சக்திகளால் ஆதரிக்கப்பட்டு சிங்கள தேசிய இனத்தையே மாய இருளுக்குள் வைத்திருக்கிறது.

தெற்காசியாவினதும் இலங்கையினதும் வளர்ச்சியையும் சுதந்திரத்தையும் சீரழிக்கும் அபாயமுள்ள இந்தக் கருத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியானது சர்வதேசியமயமாக்கலுக்குப் பின்னதான உலக ஒழுங்கமைப்பில் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் எதிர்பாராத சுயவளர்ச்சிக்குப் பின்னர் மிகுந்த முக்கியத்துவமடைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# 10

## பெருந்தேசியவாதத்தின் ஆரம்பம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் என்பது குடியேற்ற நாடுகளெங்கும் தேசிய போராட்டத்தின் காலகட்டமாகும். குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட இயல்பான மூலதன வளர்ச்சியும் அதனூடான தேசிய உணர்வும் அந்நிய மூலதனத்தின் ஆதிக்கமும் இந்தப் போராட்ட சூழலைத் தீவிரப்படுத்தியது. ஏகாதிபத்திய நாடுகள் தமது ஆளும் தந்திரத்தை மறு ஒழுங்கமைப்பாக்க ஆரம்பித்த இந்தக் கால கட்டத்திலிருந்து நாகரீக உலகில் தேசிய இனப் போராட்டங்களும் நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளும் மதக் கலவரங்களும் அதிகரிக்க ஆரம்பித்தன.

காலனி நாடுகளில் ஏற்பட்ட மூலதன உருவாக்கத்தால் தூக்கியெறியப்படக்கூடிய நிலையிலிருந்த நிலப்பிரபுத்துவ அணிகளைத் தமது பக்கம் சேர்த்துக்கொண்டு தமது நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளாக்கினர். அதற்கேற்றவாறு கல்வி மற்றும் அரசியல் அமைப்புமுறைகளை ஒழுங்குசெய்தனர்.

முன்னரே குறிப்பிட்டவாறு தேசிய உணர்வு கொண்டெழுந்த மத்தியதர வர்க்க அணிகள் உள்நாட்டின் மூலதன வளர்ச்சியை அடிப் படையாகக் கொண்டிருக்க இவர்களின் நிலப்பிரபுத்துவ அமைப்பு முறைக்கெதிரான உணர்வும் அந்நிய பொருளாதார ஆக்கிரமிப்புக்கு எதிரான உணர்வும் மேலோங்கத் தொடங்கியது. இதனால் அந்நியப் பொருளாதாரமும் நிலப்பிரபுத்துவமும் கைகோர்த்துக்கொண்டு தேசியப் பொருளாதார வளர்ச்சியை அழிக்க ஆரம்பித்தது.

அதாவது ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுக்களும் இணைந்து கொண்டு நாட்டின் தேசிய வளர்ச்சிக்கு எதிராகச் செயற்பட்டனர். இதனால் தொடர்ச்சியாக வந்த புதிய ஏகாதிபத்திய ஒழுங்கமைப்பில் இந்த பெருநிலப்பிரபுக்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாக மாறினர்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கூட்டணிக்கு எதிராக தேசிய உணர்வுகொண்ட மத்திய தர வர்க்கம் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள ஆரம்பித்த வேளையில் தான் நிலப்பிரபுக்களின் உதவியுடன் ஏகாதிபத்தியங்கள் இந்தத் தேசிய உணர்வுகொண்ட மத்தியதர வர்க்கத்தைக் கூறுபோடத் தொடங்கினர்.

ஆரியக் கோட்பாடு, சிங்களபௌத்த அடிப்படைவாதம் என்பன இந்த நோக்கத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டன. உருவாகி வளர்ந்த தேசிய உணர்வும் உருவான தேசமும் தேசிய இன முரண் பாடுகளால் சீரழியத் தொடங்க ஆங்கிலேயர்களும் நிலப்பிரபுக்களும் இந்தச் சீரழிவுகளின் சுடுகாட்டில் தமது ஆட்சியை வலுப்படுத்திக் கொண்டனர்.

1915ம் ஆண்டில் முதன்முதலாக இலங்கைத்தீவில் இனக்கலவரம் உருவானது. சிங்களமுஸ்லிம் கலவரத்தினைத் தூண்டியவர்கள் ஆங்கிலேயர்களுக்குச் சேவை செய்த நிலப்பிரபுக்களாக இருக்க இந்த நிலப்பிரபுக்களின் தலைமையில் கலவரத்துக்கு செயல்வடிவம் கொடுத்தவர்கள் மத்தியதர வர்க்க இளைஞர்களும் தொழிலாளர் களுமாவர்.

அதுவரையில் நிலப்பிரபுக்களை எதிர்த்த தேசிய உணர்வு கொண்ட மத்தியதர வர்க்க அணியும் தொழிலாளர்களும்கூட இந்தக் கலவரத்தில் நிலப்பிரபுத்துவத் தலைமைக்குள் உள்வாங்கப்பட்டனர். தமது எதிரிகளையே ஆதரவாளர்களாக அணிதிரட்டும் தந்திரோ பாயத்தை இந்த இனக்கலவரம் அதிகாரத்திற்குக் கற்பித்தது.

ஆக தேசிய பொருளாதாரத்தைச் சீரழிப்பதற்காகக் கூறுபோடப் பட்ட தேசம் அதனைக் கூறுபோட்டவர்களையே தியாகிகளாகவும் கதாநாயகர்களாகவும் பெறும் துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளானது.

தொடர்ச்சியாக இவ்வாறான உள்முரண்பாடுகளை உருவாக்கி அவற்றைக் கையாள்வதனூடாக தேசியவாதத்தின் தலைமையையே தமது கையிலெடுத்துக்கொண்டு அதனைச் சீரழிக்கும் பணியைத் தமது அந்நிய எஜமானர்களுக்காக இந்த நிலப்பிரபுக்கள் மேற்கொண்டனர்.

1915ம் ஆண்டில் நடைபெற்ற முஸ்லிம் சிங்கள கலவரத்தினைத் தூண்டியவர்கள் எனக் கருதப்படுபவர்களுள் முக்கியமானவர்களாக D.S.சேனநாயக்க என்ற இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி D.B.ஜெயதிலக்க று.யு.சில்வா Dr. ஹேவா வித்தாரண என்ற அனகாரிக்க தர்மபாலவின் சகோதரர் ஆகியோர் அடங்குவர்.

இவ்வாறு வலுப்பெற்ற நிலப்பிரபுக்களின் தலைமை தேசிய பொருளாதார உருவாக்கத்திலிருந்தும் அபிவிருத்தியிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும் நாடு தழுவிய தேசிய உணர்விற் கெதிராகச் செயற்படவும் அந்நிய மூலதனத்தின் தரகர்களாகச் செயற்

படிப்பகம்

www.padippakam.com



படவும் ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்தது மட்டுமல்லாது இனவாதத்தையும் தமது கொள்கைகளுள் ஒன்றாகக் கொண்டிருந்தது.

இந்தத் தலைவர்களில் D.S.சேனாநாயக்க போன்ற பலர் கிறிஸ்தவர்களாக இருந்தபோதிலும் தம்மை பௌத்தத்தின் பாதுகாவலர்களாகவும் பௌத்த இனவாதிகளாகவும் காட்டிக்கொண்டு கூறுபோடப்பட்ட தேசியவாதிகளின் பெரும்பான்மைப்பகுதியான சிங்கள தேசியவாதிகளைத் தமது தலைமைக்குள் கொண்டுவந்தனர்.

சந்தேக உணர்வும் உள்முரண்பாடுகளும் இனவாதமும் திட்டமிடப்பட்டு வளர்க்கப்பட்ட நிலையில், மக்களிடையே பரஸ்பரத் தொடர்பு குறைந்த நிலையில் மொழியையும் கலாச்சாரத் தொடர்புகளையும் பிரதேசவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டு சந்தைப் பொருளாதாரம் உருவாகத் தொடங்கியது. இந்தச் சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி தேசிய இனங்கள் உருவாகின.

இவ்வாறு உருவான தேசிய இனங்கள் ஆதிக்கத்திலிருந்த நிலப்பிரபுத்துவம் சார்ந்த அந்நியத் தரகுகளுக்கு எதிரான உணர்வுடன் வளர்ச்சியடைய முற்பட்டபோதெல்லாம் இன உணர்வு தூண்டிவிடப்பட்டு சீரழிக்கப்பட்டது.

இந்த அந்நிய மூலதன ஆதிக்கத்திற்கு வசதியான சமூகக் கட்டமைப்பைத் தொடர்ச்சியாகப் பேணும் வகையில் இலங்கையின் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. இது தேசிய இனங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை ஊக்குவித்தது.

1945ம் ஆண்டில் சோல்பரிக் கமிஷன் சிபாரிசுகளின் பின்னர் சோல்பரியே பின்வருமாறு கூறினார்.

மேற்கு நாடுகளின் ஜனநாயக அரசியல் திட்டங்களை இன, மத ரீதியில் பிளவுண்ட நாடுகளில் அறிமுகப்படுத்தும்போது அவர்கள் மேற்கு நாடுகளைப் போன்று சமூக அரசியல் ரீதியில் பிரியாமல் இன, மொழி அடிப்படையிலேயே பிரிவர். இதனால் மேற்குலகில் பின்பற்றும் பாராளுமன்ற அரசியல் முறைகளை இங்கு பின்பற்றுவது கடினமானது.

இந்தக் கருத்தினை மேற்கூறப்பட்ட இலங்கையின் சமூக அரசியல் பகைப்புலத்தில் பொருத்தி ஆராயும்போது பல உண்மைகள் புலப்படும்.

சோல்பரி கூறுவதுபோல மக்கள் சமூக அரசியல்ரீதியில் பிளவுபடாதபோது புதிய சமுதாய எழுச்சிகளினூடாக தேசியப் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டிருக்கும். புதிய ஒன்றிணைந்த தேசம்

www.padippakam.com



அந்நியப் பொருளாதார ஆதிக்கத்திற்கெதிராக சொந்த மூலதனத்தை உருவாக்கியிருக்கும்.

அவர் கூறுவது போல இன, மொழி அடிப்படையில் பிளவுபடும் போது மக்கள் மத்தியிலிருக்கும் தேசிய உணர்வு கூறுபோடப்பட்டு அது தமக்குள்ளேயே மோதிக்கொள்ளும். இதனால் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கெதிரான உணர்வு மறைந்துபோகும். அந்நிய ஆதிக்கம் தமது உள்ளூர் பிரதிநிதிகளினூடாகத் தொடரும்.

எனவே இந்த அரசியல் அமைப்பு முறையானது தேசிய இனப் பிளவுகளை நிரந்தரமான தொடர்ச்சியாக்கியது. தேசிய மூலதன உருவாக்கத்தைத் தடைசெய்து அந்நிய மூலதன ஏற்றுமதியை நோக்க மாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அரசியல் பொருளாதார அமைப்பு முறையானது பல தேசிய இனங்களையும் நிலப்பிரபுத்துவத் தரகர் களது ஆதிக்கத்தையும் தேசிய இனச்சிக்கல்களையும் உருவாக்கியது.

இந்தச் சமூகக் கட்டமைப்பிற்கு எதிரான மத்தியதர வர்க்க தேசியவாதிகளினது போராட்டங்கள் ஆரம்பத்தில் எழுந்தபோதும் அது இனவாத அரசியலினால் சீரழிக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டது.

மேல் மத்தியதர, மத்தியதர வர்க்கங்கள் தேசிய உணர்வு கொண்டு நாட்டையும் தேசியத்தையும் கட்டியமைக்க முற்பட்ட போதெல்லாம் இனவாதத்தை முன்னிறுத்தி அவர்களது குரல்கள் மழுங்கடிக்கப்பட்டன. இந்த இனவாத அரசியல் மறுபுறத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்கள் மத்தியில் விரக்தியையும் வெறுப்பையும் உருவாக்க தேசிய விடுதலை இயக்கங்களும் தேசியக் கோரிக்கைக்காகவும் சிறுபான்மை இன மக்கள் மத்தியிலிருந்து உருவாகத் தொடங்கின.

சுதந்திரத்துக்குப் பின்னர் நிறுவப்பட்ட முதலாவது அரசாங்கம் டீ.எஸ்.சேனாநாயக்க தலைமையிலானதாகும். இவர்தான் இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாவார். இவர் பதவிக்கு வந்த காலத்தில் மறுபடியும் தேசிய இயக்கங்களுக்கும் இடதுசாரி இயக்கங்களுக்கும் எதிராகவும் தமிழ் சிங்கள இணைவுபெற்ற நாடு தழுவிய தேசியவாதத்திற்கு எதிராகவும் தமது பலத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதன் அடிப்படையில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய தென்னிந்தியத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆங்கிலேயர்களால் காலத்திற்குக் காலம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட வர்களாவர். சுதந்திரத்துக்கு முன்னர் இவர்களால் தெரிவுசெய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



எட்டு அங்கத்தவர்கள் அரசவையில் இருந்தனர். 1947இல் பதவிக்கு வந்த டீ.எஸ்.சேனநாயக்கா அரசு இவர்களின் குடியுரிமையை தனது குடியுரிமைச் சட்டத்தின்மூலம் ஒரே இரவுக்குள் பறித்து இந்தியத் தமிழர்களை நாடற்றவர்களாக்கிற்று.

இன ரீதியிலான அரசியலும் பௌத்த சிங்கள மேலாதிக்கமும் மேலும் வலுப்பெற ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பின் ஆதிக்க சக்திகளாக இருந்துவந்த தமிழ் நிலப்பிரபுக்கள் தமது சொந்த அரசியல் நோக்கங்களோடு பல கட்சிகளை ஆரம்பித்தனர்.

தெற்கைப் போலவே வடக்குகிழக்கிலும் உருவாகி வளர்ந்த தேசியவாதம் அடிப்படையில் தேசிய மூலதனத்தையும் தேசிய சந்தையையும் ஆதாரமாகக் கொண்டிருந்தது. இந்தத் தேசிய மூலதனம் என்பது நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பிற்கும் அந்நிய மூலதனத்திற்கும் எதிரானதாக அமைந்திருந்தது. நிலப்பிரபுக்கள் அந்நிய மூல தனத்தோடு சமரசம் செய்துகொள்ள மத்தியதர வர்க்கத்தின் மேலணிகள் தேசிய முதலாளிகளாக உருவாக முடியாத நிலையில் அந்நிய மூலதனம் ஆதிக்கம் செலுத்தியது. இதனால் இயல்பாகவே தேசிய உணர்வுகொண்ட அந்நிய மூலதனத்திற்கும் நிலப்பிரபுத் துவத்திற்கும் எதிரான வர்க்கமாகத் திகழ்ந்த தேசிய உணர்வுகொண்ட இந்த மத்தியதர வர்க்கம் தமது தேசிய நலனுக்காக சிங்கள பெருந் தேசியவாதத்துடன் போராட வேண்டிய நிலை ஏற்பட அடிப்படை முரண்பாடாக அமைந்த நிலப்பிரபுக்களுக்கு எதிரான முரண் பாடானது இரண்டாம் பட்சமாகத் தள்ளப்பட்டது. பிரதான முரண்பாடான பெருந்தேசியவாதம் மேல் நிலைக்கு வந்தது. இதனால் உற்பத்தி உறவுகளின் எதிர் எதிர் சக்திகள் சமரசம் செய்துகொள்ள அடிப்படை முரண்பாட்டின் பிரதான எதிரிகளான நிலப்பிரபுக்கள் தமிழ் தேசியவாத்தத்தைக் கையிலெடுத்துக்கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மாறினர்.

இந்தச் சிக்கலான சமூக அரசியற் பகைப்புலத்திலே 1949ம் ஆண்டில் எஸ்.ஜே.வீ. செல்வநாயகத்தின் தலைமையில் தமிழரசுக் கட்சி உருவானது. சமஷ்டி அரசுக்கான கோரிக்கையை முன்வைத்த தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் வாக்குகளை நம்பித் தனது அரசியலை ஆரம்பித்தது.

1956இல் S.W.R.D.பண்டாரநாயக்காவின் தலைமையில் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கம் மறுபடி சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டிருந்த இனவெறியைத் தட்டியெழுப்பி தனிச் சிங்களச் சட்டத்தை முன்வைத்து ஆட்சியை நிலைநாட்டிக்கொண்டது. இதன் விளைவாக இலங்கையில் தமிழ் மக்கள் மீதான சிங்கள இனவாதி

படிப்பகம்

www.padippakam.com



களின் தாக்குதல் பெரும் இனக்கலவரத்தை ஏற்படுத்திற்று. பல தமிழர்கள் கொல்லப்பட்டும் வடகிழக்கு நோக்கி விரட்டப்பட்டும் இனவாதத் தீ கொழுந்துவிட்டெரிந்தது.

இவரது அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களின் பின்னர் 1958ம் ஆண்டில் தமிழரசுக் கட்சித் தலைவர் S.J.V.செல்வநாயகத்திற்கும் S.W.R.D.பண்டாரநாயக்காவிற்கும் இடையில் முதலாவது தமிழ்சிங்கள ஒப்பந்தம் கைச்சாத்தானது.

தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்குவது தொடர்பான இந்த ஒப்பந்தம் மீண்டும் ஒரு முறை இலங்கையில் இனமுறுகல் நிலையை ஏற்படுத்திற்று.

தமிழ் மொழிக்கு சிறுபான்மை அரச மொழி என அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் வடகிழக்கு மாகாண நிர்வாகத்திற்கான பிரதேச சபை அமைக்கப்பட வேண்டும் என்றும் பிரதேச சபையின் பொறுப்பில் விவசாயம், கூட்டுறவு, குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடி, வீடமைப்பு, நிதி, சமூகசேவை, மின் விநியோகம், நீர்ப்பாசனம் என்பன அமைய வேண்டும் என்றும் கோரப்பட்டது.

இதற்கு முதலாவதாக எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் பௌத்த குருமார்களேயாவர். இவர்களைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி இதனை அமைப்புமயப்படுத்திய நாடு தழுவிய எதிர்ப்பாக்கியபோது அவ்வொப்பந்தம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் பிரிட்டிஷ் ஆட்சியில் உருவாக்கப்பட்டு அனகாரிக்க தர்மபாலவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பௌத்தசிங்கள பெரும் தேசியவாதம் முழுவதுமாக அமைப்புமயப்பட்டிருந்தது தெளிவாகின்றது. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் திட்டமிட்டு வளர்க்கப்பட்ட இந்த பௌத்த சிங்கள உணர்வானது சிறிய கிராமங்கள் வரை பரவியிருந்தது.

ஆதிக்கம் செலுத்தும் சக்திகளாக பெருநிலப்பிரபுக்களும் அந்நிய மூலதனத் தரகர்களும் சமூகத்தின் உச்ச நிலையிலும் இவர்களது ஆதிக்கத்திற்கு எதிராக நேரடியாகவும் மறைமுகமாகவும் போராடிய மத்தியதர வர்க்கத்தின் பேரணிகளும் மத்தியதர வர்க்கமும் பிரதான எதிர்ப்புச் சக்திகளாகத் திகழ்ந்தனர். இங்கே தேசிய முதலாளிகளாக மாறத் தலைப்பட்டுக்கொண்டிருந்த இந்த மத்தியதர உயரணிகளின் நேச சக்திகளாக மத்தியதர கூலி மற்றும் வறிய விவசாயிகளும் தொழிலாளர்களும் திகழ்ந்தனர்.

அடிப்படையில் தேசிய உணர்வுகொண்ட தேச முதலாளிகளாக மாறத் தலைப்பட்ட மத்தியதர வர்க்கமும் அதனைச் சுற்றி அணி

படிப்பகம்

www.padippakam.com



திரண்ட ஏனைய சமூகத்தின் பகுதிகளுக்கும் சமூகத்தின் அதிகார சக்திகளான அந்நிய மூலதனத் தரகர்களுக்கும் மற்றும் நிலப் பிரபுக்களுக்கும் இடையிலான முரண்பாடே சமூகத்தின் அடிப்படை முரண்பாடாக அமைந்திருந்தது.

இந்த முரண்பாடான தமிழ் சிங்களம் என்ற வேறுபாடு இல்லாதிருந்திருந்தால் அடிப்படையில் நாட்டின் சமூக உற்பத்திச் சக்திகளுக்கிடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாக அமைந்திருக்கும்.

ஆனால் மறுதலையாக ஏற்கெனவே அமைப்புமயப்படுத்தப் பட்டிருந்த சிங்களபௌத்த பெருந்தேசியவாதமும் அதனை நோக்கி அணிதிரண்ட சிங்கள மக்களும் இந்த அடிப்படை முரண்பாட்டைக் காணத் தவறினர். இந்த நிலையில் இதனால் இலாபமடைந்தவர்கள் அந்நிய மூலதனத் தரகர்களும் நிலப்பிரபுக்களுமேயாவர். இந்த ஆதிக்க சக்திகள் தேசியவாதிகளான மத்தியதர வர்க்க அணிகளை பௌத்த சிங்கள தேசியவாதக் கோஷத்தின்கீழ் அணிதிரட்டுவதினூடாக ஒரு புறத்தில் தமக்கு எதிரான இந்த அணிகளின் போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் முறியடிக்கச்செய்தும் மறுபுறத்தில் இந்த மத்தியதர வர்க்கத்தையும் அதன் நேச சக்திகளையும் தமது ஆட்சி அதிகாரத்திற்கான ஆதரவு சக்திகளாகவும் பெற்றுக்கொண்டனர்.

அதாவது அடிப்படையில் தமது எதிர்ப்புச் சக்திகளையே தமது வாக்குப் பலத்திற்கான ஆதரவு சக்திகளாகவும் பெற்றுக்கொண்டனர்.

பிரதான அரசியல் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் அடிப்படையில் அந்நிய மூலதனத் தரகர் களையும் பெருநிலப்பிரபுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி வந்ததால் இந்த அமைப்புமுறைக்கு எதிரான போக்கு என்பது அவர்களின் இருப்புக்கு எதிரான போக்கு என்பதால் இனவாதத்தையும் பௌத்த சிங்கள தேசியவாதத்தையும் ஆதரித்தும் தூண்டியும் வந்தன.

இந்த அரசியல் சமூகப் பின்னணியில்தான் 1958இல் உருவான பண்டா-செல்வா ஒப்பந்தமும் கைவிடப்பட்டது. இந்த நிலையில் ஏற்கெனவே இருந்துவந்த தமிழ் மக்களின் சிங்கள அரசமைப்பு மீதான வெறுப்புணர்வு அதிகரிக்கத் தொடங்கியது. ஏற்கெனவே சைவத் துறவியான ஆறுமுக நாவலரின் காலத்திலிருந்து மூலதன உருவாக் கத்தின் மேல்கட்டுமானக் கூறாக வளர்ந்துகொண்டிருந்த தேசிய வாதம் உறுதியான தமிழ்த் தேசியவாதமாக வளரத் தொடங்கியது.

சிங்களப் பகுதிகளைப் போலவே நிலப்பிரபுக்களுக்கும் பிரித் தானிய அந்நிய மூலதனத்திற்கும் எதிரான தேசிய உணர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய மத்தியதர வர்க்க அணிகளின் சாதிப் போராட்டங்கள் போன்றவற்றால் கலங்கிப்போயிருந்த தமிழ் அதிகார

படிப்பகம்

www.padippakam.com



சக்திகள் தமிழ் தேசியவாதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதனூடாக இந்த மத்தியதர வர்க்கத்தையும் அதன் நேச அணிகளையும் இணைத்துக்கொண்டு தமது அதிகாரத்தை நிலைநிறுத்தும் கருவியாகத் தமிழ் தேசியவாதத்தைப் பயன்படுத்தத் தொடங்கின.

ஒரு புறத்தில் சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தை அதன் நிலப்பிரபுத்துவ சக்திகளும் அந்நிய மூலதனத் தரகர்களும் பிரதிநிதித்துவப்படுத்த, மறுபுறத்தில் தமிழ் தேசியவாதத்தைத் தமிழ் நிலப்பிரபுக்களும் அந்நிய மூலதனத் தரகர்களும் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு விசித்திரமான சமூக அமைப்பு முறையே நிலவி வந்தது.

மொத்த சமூகத்தையும் கூறுபோட்டுச் சீரழித்த இந்த முரண்பாடுகள் 1958ம் ஆண்டிலிருந்து மேலும் கூர்மையடையத் தொடங்க தமிழ், தமிழ் பேசும் முஸ்லிம்கள், மலையகத் தமிழ் தேசிய இனங்கள் மீதான சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் அரசியல், பொருளாதார, சமூக, இராணுவ அடக்குமுறை அதிகரிக்கத் தொடங்கியது.

தேசியவாத முகமூடியை அணிந்துகொண்டிருந்த ஏகாதிபத்தியம் சார்பான முதலாளித்துவச் சக்திகள் மேலும் மேலும் தமது அரசியல் பொருளாதார பலத்தை அதிகரிக்க இலங்கை மக்கள் மேலும் மேலும் வறுமை நிலைக்கும் அடிமை நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

1958இலிருந்து வளர்ச்சியடைந்த இந்த அபாயகரமான அரசியல் சூழ்நிலையை சமூகத்தின் ஆதிக்கச் சக்திகள் மேலும் மோசமடையச் செய்தன.

1960ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க தாம் தேர்தலில் பெரும்பான்மைப் பலம் பெறாமல் போய்விடலாம் என்ற சந்தேகத்தில் தமிழரசுக் கட்சியுடனும் லங்கா சமசமாஜக் கட்சியுடனும் செய்து கொண்ட உடன்பாடு அவர் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டதும் கைவிடப்பட்டது.

1965இல் ஐக்கிய தேசியக் கட்சி பிரதம மந்திரி டட்லி சேனநாயக்காவிற்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் S.J.V.செல்வநாயகத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான ஒப்பந்தம் பௌத்த குருமாரினதும் - லங்கா சுதந்திரக் கட்சியினதும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

1983இல் பிரதமராகவும் பின்னர் ஆட்சியமைப்பு முறையை மாற்றி ஜனாதிபதியாகவும் உருவான J.R.ஜயவர்த்தனா வெளிப்படையாகவே தமிழர்களுக்கு எதிரான கோஷங்களை முன்வைத்து சிங்கள பெரும் தேசியவாதத்தை மேலும் தீனியிட்டு வளர்த்தார்.

1983இல் இலங்கை கொடூரமான இனக்கலவரத்தையும் சந்தித்தது. அரசால் மறைமுகமாகத் தூண்டிவிடப்பட்ட இந்தக் கொடூரமான இனக்கலவரம் . தமிழர்களை கோரமான கொலைக்

படிப்பகம்

www.padippakam.com



களத்திற்குத் தள்ளியது. இதன்பின்னர் 1983-84ம் ஆண்டுகளில் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டங்களும் மகாநாடுகளும் எந்த முடிவுமின்றி இடைநிறுத்தப்பட்டன.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர்களின் தேசியப் போராட்டம் ஒரு புதிய பரிணாமத்தை எடுத்தது.

ஆரம்பத்திலிருந்தே கொழும்புசார் அந்நிய மூலதனத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தலைமைகளே வடகிழக்குத் தமிழர்களின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர். இவர்கள் ஒரு புறத்தில் சாதிய அமைப்புமுறையைப் பேணுவதனூடாகவும் இடதுசாரி மற்றும் தேசிய இயக்கங்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிப்பதினூடாகவும் நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையின் பிரதிநிதிகளான இவர்கள் மறுபுறத்தில் சிங்கள அந்நிய மூலதனத்தின் தரகர்களுடன் கூட்டுச்சேர்ந்து அதன் அடிப்படை நலனைப் பிரதிபலிப்பவர்களாகவும் இருந்தனர்.

1956ம் ஆண்டு S.W.R.D.பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தபோது தேசியவாதப் போக்கும் அரசிற்கெதிரான போக்கும் மத்தியதர வர்க்கத்தினைச் சுற்றி மக்கள் இணைந்துவந்த நிலைமையும் வெகுவாகக் காணப்பட்டன. இந்த நிலையில் இந்தப் புறச் சூழலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகார வர்க்கங்களுக்கிடையிலான போட்டியே தனிச் சிங்களச் சட்டத்தின் பின்புலமாகும். இவரது அரசுடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் அடிப்படையில் மத்தியதர வர்க்கமும் கிராமப்புற புத்திஜீவிகளும் பௌத்த பிக்குகளும் ஆசிரியர்களும் ஆயர்வேத வைத்தியத் துறையைச் சேர்ந்தவர்களுமேயாவர். உண்மையில் உத்தியோகபூர்வ மொழியாக இருந்துவந்த ஆங்கில மொழி சிங்கள மொழியால் பிரதியிடப்பட்டது. ஆனால் தமிழ்மொழி புறக் கணிக்கப்பட்டது.

ஆங்கிலத்தைப் பேசவும் புரிந்துகொள்ளக்கூடியவர்களுமாக இருந்தவர்களின் தொகை 6 சதவீதமாக மட்டுமே இருந்த நிலையில் சிங்கள மொழிப் பிரதியீடு பெரும்பான்மைச் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தியதுடன் மட்டுமன்றி வளர்ந்துவந்த தேசியவாதத்தையும் தேசிய உணர்வாளர்களையும் அணிதிரட்டியது. அதே நேரத்தில் தமிழ்த் தேசியவாதிகளையும் தேசப்பற்றையும் அந்நியப்படுத்தி நாடு தழுவிய தேச உணர்வைக் கூறுபோட்டு சிங்கள பௌத்த பெருந்தேசிய உணர்வாக மாற்றியது.

ஆங்கிலம் மட்டுமே படித்த சிங்கள தமிழ் உயர்வகுப்பினருக்கும் எதிரான இந்தச் சட்டம் S.W.R.D.பண்டாரநாயக்கவை உண்மையான தேசியவாதியாகச் சமூகத்திற்குக் காட்டிற்று.

படிப்பகம்

www.padippakam.com



இலவசக் கல்விமுறையும் தாய்மொழிக் கல்விமுறையும் சட்டமாக்கப்பட்டதால் சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்களுக்கும் உயர்கல்விக்கான வாய்ப்பை ஏற்படுத்திற்று.

1970ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (S.L.F.P.) அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் சட்டமானது பல்கலைக்கழக நுழைவில் இனவாரியான தரப்படுத்தலைக் கொண்டுவந்திருந்தது. இதன் காரணமாக தமிழ் மாணவன் சிங்கள மாணவனைவிட அதிகமான மதிப்பெண்களைப் பல்கலைக்கழக நுழைவிற்காகப் பெற வேண்டியிருந்தது.

இந்தச் சட்டமூலமானது கல்வியை அடிப்படையான சமூக அந்தஸ்துக்கான மூலதனமாக நம்பியிருந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழர்கள் தொழில்ரீதியிலும் கல்வியிலும் மொழிரீதியான அடக்குமுறைக்கு உட்பட்டதாக உணரத் தொடங்கினர். இது தவிர தமிழர்களின் பாரம்பரியக் குடியேற்றங்கள் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள் மூலம் சிங்களவர்களால் நிரப்பப்பட்டன. திருக்கோணமலையில் 1946இல் 20.7 சதவீதமாக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை 1981ம் ஆண்டில் 33.6 சதவீதமாக உயர்ந்தது. அரச உதவியுடன் திட்டமிட்ட இந்தக் குடியேற்றங்கள் தமிழ்ப் பகுதி முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அதிகார வர்க்கம் உருவாக்கிய இனவாதிகளைத் தாமே தீனி போட்டு வளர்க்க வேண்டிய சூழ்நிலை அந்த வர்க்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. ஒரு புறத்தில் தேசியவாதக் கருத்துக்களைப் பலப்படுத்தியும் தேசிய இனங்களைக் கூறுபோடுவதினூடாக அதனைப் பலவீனப்படுத்தியும் தனது இருப்பு நிலையை வலுப்படுத்திக்கொள்ளும் தந்திரோபாயத்தைப் பயன்படுத்திய இந்த அந்நிய மூலதனத் தரகர்களும் பெருநிலப் பிரபுக்களும் தமது சொந்த நலன்களுக்காக மொத்த நாட்டையே சீரழித்துக்கொண்டிருந்தனர்.

இந்த அரசியல் பாகுபாட்டுடன் கூடவே தமிழர்களுக்கெதிரான கலவரங்களும் வன்முறைகளும் பல சமயங்களில் அரச இயந்திரத்தின் ஆதரவுடன் அதிகரிக்கும் வேகத்தில் நடந்தேறியது. 1956, 1958, 1977, 1981, 1983ம் ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்கள் பெரும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்திற்று.

1972இல் திருத்தியமைக்கப்பட்ட சட்ட அமைப்பின்படி சிங்கள மொழி என்பது உத்தியோகபூர்வ மொழியாகவும் பௌத்த மதமே பிரதான மதமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறான தொடர்ச்சியான திட்டமிட்ட இன அடக்குமுறை வரலாறு என்பது சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்தல் என்பது சாத்தியமற்றது என தமிழ் மக்களை உணரவைத்தது.

தமிழ்த் தேசிய உணர்வை வெளிப்படுத்தும் போராட்டங்கள் வட கிழக்குப் பகுதிகளில் தீவிரமடைய தமிழ் அரசியற் கட்சிகளும் உள்ளக மாற்றங்களைச் சந்திக்கத் தொடங்கின. கொழும்பு அதிகார வர்க்கம் சார்ந்த தமிழ்த் தலைமையானது உள்ளூர் தேசியவாதிகளால் பிரதியீடுசெய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# 11

## தமிழ்த் தேசியவாதமும் தேசிய சிந்தனையும்

தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதான கட்சிகளின் கூட்டமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணி (T.U.L.F.) தமிழ்த் தேசியவாதத்தின் உச்சநிலையான தனித் தமிழ்நாடு என்ற கோஷத்தை முன்வைத்து அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. சிக்கலான வர்க்க சார்பு நிலையைக் கொண்டிருந்த இந்தக் கட்சியானது தமிழ் தேசிய வாதத்தை மற்றுமொரு புதிய நிலைக்கு வளர்த்தெடுத்தபோதிலும் அந்நிய மூலதனத்திற்கு ஆதரவான அதன் போக்கானது தேசிய வாதத்தைச் சீரழித்ததுடன் பாசிசப் போக்குடைய தேச விடுதலை அமைப்புகளையும் வளர்த்தெடுத்தது.

அடிப்படையில் கொழும்பு சார்ந்த நிலப்பிரபுக்களாலும் தரகு முதலாளித்துவத்திற்குச் சார்பான சக்திகளாலும் தலைமைதாங்கப் பட்ட TULF அது சார்ந்த கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியிலிருந்து உருவான அ.அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையின்போது நிலப்பிரபுத்துவக் கூறுகளுக்கும் அந்நிய மூலதனத்திற்கும் எதிரான போக்கைக் கொண்டிருந்தபோதிலும் நிலை யான வர்க்கச் சார்பற்ற தேசியவாதத்தின் விளைவாக பலமடைந் திருந்த நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ வர்க்கத்தைச் சார்ந்த சார்புநிலையையே தனது இறுதி வடிவமாகக் கொண்டிருந்தது. மறு புறத்தில் காலனிய காலகட்டத்து சமூகப் புறச் சூழலைக் கருத்திற் கொள்ள மறுத்த ட்ரொஸ்கி, ஸ்டாலின், மாவோ மற்றும் லெனின் போன்ற தனிநபர் வழிபாட்டையே மக்கள் தத்துவமாகக் கருதிய இடதுசாரிகள் தாம் சார்ந்ததாகக் கருதிய வர்க்கத்தை தேசிய விடுதலையை நோக்கி அணிதிரட்டத் தவறியதன் விளைவாக தமக் கெதிரான தேசியவாதத்தைத் தாமே கையிலெடுத்த நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ கூட்டு சக்தி தேசியவாதத்தைப் பிரதி

படிப்பகம்

www.padippakam.com



நிதித்துவப்படுத்த முற்பட்டபோது அது ஒரு புறத்தில் தேசியவாதக் கோஷங்களை முன்வைத்ததுடன் மறுபுறத்தில் தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு ஆதரவான தேசிய ஜனநாயகத்தையே மறுத்து பாசிச அமைப்புகளை உருவாக்கிற்று.

1973ம் ஆண்டு நடைபெற்ற T.U.L.F.இன் 12ஆவது மாநில மகா நாட்டுத் தீர்மானங்களின் அடிப்படையில் உற்பத்திச் சக்திகளின் தேசியமயமாக்கலை ஆதரித்த தீர்மானங்கள் அந்நிய மூலதனத்திற் கெதிரான உணர்வை வெளிப்படுத்திய அதே நேரத்தில் சாதீயத்தை ஒழிப்பதற்கு சட்டமியற்றக் கோரியதானது அதன் நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கெதிரான போக்கையும் வெளிப்படுத்தியது. ஆனால் தீண்டாமை ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய பலர் பின்னதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேலணிகளில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

மேலை நாடுகளைப் போலல்லாது மூன்றாம் உலக நாடுகளில் காலனித்துவத்தால் சீரழிக்கப்பட்ட சமூக அமைப்புமுறையில் தேசிய உணர்வுள்ள வர்க்கமாக நிலையற்ற மத்தியதர வர்க்கமே அமைந் திருந்தது. நிலையற்ற ஊசலாடும் தன்மை கொண்ட இந்த வர்க்க மானது உறுதியான பொருளாதார அடிப்படையைக் கொண்டிராத நிலையில் எப்போதுமே தலைமைதாங்கப்படும் வர்க்கமாக இருந் திருக்கிறது. இந்தத் தலைமையானது சமூகத்தின் அடிநிலையிலிருக்கும் மக்கட்பகுதியிலிருந்தோ அல்லது சமூகத்தின் மேல்மட்டத்திலிருக்கும் வர்க்கப்பகுதியிலிருந்தோதான் வழங்கப்பட்டிருக்க முடியும்.

இடதுசாரிகள் தேசியவாதத்திற்குத் தலைமைதாங்க மறுத்த நிலையில் அது நிலப்பிரபுத்துவத் தரகு முதலாளித்துவச் சக்திகளின் கரங்களில் அவர்களின் சொந்த வர்க்க நலனுக்காகப் பயன்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் தேசியவாதமும் பல போராட்டங்களின் இறுதியில் நிலப்பிரபுக்களின் கைகளில் விழுந்தது.

T.U.L.F. ஆரம்பத்தில் தமக்கு எதிரான அரசியல் சக்திகளை அழிப்பதற்காக சட்டவிரோதக் கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித்துறை இளைஞர்களையும் அவர்களுடன் தொடர்புற்றிருந்த ஏனைய பகுதிகளிலிருந்தவர்களையும் பயன்படுத்தியது. எந்தவித அரசியல் நோக்கமுமற்ற, வெறுமனே சட்டவிரோத பொருட்களைத் தென்னிந்தியாவுக்கும் வடபகுதிக் கடற்கரைக்குமிடையில் கடத்திக் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்த கும்பல்களைச் சார்ந்தவர்களுள் இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் குட்டிமணி போன்றவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினால்

படிப்பகம்

www.padippakam.com



அதன் எதிர்ப்புச் சக்திகளை மிரட்டவும் தேவைப்பட்டால் கொலை செய்யவும் பயன்படுத்தப்பட்ட சிலராகும்.

நாட்டின் தேசிய உற்பத்திச் சக்திகளுடன் நேரடியாகப் பிணைக்கப்படாதிருந்த இவர்கள் சார்ந்த வல்வெட்டித்துறையை அடிப்படையாகக் கொண்ட சமூகமானது கடத்தல் தொழிலுக்கு எதிராக இலங்கை அரசின் கெடுபிடிகள் அதிகரிக்க தொழிலற்ற அராஜகவாதிகளாகவும் உதிரிகளாகவும் மாறிய நிலையில் ஏற்கெனவே எழுந்திருந்த ஸ்ரீலங்கா அரசின் இன அடக்குமுறைக்கெதிரான தேசிய போராட்ட வேலைத்திட்டத்தின்கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியால் உள்வாங்கப்பட்டனர்.

1980களின் ஆரம்பத்தில் TULF இன் தீவிரமற்ற போக்குடன் முரண்பட்ட இவர்கள் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO)என்ற அமைப்பின் கீழ் தங்கத்துரை என்பவரின் தலைமையில் அமைப்பாகிக் கொண்டனர். குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோர் வழிநடத்த LTTEஇன் இன்றைய தலைவர்கள் உட்பட பல இளைஞர்கள் அந்த அமைப்புடன் இணைந்து 1982ம் ஆண்டு நீர்வேலியில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை உட்பட பல அரசிற்கெதிரான வன்முறைப் போராட்டங்களை மேற்கொண்டனர்.

முன்னர் குறிப்பிட்டதுபோல சமூகத்தின் அடிமட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இடதுசாரிகள் தேசியப் போராட்டத்தை நிராகரிக்க அது நிலப்பிரபுத்துவ அந்நிய மூலதன சார்புச் சக்திகளால் உள்வாங்கப்பட்ட நிலையில் வன்முறைப் போராட்டமும் இதன் தொடர்ச்சியாகவே அமைந்தது.

இதன் விளைவாக உண்மையான தேசிய உணர்வு கொண்ட தேசிய சக்திகள்கூட எதிரிகளாகக் காணப்பட்டு அழித்தொழிக் கப்பட்டனர். தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான போராட்ட இயக்கங்கள் தொடர்பான ஆய்வு என்பது இங்கு ஆய்வுக்கருவாக இல்லை என்பதால் அது இங்கு விரிவாக ஆராயப்படவில்லை என்றாலும் அடிப்படையில் தேசிய விடுதலைக்கு எதிரான சக்திகளே தேசவிடுதலைப் போராட்டத்தையும் தேசிய உணர்வையும் வழிநடத்திய துர்ப்பாக்கிய நிலைதான் தமிழ்ப் பகுதிகளிலும் சிங்களப் பகுதிகளிலும் காணப்பட்டன.

அடிப்படையில் சமூகத்தின் கீழ்த்தட்டிலிருந்த தலைமைதாங்கும் வலுவுள்ள மக்கட்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்புகள் தேசியப் போராட்டத்தை நிராகரித்த நிலையில் அதன் சமூகத்தில் எதிர்த்தரப்பு தலைமையின் கைகளுக்கு மாறியதன் விளைவாக தேசியவாதிகள் மட்டுமல்லாது நிலப்பிரபுத்துவக் கட்டமைப்புக்கு எதிரான கருத்துகளை முன்வைத்தவர்களும் அவர்கள் சார்ந்த

படிப்பகம்

www.padippakam.com



அமைப்புகளும் ஜனநாயகவாதிகளும் புத்திஜீவிகளும் மிரட்டப்பட்டும் கொலை செய்யப்பட்டும் அந்நியமாக்கப்பட்டனர். இடதுசாரிக் கருத்து களை முன்வைத்தவர்கள் மக்கள் விரோதிகளாகச் சித்தரிக்கப்பட்டனர்.

சுந்தரம், மனோ மாஸ்டர் போன்ற தேசியவாதிகளின் கொலைகளிலிருந்து இறுதியில் ஆயிரக்கணக்கான தேசியப் பற்றுக் கொண்ட இளைஞர்கள் வரை கொலைசெய்யப்பட்டபோதும் பாசிசப் போக்குக் கொண்ட தேசவிரோதிகளுக்கு நிலப்பிரபுத்துவ சித்தாந்தத் தால் தலைமை தாங்கப்பட்ட பழமைவாத தமிழ்த் தேசிய இனம் தேசிய உருவம் கொடுத்தது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பையும் தரகு முதலாளித்துவத் தையும் பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்புகள் தேசியவாதத்தையும் தமது சொந்த வர்க்க நலனுக்காகத் தவிர்க்க முடியாதவாறு பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய தேவையின் வெளிப்பாடே TULFஉம் அதன் ஆரம்பகால பாதாள அமைப்புகளாக இருந்து பின்னாளில் தேசிய விடுதலை அமைப்புகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்ட TELO, PLOTTE, LTTE போன்ற விடுதலை இயக்கங்களாகும்.

இந்த அமைப்புக்களிலிருந்து கொள்கையளவில் வேறுபட்ட திட்டமிடப்படாத இடதுசாரிக் கோஷங்களுடாக தேசியப் போராட்டத்தில் இணைந்த அமைப்புக்கள் EPRLF மற்றும் EROS ஆகியனவாகும். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழப் புரட்சி அமைப்பு (EROS) ஆகியன ஒரு புறத்தில் இடதுசாரிக் கோஷங்களை முன்வைத்தபோதும் மறுபுறத்தில் அதற்கான எந்த அடிப்படைத் திட்டமிடலும் அதனூடாக நடைமுறை அமைப்பு முறையுமின்றி அந்நியப்பட்டுப் போயிருந்தாலும் இந்த அமைப்புகளில் பரந்து கிடந்த இடதுசாரிகளும் தேசியவாதிகளும் தேசப் பற்றாளர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் நம்பிக்கைதரும் கருத்துகளை முன்வைத்ததுடன் அதற்கான போராட்டங்களையும் முன்னெடுக்கத் தலைப்பட்டனர்.

1983ம் ஆண்டு நாட்டை உலுக்கியதும் சிங்கள அரசினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டதுமான இன அழிப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னர் இந்த எல்லா அமைப்புகளுமே வீக்க நிலை இராணுவ வளர்ச்சியடைந்திருந்தன. இந்திய அரசின் பொரு ளாதார, இராணுவ உதவியினால் எற்பட்ட இந்த வளர்ச்சியானது தேச விடுதலை இயக்கங்களுக்குள்ளேயே ஜனநாயக தேசபக்த சக்திகளின் குரல்வளையை நசித்து மொத்த தேச விடுதலைப் போராட்டத்தையும் பாசிசமயமாக்கியது.

தவிர மாவோயிஸ விடுதலை இயக்கங்களான தமிழ் தேசிய விடுதலை முன்னணி (NLFT), தமிழ் மக்கள் விடுதலை முன்னணி

படிப்பகம்

www.padippakam.com



(PLFT), தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை (TMPP) போன்ற அமைப்புக்கள் படிப்படியாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டன. ஒப்பீட்டளவில் முற்போக்கான தேசியவாதக் கருத்துக்களை முன்வைத்த இவ்வமைப்புக்களின் உறுப்பினர்கள் LTTEஇனால் கொலை செய்யப்பட்டும் சிறைப்பிடிக்கப்பட்டும் அழிக்கப்பட்டனர்.

1985ம் ஆண்டு TELO இயக்கம் LTTEஇனால் நிர்மூலமாக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் எதிர்பார்த்ததைப் போலவே அவர்கள் ஆபத்தானவர்களாகக் கருதிய EROS உட்பட சிறிய இடது சாரிக் கருத்துக்களைக் கொண்ட அமைப்புகளும் செயலிழந்து போயின.

1986ம் ஆண்டு இறுதிப் பகுதியில் EPRLF அழிக்கப்பட்ட பின்னர் EROS அமைப்பு LTTE உடன் சங்கமமானதைத் தொடர்ந்து LTTE தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்திய பின்னர் தமிழ் மக்களின் அடக்குமுறைக்கெதிரான தேச விடுதலைப் போராட்டம் எந்த நம்பிக்கையுமற்று படிப்படியாகச் சீரழிக்கப்பட்டது. தேசபக்தர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் ஜனநாயக சக்திகளும் ஒடுக்குமுறைக்கு எதிரானவர்களும் தேடித்தேடி அழிக்கப்பட்டனர்.

இன்று பௌத்த சிங்கள அடிப்படைவாதத்தை ஆதாரமாகக் கொண்ட சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இதற்கெதிராக இந்தத் தமிழ் அடிப்படைவாதத்தை முன்வைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் வர்க்கசார்பு நிலையில் எந்த முரண்பாடும் இருக்கவில்லை.

சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்திற்கு எதிராக அதன் ஆதார சக்திகளான நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய தமிழ் தேச விடுதலை இயக்கமானது தமிழ் தேசியவாதிகளையும் அதன் ஆதரவு சக்திகளையும் தலைமை தாங்குவதற்குப் பதிலாக அவர்களை அழித்து இந்துதமிழ் அடிப்படை வாதத்தை முன்வைத்து அதன் ஆதார சக்திகளான நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ மனோபாவத்தால் தலைமை தாங்கப்படுகின்றது.

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எந்த அடிப்படை முரண்பாடுகளும் இருந்ததில்லை. இந்த இரு பகுதியினருமே நிலப்பிரபுத்துவ மனோபாவத்திற்கும் தரகு முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சார்பானவர்களே.

நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ சக்திகள் மத்தியிலிருக்கும் உள்முரண்பாடானது அவர்களின் சொந்த நலனுக்காக மொழி ரீதியாகப் பிளவுபட்டதன் விளைவே இலங்கை அரசிற்கும் LTTEஇற்கும் இடையிலான போராட்டமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



விளைவாக உள்நாடுகளில் எந்த அபிவிருத்தியும் தொழில் வளர்ச்சியும் ஏற்படாதவாறு மிகவும் அவதானமாகக் கையாளப்படும் கொள்கைமுறைகள் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

எந்தப் பொருளின் உற்பத்தியும் அந்தந்த நாடுகளில் முழுமையாக நடைபெறுவதில்லை. முழுமையான ஒரு பொருளின் பாகங்கள் வெவ்வேறு மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வெவ்வேறு நாடுகளில் அவை பொருத்தப்படுகின்றன. இதனால் தேசிய வளர்ச்சியூடாக அந்த நாடுகள் ஒரு குறித்த முழுமையான பொருளை உற்பத்தி செய்யும் நாடாக மாறுவது தடைசெய்யப்படுவதுடன் மட்டுமல்லாது ஒரு நாட்டின் உற்பத்தி இன்னொரு நாட்டிலும் இறுதியாக மத்தியத்துவப்படுத்தப்பட்ட ஏகாதிபத்தியத்திலும் தங்கி நிற்கும் நிலையே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த நாடுகளில் ஒரு தேசிய அரசு உருவானாலும் எந்தத் தொழிற்சாலையையும் தேசியமயமாக்கவோ அல்லது தனது நாட்டிற்குச் சொந்தமானது என்று உரிமை கோர முடியாத நிலைமையோ காணப்படும்.

தவிர மேல்நாட்டு வர்த்தக ஸ்தாபனங்களால் உற்பத்தி செய்யப்பட்டுவரும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் மனோபாவமுடைய மேல்தட்டு வர்க்கம் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றது. மிகவும் தரம் குறைந்த தொழில் சட்டங்களுக்கு மாறான அந்நியத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களைக் கையாளும் குறித்த தொகையான அதிகாரிகளின் சம்பளத்தொகை அவர்களின் வாழ்க்கைத் தேவைக்கும் அதிகமானதாகவே வழங்கப்படுகின்றது. இந்த சமூக அமைப்பைப் பாதுகாக்கும் சர்வதேச உதவி அமைப்புகள் (INGO) போன்ற ஏனைய கூறுகளின் அதிகாரிகள் சர்வதேச வர்த்தக ஸ்தாபனங்களுக்கு தரகர்களாகும் உள்ளூர் வர்த்தகர்கள் போன்றோரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து செல்ல அதனூடாக உருவாகும் உபரி என்பது இந்தப் புதிய பணக்கார வர்க்கத்தின் கொள்வனவு மனோநிலையை அதிகரிக்கச் செய்கின்றது. இதனால் உருவாகும் சந்தையில் இலாபமீட்டும் மேல்நாட்டு வர்த்தக மையங்கள் தமது கிளைகளை மூன்றாம் உலக நாடுகளில் பரவவிட்டுள்ளன.

பொருளாதார சர்வதேசமயமாக்கலூடாக உருவாகும் கலாச்சார சர்வதேசமயமாக்கல் உருவாக்கும் கொள்வனவு மனோபாவமானது இந்த உயர் சம்பளத்தால் உருவாகும் உபரியையும் தமது நாடுகளுக்குக் கொள்ளையடித்துச் செல்ல உதவுகின்றது. சர்வதேசிய வங்கிக் கிளைகளின் கடன் அட்டை (Credit Card), கடன் உதவி போன்றவற்றினூடாக உருவாகும் கொள்வனவு மனோபாவம் கொண்ட இந்த மேல்தட்டுப் பணக்கார வர்க்கம் மொத்த சமூகத்தையுமே கொள்வனவுக் கலாச்சாரத்துக்கு இழுத்து வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றாவது உலக நாடுகளிலிருந்த நிலப்பிரபுத்துவத்தோடு கூடிய கலாச்சார அமைப்பு முறை படிப்படியாகத் தகர்க்கப்பட்டு நுகர்வுக் கலாச்சாரமும் அதன் சீரழிந்த பகுதிகளும் மிகத் தந்திரமாக உட்செலுத்தப்படுகின்றது. மறுபடி ஒரு முறை உலகம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது.

இவ்வாறான சமூகச் சீரழிவுகளை மையமாக வைத்து அமெரிக்காவினதும் அதன் சார்பு நாடுகளினதும் பெரு முதலாளி களின் நலன்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்ட சர்வதேசமயமாக்கல் மூன்றாம் உலக நாடுகளில் புதிய சிக்கலான சமூக உற்பத்திச் சக்திகளையும் சமூக உறவுகளையும் உருவாக்கியது.

சர்வதேசமயமாக்கலின் வளர்ச்சியென்பதும் ஊடுருவல் என்பதும் அதன் பண்பும் ஒவ்வொரு நாட்டினதும் மூலவளத்தையும் மக்கள் தொகையையும் ஏற்கெனவே அந்த நாடுகளில் இருந்த சமூக அமைப்பு முறையையும் குறித்து மாறுபடுகின்றது. கொலம்பியாவில் அதன் தாக்கம் பிரேசிலில் ஏற்படுத்திய தாக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைகின்றது. சீனாவும் வியட்நாமும் ஒப்பிடவே முடியாத அளவுக்கு வேறுபாடுகளை உருவாக்கியுள்ளன. மலேசியா வில் இதன் தாக்கம் இந்தியாவின் சர்வதேசமயமாக்கலுக்கு முற்றிலுமாக ஒருமித்ததல்ல.

ஆபிரிக்க நாடுகளில் சர்வதேசமயமாக்கல் உருவாக்கிய புதிய தாராளவாதம் (Neo-liberalism) இந்த நாடுகளை மேலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளியுள்ளது. இந்நிலை மூன்றாம் உலக நாடு களுக்குக் கீழ்ப்பட்ட நான்காம் உலக நாடுகளை உருவாக்கி மேலும் உலகைக் கூறுபோட்டுக்கொண்டிருக்கிறது. போரின் கொடூரமும் அதனாலான வறுமையும் ஸ்ரீலங்காவை நான்காம் உலக நாடுகளில் ஒன்றாக வரிசைப்படுத்திக் காட்டும் நாள் வெகு விரைவில் வரலாம்.

அடிப்படையில் சர்வதேசமயமாக்கல் அல்லது உலகமயமாக்கல் என்பது அடிப்படையில் அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் உள்ளூர்மயமாக்கலே. இந்தியாவில் ஆரம்பித்து பல வளரும் நாடுகள் தமது உற்பத்திகளை வளர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. சீனா, தாய்வான், இந்தியா என்று பல நாடுகள் கணனிப் பாகங் களையும் கணனி மென்பொருட்களையும் உலகுக்கு வழங்குகின்றன. ஒரு வகையில் இந்த ஏற்றுமதி வர்த்தகம் வறிய நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போல மறுதலையான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் அது உண்மையானதல்ல. W T O (The World Trade Organisation) என்ற அமெரிக்காவாலும் அதன் வர்த்தகப் பங்காளர் களாலும் விதிகளின் அடிப்படையிலேயே இந்த ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நடைபெறுகின்றது. WTO என்பது அடிப்படையில்

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்க ஐரோப்பிய செல்வாக்கிற்குட்பட்ட இறுக்கமான விதிகளைக் கொண்ட அமைப்பாகும். உலகப் பொருளாதார அமைப்பு என்பது ஒரு நாடு தனது லாபத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டுமானால் WTOவின் விதிகளுக்கு அமையவே நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தை (Trans-national Trade) மேற்கொள்ள வேண்டுமென்ற வகையில் மிகத் தந்திரமாக அமைக்கப்பட்டுள்ளது. உலகமயமாக்கல் என்ற பெயரில் அமெரிக்காவின் உள்ளூர்மயமாக்கல் நடந்துகொண்டிருக்கிறது. WTOவுடன் இணைந்து Lingua Francaவும் இந்த வர்த்தகத் தரப்படுத்தல் வேலையில் ஈடுபடுகின்றது.

1980களில் நடந்த மொழியியல் ஆராய்ச்சிகளின் தொடர்ச்சியாக பேசுகின்ற மொழியும் உபயோகிக்கின்ற வார்த்தைகளும் சிந்தனை முறையையும் அதன் தொடர்பான முடிவுகளையும் நிர்ணயிப்பதில் முக்கிய பாத்திரம் வகிக்கும் என மொழியியல் வல்லுநர்கள் முடிவுக்கு வந்தனர். இதனடிப்படையில் ஆங்கில மொழி மூன்றாமுலக நாடுகளின் கிராமங்கள் வரை திணிக்கப்படுகிறது. இதனூடாக சிந்தனை முறையும் மாற்றங்களுக்குள்ளாகிறது.

எம்மை அறியாமலேயே உலகமயமாக்கலின் அமெரிக்க நோக்கங்களூடாக எமது தேசத்து மக்களையும் கலாச்சாரத்தையும் ஒரு சில வளர்ச்சியடைந்த நாடுகளின் கொத்தடிமைகளாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

உலகமயமாக்கலின் மற்றுமொரு நோக்கமானது அரசுகளற்ற அரசாங்கங்களை உருவாக்குவதனூடாக அரசாளும் உரிமையை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மாற்றுதலாகும். திட்டமிட்டு வளர்ச்சியடையும் நாடுகளில் அரசுகள் அதிகாரமில்லாத அரசுகளாக மாற்றப்படுகின்றன. உள்நாடுகளில் சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக மட்டுமே அவர்களின் இருப்பு தேவைப்படும் நிலையில் மற்ற எல்லாப் பொருளாதார வர்த்தக உரிமையும் இதற்கான கலாச்சார மற்றும் பாதுகாப்பு உரிமையும் ஒருசில வளர்ச்சியடைந்த நாடுகளின் கைகளுக்கு மாறியுள்ளது.

இதற்கு உறுதுணையாக ஆங்கில மொழியின் விரிவாக்கமும் அரசுசாரா உதவி நிறுவனங்களும் (NGOs) மென்மை வர்த்தகப் பரிமாற்றங்களும் (soft transfers) தொடர்பு சாதனங்களும் திகழ்கின்றன.

முதலாவதாக நாடுகளுக்கிடையேயான வர்த்தகத் தொடர்புகள் குறிப்பாக பல்தேசியக் கம்பனிகளுக்கிடையேயான வர்த்தகத் தொடர்புகள் உள்நாட்டு அரசுகளின் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் நடக்கின்றன. ஏற்கெனவே இருந்த உள்நாட்டு அரசுகளின் கட்டுப்பாடுகள் IMF (International Monetary Fund) இன் கட்டாயப் படுத்தலால் தளர்த்தப்பட்டுள்ளன. இங்கே உள்நாட்டு அரசிற்குத்

படிப்பகம்

www.padippakam.com



தனது வர்த்தகத் தேவையைத் தீர்மானிப்பதற்கே உரிமை இல்லாது போகின்ற நிலையில் வளர்ச்சியடைந்த ஒருசில நாடுகள் WTO, IMF ஆகியவற்றினூடாக இதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றன.

இரண்டாவதாக NGOக்களைக் குறிப்பிடலாம். முன்னர் ஏகாதி பத்திய நாடுகள் தாம் சுரண்டிய பணத்தின் மிகச்சிறிய பகுதியினை மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளுக்கு உதவித் தொகையாக வழங்கி வந்தன. இந்த உதவிப் பணத்தில் சிறிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதனூடாக மக்கள் அரசிற்கெதிராகவும் அதனூடாக வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு எதிராகவும் மாறுவதைத் தடுத்துவந்தன.

சமூகநல அபிவிருத்தித் திட்டங்களுக்காக அவர்களுக்கு வழங்கப் பட்டுவந்த பணத்தின் பெரும்பகுதி இன்று மூன்றாம் உலக நாடுகளில் நிலைகொண்டுள்ள அரசுசாரா சமூகசேவை அமைப்புகளுக்கூடாகவே வழங்கப்படுகின்றன. இதனால் அரசின் சக்தி மேலும் குறைக்கப்பட்டு அது அரசுசாரா நிறுவனங்களின் கைகளுக்கு மாற்றப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் தமது தலைமையகத்தைக் கொண்டியங்கும் இந்த அரசுசாரா நிறவனங்களுக்கான பண உதவித் தொகையும் இந்த ஏகாதிபத்திய நாடுகளாலேயே வழங்கப்படுகின்றது.

உள்நாட்டு அரசின் அதிகாரத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் திட்டமிட்டுக் கொண்டுவர இந்த இரு அமைப்புமுறைகள் தவிரவும் பல்வேறுபட்ட Internet செய்தித்தொடர்பு சாதனங்கள் போன்றவையும் திட்டமிட்ட முறையில் உதவி புரிகின்றன. உலகமயமாதல் என்பது மிகவும் சிக்கலான சர்ச்சைக்குரிய பல்வேறு கருத்தாடல்களுக்குட் பட்டிருக்கும் ஒன்றாயினும் இது வளர்ச்சியடைந்த நாடுகளின் சொந்த நலனுக்கான உலக மறு ஒழுங்கமைப்பு என்பது தெளிவாகும்.

நாட்டுக்கு நாடு இதன் தன்மை வேறுபட்டுக்கொண்டிருக்கிறது. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உலகமயமாதலின் அடிப்படைகள் அந்நாடுகளின் சமூக அமைப்பை மாற்றுகின்ற முறையானது சர்வதேசிய அரசியலிலும் தேசிய இனங்களினதும் தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா, சீனா போன்ற நாடுகளைப்பொறுத்தவரையில் தமக் குள்ளேயே தமது தேவைக்கும் அதிகமான சந்தையைக் கொண்டி ருக்கும் நாடுகளாகும். சீனாவின் அரசியல் அமைப்பு சீனப் புரட்சிக்குப் பின்னான சமூகக் கட்டமைப்பு என்பன தொடர்பான பல்வேறுபட்ட கருத்துகள் இருப்பினும் இந்தியாவின் மேலதிக சந்தை என்பது உலகப் பொருளாதாரத்தின் விற்பனைத் தேவையைக் கவர்ந்திழுக்கும் அம்சமாகத் திகழ்கிறது. பனிப்போர் காலகட்டத்தில் சோவியத் ரஷ்யா,

படிப்பகம்

www.padippakam.com



1990ம் ஆண்டுப் பகுதியில் இலங்கை அரசே விடுதலைப் புலிகளுக்கு ஆயுதமும் பண உதவியும் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்காக வழங்கியது போலவே இலங்கை அரசு பல சந்தர்ப்பங்களில் LTTEஇற்கு இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளது. அடிப்படையில் முரண்பாடுகளைக் கொண்ட எந்த அமைப்புமயப்படுத்தப்பட்ட நிறுவனங்களும் பரஸ்பர உதவிகளை வழங்கிக்கொள்வதில்லை.

Victor Ostrovsky என்பவர் இஸ்ரேல் உளவு ஸ்தாபனமான Mossadஇலிருந்து வெளியேறிய அதன் முக்கியஸ்தர் ஒருவர். அவர் எழுதிய By way of Deception என்ற நூலில் தமிழ் சுதந்திரப் போராளிகளுக்கும் அரச படைகளுக்கும் ஒரே நேரத்தில் இஸ்ரேல் உளவு ஸ்தாபனத்தால் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளமையானது எந்த ஏகாதிபத்திய சார்பு நாடும் விடுதலைப் புலிகளால் தலைமைதாங்கப்படும் போராட்டத்தைத் தமக்கு எதிரான போராட்டமாகக் கருதவில்லை என்பது தெளிவாகின்றது.

இறுதியில் தமிழ் தேசியவாதத்தைச் சீரழித்து மக்கள் மத்தியில் தேச விடுதலைப் போராட்டத்தின் மீதான வெறுப்பை ஏற்படுத்தி உண்மையான தேசபக்தர்களைக் கொன்றொழித்த தமிழீழ விடுதலைப் புலிகளும் அதன் ஆதரவு சக்திகளும் தெற்காசிய நாடுகளின் அந்நிய மூலதனத்திற்கெதிரான தேசியப் போராட்டங்களுக்கு அச்சுறுத்தலாகத் திகழ்கின்றனர்.

ஆரம்பத்திலிருந்து விடுதலைப் புலிகளின் சித்தாந்தப் பகுதியை நிரப்பிக்கொண்டிருந்த அறிவுஜீவிகளின் அச்ச உணர்வும் தாக்குதலும் இலங்கை அரசிற்கு எதிரானதாக இருந்ததைவிடவும் இடதுசாரி அமைப்புகளுக்கு எதிரானதாகவே இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. உண்மையிலேயே மார்க்சியம் கூறுகின்ற இயக்கவியல் பொருள் முதல்வாத அடிப்படைக்கு முரணான தத்துவப் போக்கைக் கொண்டிருந்த இவ்வாறான இலங்கையின் இடதுசாரி அமைப்புக்கள் நிலப் பிரபுத்துவ அமைப்பு முறைக்கும் அதன் மேற்கூறான சாதி அமைப்பு முறைக்கும் எதிரான கோஷங்களை முன்வைத்ததினூடாகத் தேசிய வாதக் கருத்துக்களை ஆதரித்தபோதிலும் 1980களின் நடுப்பகுதியில் வெளிவந்த விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான புலிகளின் குரலிலிருந்து பொதுவாக எல்லா வெளியீடுகளுமே இவ்வாறான இடதுசாரி அமைப்புகளை விமர்சித்து நிர்மூலமாக்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தன.

ஆக தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) என்பது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் தேசியவாதத்திற்கும் எதிரான பாசிச அமைப்பாக உருவெடுப்பதற்கு இதுவே பிரதான காரணமாக இருந்துவந்திருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



சாராம்சத்தில் இருக்கின்ற சமூக அமைப்பை அதாவது நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய சார்பு அணிகளை ஆதிக்கத்தில் வைத்திருக்கும் சமூக அமைப்பை நியாயப்படுத்துகின்ற. அது சார்ந்த தலைமைத்துவத்தைக் கொண்டிருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது அதே சமூக அமைப்பிற்கெதிரான போராட்டத்தைத் தனது தலைமையில் தேசிய சக்திகளை உள்வாங்கிக்கொண்டு முன்னெடுக்கும்போது தேசிய இன அடக்குமுறைக்கெதிரான மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் தேசிய உருவாக்கத் திற்கு ஆதரவான சமூக அமைப்பை உருவாக்க முயலும் உண்மையான தேசிய சக்திகளை அழித்துவருகின்றது. இதனால் LTTE என்ற அமைப் பானது தமிழ் மக்களின் நியாயமான தேச விடுதலைப் போராட் டத்திற்கு எதிரான பாசிச அமைப்பாக உருவெடுத்துள்ளது.

ஒரு புறத்தில் ஸ்ரீலங்கா பேரினவாத, நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ அரச இயந்திரத்தாலும் மறுபுறத்தில் தமிழ் தேசிய வெறியை முன்நிறுத்தும் ஏகாதிபத்திய சார்பு நிலப்பிரபுத்துவத் தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகளாலும் மொத்த இலங்கை யினதும் தேசிய பொருளாதார வளர்ச்சியும் தமிழர்களின் நியாயமான தேச விடுதலைப் போராட்டமும் சீர்குலைக்கப்பட்டுக்கொண்டிருக் கின்றது. தெற்காசிய நாடுகளின் சமூகப் பொருளாதார விடுதலைக்கே பாதகமான இந்த குழப்பகரமான அரசியல் சூழலை காலனி ஆதிக்கத்திற்குப் பின்னால் ஏற்படுத்துவதில் ஏகாதிபத்திய நாடுகள் வெற்றிபெற்றுள்ளன.

இந்தச் சிக்கலான, குழப்பகரமான, திட்டமிட்ட அழிப்பின் அடிப்படைகள் இருந்தவாறே பேணப்பட அதற்கு புதிய முரட்டுத்தனமான மறு ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்வடிவம்தான் உலகமயமாதல் அல்லது சர்வதேசியமயமாதல் (Globalisation) என்ற அழைக்கப்படும் அண்மைக்கால சமூக ஒழுங்கமைப்பாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# 12

## சர்வதேசமயமாக்கலும் தேசிய இனப்பிரச்சினையும்

சர்வதேசமயமாக்கல் என்ற பதத்திற்கு பல்வேறுபட்ட விளக்கங்கள் ஒவ்வொரு சமூகவியலாளரினதும் அரசியல், பொருளாதார, சமூக நோக்கு நிலையிலிருந்து முன்வைக்கப்படுகின்றன. ஆரம்பத்திலிருந்து சர்வதேசமயமாக்கலை ஆதரிப்பவர்களும் நியாயப்படுத்துபவர்களும் முன்வைக்கும் கருத்தானது சர்வதேசமயமாக்கல் என்பது உலக மக்களின் வாழ்க்கை முறையையும் பொருளாதாரத்தையும் சர்வதேசியரீதியில் இணைப்பதினூடாக அதனை மேம்படுத்துவது என்பதாகும்.

ஐரோப்பாவில் சந்தைப் பொருளாதாரம் வளர்ந்தபோது அது தனது மூலதனத்தை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தனது இலாபத்திற்கான சந்தையாக அந்நாடுகளைப் பயன்படுத்திக் கொண்டது. குடியேற்ற நாடுகளில் நேரடியாக ஆதிக்கம் செலுத்தி அந்நாடுகளின் மூலதனத்தைச் சுரண்டி அவற்றின் வளர்ச்சியைச் சீரழித்த ஐரோப்பிய நாடுகளின் அதிகார வர்க்கமானது குடியேற்ற நாடுகளிலிருந்து வெளியேறிய பின்னர் இந்நாடுகளில் தான் உருவாக்கிய நிலப்பிரபுத்துவத் தரகர்களினூடாக தனது மூலதனச் சுரண்டலை நடத்தி பெரும் லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டது. இந்த வகையான அடக்குமுறையே ஏகாதிபத்தியம் என அழைக்கப்பட்டது. குறித்த சில வளர்ச்சியடைந்த நாடுகள் ஏனைய நாடுகள் மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்தும் மற்றுமொரு மாற்று வடிவம்தான் சர்வதேசமயமாக்கல் என்பதாகும்.

ஏகாதிபத்திய உற்பத்திமுறையின் வளர்ச்சிப்போக்கில் அந்நிய மூலதனத்திற்குத் தரகர்களாக மாறிய நிலப்பிரபுத்துவ மேலணிகளும் உயர்வர்க்க மத்தியதர அணிகளும் இணைந்த தரகு முதலாளித்துவம் என்ற புதிய உற்பத்திமுறை உருவானது. தேசிய நலனுக்கு எதிரான, தாம் தரகுகளாகச் செயற்படும் நாடுகளுக்கு விசுவாசமான இந்தத்

படிப்பகம்

www.padippakam.com



தரகு முதலாளிகள் ஆட்சியிலும் அரச உயர்மட்டத்திலும் இருந்துகொண்டு தமது சொந்த நாட்டின் தேசிய வளர்ச்சிக்கு எதிராகத் தம்மாலான எல்லாத் தந்திரோபாயங்களையும் பயன்படுத்தினர். தமது விசுவாசிகளுடன் இணைந்து இலங்கை போன்ற நாடுகளில் பெருந்தேசியவாதத்தையும் இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் இவர்களே உருவாக்கினர்.

ஏகாதிபத்தியம் இவ்வாறு வளர்ச்சியடைந்த ஒரு கால கட்டத்தில் மூன்றாம் உலக நாடுகளில் தேசியப் போராட்டங்கள் வளர்ச்சியடைய ஆரம்பித்தன.

பொருளாதார வளர்ச்சியின் தேக்கநிலை காரணமாக வறிய நாடுகளின் உள்ளக சமூகக் கட்டமைப்பு சீர்குலைய ஆரம்பித்தது. வளர்ச்சியடைந்த நாடுகளில் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்க ஆரம்பித்தன. அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சிவீதம் 1970களில் இருந்ததைவிட 1990இல் அரைவாசியாகிப் போனது.

இதுபோன்ற காரணங்களால் வளர்ச்சியடைந்த நாடுகள் தமது சர்வதேசிய பொருளாதாரக் கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் காலனி ஆதிக்கத்தின் வடிவம் மாற்றியமைக்கப்பட்டு உள்நாட்டுத் தரகர்களை அடிப்படையாகக் கொண்ட புதிய வகையான காலனி அமைப்புமுறை உருவாக்கப்பட்டது. உலகெங்கும் உள்ள குடியேற்ற நாடுகளில் ஏற்பட்டிருந்த தேச விடுதலைப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் குடியேற்றவாத அடக்குமுறையிலிருந்து சுதந்திரம் வழங்கப்பட்டது என்ற பெயரில் புதிய காலனி அமைப்புமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தப் புதிய காலனி அமைப்புமுறை காலாவதியாகிப்போன நிலையில் சர்வதேசமயமாக்கல் என்ற பெயரில் மறுபடி உலகம் ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த ஒழுங்கமைப்பு புதிய வகையான உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் உலகம் முழுவதும் ஏற்படுத்தியதனூடாக மேலும் சிக்கலான நிலைக்கு சமூக வளர்ச்சிப் போக்கு தள்ளப்பட்டுள்ளது.

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின்னான காலப்பகுதியில் சர்வதேசமயமாக்கலுக்கான சூழ்நிலை போட்டியின்றி ஆதிக்கச் சக்திகளால் உருவாக்கப்பட்டது.

சர்வதேசமயமாக்கலின் மலிவான உழைப்பைக் கொள்வனவு செய்வதன் வெளிப்பாடாகவே மூன்றாம் உலக நாடுகளில் உருவாகி வரும் சர்வதேச வர்த்தக ஸ்தாபனங்களின் அங்கங்களும் தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. உள்ளூர் கூலிகள் மட்டுமல்லாது வளங்களும்கூட இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதன்

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்கா என்று இரு முகாம்களாகப் பிளவுபட்டிருந்த நிலையில் இந்த இரு முகாம்களுக்கு இடையிலான பகுதியை நிரப்பிக்கொண்டிருந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

அமெரிக்க முகாம் இராணுவ, பொருளாதார அழுத்தத்தைப் பிரயோகிக்கும்பொழுது சோவியத் முகாமை நோக்கியும் சோவியத் முகாமின் பக்கத்திலிருந்து இதே அழுத்தம் பிரயோகிக்கப்படும் பொழுது அமெரிகாவைச் சார்ந்தும் ஊசலாடும் ராஜதந்திரத்தைப் பிரயோகித்த இந்தியா இதனுடான ஏனைய நாடுகளுக்கு இருந்திராத சுயாதீனத்தைப்பெற்றிருந்தது.

இந்த சுயாதீனத்தின் அடிப்படையில் ஏனைய மூன்றாம் உலக நாடுகளைப் போலல்லாது இந்தியாவில் தேசியத் தன்மை கொண்ட முதலாளித்துவ வர்க்கம் உருவானது. உள் நாட்டிலிருந்த மிகப் பெரிய சந்தையை ஆதரமாகக் கொண்ட இந்த முதலாளித்துவம் அன்னிய மூலதனத்துக்கு தரகர்களாக மாறுவதைவிட சொந்த நாட்டின் சுயாதீன உற்பத்தியில் பெரியளவில் தங்கியிருந்தது. இந்த சுயாதீன மூலதனத்திலும் உலக வங்கியினுடான அன்னிய ஆதிக்கம் இருந்த போதிலும் ஏனைய மூன்றாமுலக நாடுகளில் ஏகாதிபத்தியத் தரகுகளை விட இயல்பில் வேறுபட்டதாக அமைந்தது. விமானப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு போன்ற பல துறைகளில் ஏனைய மூன்றாம் உலக நாடுகள் மேற்கு நாடுகளைத் தங்கியிருந்தபோது இந்திய சுயாதீனமாக வளர ஆரம்பித்தது.

ஒருபுறத்தில் இந்தியாவின் தேசியப் பொருளாதர வளர்ச்சியும் அதனூடான மூலதன விஸ்தரிப்பினால் எழுந்த பிராந்திய வல்லரசு மனோபாவமும் அமெரிக்க சார்ந்த ஏகாதிபத்தியத்திற்கெதிரான போக்கும் உருவாக ஆரம்பித்திருந்தது. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக் காலம் வரை நீடித்திருந்த இந்த நிலை படிப்படிப்படியாக மாற ஆரம்பித்து உலகமயமாக்கலின் பின்னர் புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்தது.

வேத மரபின் தொடர்ச்சியான வர்ண சாத்திர அடிப்படையில் அமைந்த இறுக்கமான நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பை ஒரு புறத்திலும் தேசிய மூலதன அரைகுறை வளர்ச்சியை மறுபுறத்திலும் தமது தேவைக்கேற்ப அன்னிய மூலதனத்துடன் சமரசம் செய்துகொள்கின்ற போக்கையும் கொண்டிருந்த இந்தியாவில் அன்னிய மூலதனத்திற்கும் தேசியப் பொருளாதார வளற்சிக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் அன்னிய மூலதன ஆதிக்க சக்திகளின் வெற்றியின் விளைவே உலகமயமாக்கலின் உள்வாங்கலாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank –ADB) இந்தியாவின் வளர்ச்சியின் 2006-2007இற்கான நிதிவருட அறிக்கையில் அதன் சராசரி வளர்ச்சி வீதமானது 88.5 எனக் குறிக்கிறது. இந்த

படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சியானது அபரிமிதமான வளர்ச்சியாகும். ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் இதே வளர்ச்சியானது சராசரி 23 வீதமாகவே அமைகிறது. தொழில்துறை வளர்ச்சியும் அதனூடான கட்டிடத்துறை வளர்ச்சியும் இதற்கான பிரதான காரணங்களாக அறிவிக்கப்பட்டபோதிலும் விவசாயத்துறை வீழ்ச்சி அடைந்துள்ளது. 2004ம் ஆண்டில் மட்டும் கட்டிடத்துறை 6 வீதம் தொழிலாளர் சக்தியைப் புதிதாக வேலைக்கு இணைத்துள்ளது. இந்த வளர்ச்சியைத் தொடர்ந்து உள்ளூர் முதலீடுகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

விவசாய நாடான இந்தியாவில் விவசாயத்துறை வீழ்ச்சி அடைய தொழில் துறை, சேவைத்துறை, கட்டிடத்துறை என்பன வளர்ச்சி அடைகின்றன. புதிய தாராளவாத பொருளாதார அமைப்பினூடான இந்த மாற்றம் சமூகத்தின் உற்பத்தி உறவுகள் மத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்த மாற்றங்கள் ஆரம்ப நிலையிலேயே இருந்தபோதிலும் 19ம் நூற்றாண்டில் ஏற்பட ஆரம்பித்த மாற்றங்களுக்குப் பின்னர் இப்போது மறுபடி சமூக அமைப்புமுறை மாற ஆரம்பித்துள்ளது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி என்பது உற்பதி உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற அதேவேளை புதிய சமூக மேல்கட்டுமானத்தை உருவாக ஆரம்பித்திருக்கிறது. இந்தியாவில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் புதிய போக்கு பழைய நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பைச் சார்ந்த பாரம்பரிய விவசாயப் பொருளாதாரத்திலிருந்து விலகிய போக்கு நிலையைக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

விவசாயப் பொருளாதாரம் ஒருபுறத்தில் நவீனமயப்படுத்தப் படுவதாலும் மறுபுறத்தில் தொழில்துறையின் தாக்கத்தினாலும் கிராமப்புறங்கள்தோறும் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது.

நகரங்களை நோக்கி கிராமப்புற வறிய கூலிவிவசாயிகளினதும் சிறு நில உடமையாளர்களினதும் இடம் பெயர்வு நகரங்களை விரிவாக்குவதுடன் உப நகரங்களை உருவாக்குகிறது. இந்தியப் பெரு முதலாளிகளை ஏகாதிபத்தியம் தனது பங்காளிகளாக மாற்றி வருகின்றது. மறுபுறத்தில் நகரங்களும் நகர் சார்ந்த பகுதிகளும் உருவாக சிறு நில உடமையாளர்கள் மூலதன உரிமையாளர்களாக மாற முற்படுகின்றனர். பெருந்திரளான விவசாயிகள் நிலத்துடனான தமது பிணைப்பிலிருந்து விடுபடுகின்றனர். நகர்ப்புறத் தொழிலாளர்களின் தொகை அதிகரிக்கிறது.

நிலப்பிரபுக்களினதும் நில உடமையாளர்களினதும் முக்கியத்துவம் அருகிவரும் நிலையில் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்குடன் ஆட்சி அதிகாரத்துடன் ஏற்கனவே தமக்கிருந்த உறவுகளைப் பலப்படுத்தும் இவர்களுக்கு எதிரான மனோ

படிப்பகம்

www.padippakam.com



பாவம் நகர்ப்புறத்திலிருந்து நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து கொண்டே செல்கிறது.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தெற்காசிய காலனி நாடுகளில் வியாபாரத்தடை அன்னியர்களால் நீக்கப்பட்டபோது உருவான முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக் காலகட்டத்தின் போது எவ்வாறு உற்பத்தி உறவுகளுக்கிடையே தமது வர்க்க நிலையை நிலையை நிலைநிறுத்திக்கொள்வதற்கான போராட்டம் நடை பெற்றதோ இன்றைய உலகமயமாக்கலுக்குப் பின்னதான கால கட்டமும் இதனை ஒத்ததாகும். நிலப்பிரபுக்கள் காலனிக் கால கட்டத்தில் நடந்ததைப் போலவே ஏகாதிபத்தியத்துடன் நிபந்தனை யற்ற கூட்டுக்கு முன்வருகின்றனர்.

இந்தியாவின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் FICCIC (Federation of Indian chamber of commerce and industry) என்பது உலகமயமாக்கலினுடான அன்னிய மூலதன ஆதிக்கத்திற்கு முற்றாக எதிரான நிலைப்பாட்டை எடுக்க பெரு முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் CII(Confederation of Indian industry) என்ற அமைப்பு உலகமயமாதல் தொடர்பாக உள்முரண் பாடுகளைச் சந்தித்தது. Assocham(Associated chamber of commerce and industry) என்ற மற்றுமொரு இந்திய முதலாளிகளின் கூட்டமைப் பிற்குள் இதன் சர்வதேச உறுப்பினர்களுக்கு மேலதிகத் தடைகளை விதிக்குமளவிற்கு உள்முரண்பாடுகள் உருவாகியுள்ளது.

இவ்வாறான முரண்பாடுகள் 1996ம் ஆண்டிலிருந்து பல்வேறு அளவுகளில் காணப்பட்டாலும் அடிப்படையில் சமூகத்தில் ஏற்படும் ஆரம்ப மாற்றங்களே.

அடிப்படையில் சர்வதேசமயமாக்கலும் புதிய பொருளாதார தாராளமயமாக்கலும் ஏற்படுத்திய ஏகாதிபத்திய நாடுகளால் விரும்பப் படாத இவ்வகையான மாற்றங்கள் புதிய சார்புநிலைகளையும் புதிய அணிகளையும் உருவாக்கியுள்ளது.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானிய காலனிகளில் ஆரம்பித்து உலகம் மறு ஒழுங்கமைக்கப்பட்டது. 1840 களுக்குப் பின்னர் தவிர்க்க முடியாத எதிர்ப்புகளின் இறுதியில் அதுவரையில் காலனி நாடுகளில் வர்த்தகத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப் பட்டது. உள்நாட்டு வர்த்தகமும் தொழில் துறையும் திறந்துவிடப் பட்டது. இதே வர்த்தகமும் தொழில்துறையும் விருத்தி அடைந்தபோது அதனைக் கண்டு அச்சமடைந்த பிரித்தானியா நிலப்பிரபுக்களோடு சமரசம் செய்துகொண்டு அன்னிய உற்பத்திப் பொருட்களையும் அன்னிய வியாபாரத்தையும் ஏற்றுமதி செய்து அந்நாடுகளின் தேசியப் பொருளாதார வளர்ச்சியைத் தடுத்தது. உள்நாட்டில் உருவான

படிப்பகம்

www.padippakam.com



அன்னிய மூலதனத் தரகர்களுக்கெதிரான போராட்டங்கள் தேசிய வாதிகளால் முன்னெடுக்கப்பட்ட போதுதேசிய முரண்பாடுகளையும் தேசங்களுக்கெதிரான முரண்பாடு களையும் தூண்டி மக்களைப் பிளவுபடுத்தி அவர்களைத்திசை திருப்பியது.

இப்போது உலகமயமாக்கல் என்ற பெயரில் உலகம் மறு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த அமைப்புமுறை காலாவதியாகிவிட்ட நிலையில் உலகம் முழுவதும் போராட்டங்களும் மோதல்களுமாகப் பிளவுபட்டிருந்த நிலையில் உற்பத்திச்சக்திகளின் வளர்ச்சி ஏகாதிபத்திய நாடுகளில் அருகிவிட்ட நிலையில் உற்பத்திச் சக்திகள் மூன்றாம் உலகில் வளர்ச்சியடையும் நிலையில் இருந்தபோது இந்த உலக மறு ஒழுங்கமைப்பு அரங்கேறியது.

இந்த உலகமயமாக்கல் என்ற மறு ஒழுங்கமைப்பிற்குப் பின்னர் 19ம் நூற்றாண்டில் ஏற்பட்டது போலவே மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இந்நாடுகளில் தொழில்நுட்பம் வர்த்தகம், இயந்திரத் தொழில் துறை, தகவல் தொழில்நுட்பம், கட்டிடத்துறை ஆகியன வளர்ச்சியடைய ஆரம்பித்தன.

இவற்றுள் சர்வதேச வர்த்தகத்துறை என்பது உலக வர்த்தக அமைப்பான WTO ஊடாக அமெரிக்காவினதும் அதன் நேச நாடு களதும் கட்டுப்பாட்டிற்குள் அமைந்துள்ளது. மூன்றாம் உலக நாடு களில் சர்வதேச வர்த்தகம் என்பது உலகமயமாக்கலூடான அதன் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றபோதிலும் இந்தியா போன்ற மிதமிஞ்சிய மூல வளத்தையும் சந்தையையும் கொண்டுள்ள நாட்டில் ஏனைய துறைகளின் வளர்ச்சி என்பது WTO, IMF ஆகியவற்றின் கட்டுப்பாடுகளையும் மீறி தேசியப் பொருளா தாரத்தை விருத்தியடையச்செய்திருக்கிறது.

கட்டிடத் தொழில்துறை வளர்ச்சி என்பது 33.8 வீதமாக உச்ச நிலையை அடைந்துள்ள அதே நேரத்தில் சேவைத் துறை மற்றும் தொழிற்துறை என்பனவும் அபரிமித வளர்ச்சி கண்டுள்ளது.

இதுவரை நிலத்தோடு பிணைக்கப்பட்டு நிலத்தைச் சுற்றி முடங்கிக் கிடந்த பணப்புழக்கம் இன்று நகரங்களையும் உப நகரங் களையும் நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. 2006ம் ஆண்டில் உள்ளக வியாபாரத்துறைக்கு 34.3 வீதம், வீடமைப்பிற்கு 32.3 வீதம், உள்ளகக் கட்டமைப்பிற்கு 23.2 வீதம், உணவுத்துறைக்கு 23.6 வீதம் என வங்கிக் கடன் அதிகரித்துள்ளதாக Reserve Bank of India தெரிவித்துள்ளது.

கிராமப்புறங்களில் இருந்து வறிய கூலி விவசாயிகள் நகர்ப் புறங்களை நோக்கி நகர்வதும் சிறு நில உடமையாளர்கள் ஏனைய

படிப்பகம்

www.padippakam.com



தொழில் துறைகளை நோக்கி நாடிச்செல்வதும் புதிய நகரங்களின் உருவாக்கமும் ஐரோப்பிய நாடுகளின் முதலாளித்துவ மறு மலர்ச்சிக் காலகட்டத்தை நினைவுபடுத்துகிறது. சமூகத்தின் பரிணாமவளர்ச்சி மறுபடி ஒருமுறை எமது காலகட்டத்தில் நிகழ்வதாகப் பல சமூக விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைகின்றனர். ஆனால் இது நிரந்தர மானதா, முழுமையான வளர்ச்சியின் ஆரம்பமா, இதன் தொடர்ச்சி எங்கே கொண்டுசெல்லும் என்ற பல விவாதங்களும் எழுந்துள்ளன.

19ம் நூற்றாண்டில் காலனி நாடுகளில் ஏற்பட்ட தற்காலிக வளர்ச்சியை ஒத்திருக்கும் இந்தத் தேசியப் பொருளாதார வளர்ச்சி என்பது இதுவரை இந்த மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டி வாழ்ந்த பலமான ஏகாதிபத்தியங்கள் சுற்றியிருந்து அவதானித்தவாறே நிகழ்கின்றன.

சர்வதேசமயமாக்கலூடான தவிர்க்க முடியாத இந்த வளர்ச்சிப் போக்கிற்கெதிராக 19ம் நூற்றாண்டில் நிகழ்ந்ததைப் போலவே ஏாகதி பத்திய நாடுகளான அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் தமது ஏகபோக அதிகாரத்தை மறுபடி நிலைநாட்டி வளர்ச்சியைத் தடுக்க முயல்கின்றன.

இந்த நோக்கத்தில் புதிய மேலாதிக்கத் திட்டங்கள் செயற்படுத் தப்படுகின்றன.

அ) 19ம் நூற்றாண்டில் நடந்ததைப் போலவே இந்த வளர்ச்சி யினால் பாதிப்டைந்த ஆதிக்கச் சக்திகளுடன் ஏகாதிபத்திய நாடுகள் சமரசம் செய்துகொள்ள முற்படுகின்றன.

அடிப்படையில் இதுவரையில் இந்திய சமூகத்தில் மிகவும் உயர்ந்த ஆதிக்க நிலையில் இருந்த நிலப்பிரபுக்களுடன் பலவகைகளில் சமரசம் செய்துகொண்டு அவர்களைப் பலப்படுத்த அமெரிக்கக் கூட்டாளிகள் விழைகின்றனர். நிலப்பிரபுக்களே சமூகத்தில் தேசியப் பொருளாதார வளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட சக்திகள் என்ற வகையில் இவர்களுடன் அணிசேருகின்ற ஏகாதிபத்திய சக்திகள் பருத்திப் பயிர்ச்செய்கை போன்ற பணப்பயிர்களை இவர்களுக்கு அறிமுகப்படுத்தி அதனூடான சலுகைகளையும் நிலப்பிரபுக்களுக்குச் சார்பாக முன்னிறுத்துவதனூடாக மறுபடி அவர்களின் இருப்பை சமூகத்தில் நிலைநிறுத்துவதோடு மட்டுமல்லாது அவர்களை தேசிய மூலதன உருவாக்கத்துடன் சமரசம் செய்வதையும் அதனால் தூக்கியெறியப்படுவதையும் தடை செய்கிறது.

பெருநிலப்பிரபுக்களின் நிலங்களை ஏகாதிபத்தியப் பங்காளி களாக மாறி வரும் TATA, Riliance போன்ற நிறுவனங்களூடாகக் கொள் வனவு செய்வதன் மூலம் அவர்களை அன்னிய முதலீடுகளுடன் தேசிய

படிப்பகம்

www.padippakam.com



மூலதன உருவாக்கத்திற்கெதிராக இணைத்துக் கொள்கிறது. சிறு நில உடமையாளர்களையும் கவர்ந்திழுக்கும் இந்த நிலக் கொள்முதல் அவர்களின் தேசிய முதலீடுகளையும் திசைதிருப்பி ஏகாதிபத்தியப் பங்காளர்கள் வசமாக்கிக்கொள்கிறது.

ஆ) தேசிய தொழில் வளர்ச்சிக்கெதிரான சர்வதேசிய அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

இந்தியா, சீனா போன்ற நாடுகள் சூழல் மாசடைவதற்கும் வெப்பமடைவதற்கும் துணை போகின்றன என்றும் இதற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் மிரட்டிவருகின்றன. இந்தியாவின் தேசிய மூலதன வளர்ச்சிக்கெதிராகவும் தொழில் வளர்ச்சிக்கெதிராகவும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளூடாக இந்தியாவில் உருவாகும் தேசிய முதலாளித்துவ சக்திகள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அதன் சர்வதேச மூலதனப் பங்காளர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிரான சக்திகளாக தேசிய முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் ஏகாதிபத்தியங்கள் பாதுகாத்துக்கொள்கின்றன.

இ) TATA போன்ற இந்தியப் பெருமுதலாளிகளுக்கு ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள சந்தையைத் திறப்பதனூடாக ஏகாதிபத்தியங்கள் அவர்களைத்தமது பங்காளர்களாக மாற்றி தேசிய அளவில் எழுகின்ற எதிர்ப்பைக் கூறுபோடுவதுடன் அதிகார வர்க்கத்தைத் தம்முடன் இணைத்துக்கொள்கின்றன.

90களின் இறுதிப்பகுதியில் இந்தியாவைக் கணணிமயப்படுத்தும் நோக்குடன் அமெரிக்காவுடன் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி ஒப்பந்தம் மேற்கொள்ள முற்பட்டபோது இந்தியப் பெருமுதலாளி களிடமிருந்து பெருமளவிலான எதிர்ப்பு உருவானது. ஆனால் 2007ம் ஆண்டில் 123 அணு சக்தி ஒப்பந்தம் அமெரிக்காவின் உள்நாட்டு சட்டதிட்டங்களுக்கமைய கைச்சாத்திடப்பட்டபோது இதே அதிகார வர்க்கத்திடமிருந்து எந்தவிதமான எதிர்ப்பும் முன்னெழ வில்லை. அடிப்படையில் இந்துப் பெருமுதலாளிகளும் அவர்கள் சார்ந்த அரசும் ஏகாதிபத்தியத்தின் நேரடிப் பங்காளர்களாக மாற்றப் பட்டு வருகின்றன என்பது தெளிவாகிறது.

ஈ) இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பைப் பலவீனமாக்குவதனூடாக இந்தியாவின் ஏகாதிபத்திய சார்புநிலையை உறுதிப்படுத்த அமெரிக்காவும் அது சார்ந்த அணிகளும் முற்படு கின்றன.

இந்தியாவின் தேசிய முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியத்தின் பங்காளர்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான மோதலில் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



புறத்தில் ஏகாதிபத்திய நாடுகள் தனது பங்காளிகளின் உதவியுடன் இந்தியா இராணுவ ரீதியாக அமெரிக்கா அணியைத் தங்கியிருக்கும் நிலையை உருவாக்கும் அதே நேரத்தில் இந்தியாவைச் சுற்றிவர இருக்கும் இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பயங்கர வாதத்தைக் காரணம் காட்டி அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த முற்படுகிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை, நேபாளம் எனப் பயங்கரவாதப் புரளியைக் கிளப்பிவிட்டிருக்கும் அமெரிக்கா இந்தியாவின் பிராந்திய வல்லரசு மனோபாவத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் அதன் பிரதேச ரீதியான மூலதன விரிவாக்கத்தையும் தடைசெய்கிறது. இந்தியாவின் அயல் நாடுகளில் தனது ராணுவ அரசியல் ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் அமெரிக்கா இந்தியாவில் தேசிய சக்திகளும் தேசிய மூலதனமும் வெற்றி பெறுமானால் அவற்றிற் கெதிராக அணி வகுக்கவும் தயாராகின்றது.

பாகிஸ்தானில் 2007ம் ஆண்டு நடந்த சிவப்பு மசூதி பிரச் சனைக்குப் பின்னர் இஸ்லாமியத் தீவிரவாதம் வேர்விட ஆரம்பித் துள்ளது. சிவப்பு மசூதிப் பிரச்சனையில் பாகிஸ்தான் இராணுவ அரசிற்கு ஆதரவளித்த அமெரிக்காவிற்கு இதன் விளைவுகள் தெரியா மலிருக்க நியாயமில்லை. ஆப்கானிஸ்தானைப் போல பாகிஸ்தானில் தீவிரவாதம் வேரூன்றுமானால் அங்கே நேரடி ராணுவ ஆதிக்கத் திற்குக் கதவுகள் திறக்கப்படும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழீழ விடுதலைப் புலி களும் சிறீலங்கா அரசின் பேரினவாதமும் இருக்கும் வரை தீவிர வாதமும் அமெரிக்காவின் வரையறுப்புக்குட்பட்ட பயங்கரவாதமும் நிலைத்திருக்கும். அமெரிக்காவின் நலனுக்கு எந்தவிதத்திலும் அடிப்படையில் முரண்படாத விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும் அமெரிக்காவின் தெற்காசிய நண்பர்களாகத் திகழ்வார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்கள் அடிப்படை யில் மக்கள்விரோத பாசிச அமைப்புக்களே என்பது மறுக்க முடியா தாயினும் இவ்வாறான அமைப்புக்களிலிருந்து உண்மையான தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புக்கள் உருவாகக்கூடிய சாத்தியப்பாடு களைக் கருத்தில் கொள்ளும் அமெரிக்க நேச அணிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலைப் பின்னலை முடக்குவதனூ டாக அதனைப் பொருளாதார ரீதியாக ஒருபுறத்தில் பலவீனமடையச் செய்வதும் மறுபுறத்தில் அதன் நேச நாடுகளான நோர்வே போன்ற நாடுகளூடாக புலிகளின் இருப்பையும் பாதுகாத்துக்கொள்கின்றது.

இதனூடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சுயாதீனத்தைச் சீர் குலைத்து அதனை அமெரிக்க அணியின் நேரடிக் கட்டுப்பாட்டி

படிப்பகம்

www.padippakam.com



லுள்ள அமைப்பாக மாற்ற முற்படும் அதேவேளை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தியத்தால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தையும் ஏகாதிபத்தியங்கள் ஆதரிக்கின்றன.

அடிப்படையில் மொத்த இந்தியாவின் சந்தையையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலும் அமெரிக்காவின் தலைமைலான ஏகாதிபத்திய அணி தமது இந்த நோக்கத்திற்காகவே தெற்காசியப் பிராந்தியத்தில் தனது ராணுவ வலிமையைப் பயன்படுத்தி வருகிறது. இந்தியாவைச் சுற்றிவர இருக்கும் நாடுகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தனது ராணுவக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்நாடுகளில் பயங்கரவாதத்தை உருவாக்குவதனூடாகவோ அல்லது அதற்கான புறச்சூழலை உருவாக்குவதனூடாகவோ இதனைச் சாதிக்க முற்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட இஸ்லாமியப் பயங்கரவாதம் தெற்காசியாவில் ஆப்கான் என்ற நாட்டை அமெரிக்க நேச நாடுகளின் ராணூவத்தளமாக மாற்றி யுள்ளது. ஆப்கானிஸ்தானிலிருந்து எல்லைப் பாதுகாப்பு என்ற பெயரில் பாகிஸ்தானுக்குள் ஊடுருவியுள்ள அமெரிக்க ராணுவம் இஸ்லாமியப் பயங்கரவாதத்தைக் காரணம்காட்டி அதன் நிலைகளை பாக்கிஸ்தானுக்குள் விஸ்தரிக்கும் காலம் தொலைவில் இல்லை.

நோர்வே தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா விலும் தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டரீதியாகத் தடைசெய்யப் பட்டதனால் தனது நடவடிக்களை இந்த நாடுகளில் மட்டுப் படுத்தியுள்ள இந்த அமைப்பின் நிதிக்கான மூலக்கூறுகள் ஐரோப்பிய நாடுகளால் முடக்கப்பட்டுள்ளன. நோர்வேயில் மட்டுமே தனது சர்வதேசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விடுத்லைப் புலிகள் ஆரம்பத்தில் இருந்தே இந்தியாவிற்கெதிரான உணர்வுகளைக் கொண்டுள்ளதால் நோர்வே நாட்டினை மட்டுமே தனது நேச அணியாகக் கருதுகிறது. படிப்படியாக நோர்வேயின் கட்டுப் பாட்டுக்குள் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக நிர்மூல மாக்கப்படுவதை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் விரும்ப வில்லை எனினும் அதனைப் பலவீனப்படுத்துவதனூடாக நோர்வே யின் கட்டுப்பாட்டை இறுக்கப்படுத்தி வருகிறது.

மறுபுறத்தில் இந்தியா மீதே தனது அழுத்தத்தைப் பிரயோகித்து 123 ஒப்பந்தம் போன்ற பல ஒப்பந்தங்களை நிறைவேற்றிய அமெரிக்கா இலங்கையின் இனப்பிரச்சனையில் அதன் மிக நம்பிக்கைக்குரிய நாடான நோர்வேயின் நேரடிப் பங்களிப்பு இருந்தபோதிலும் சர்வகட்சி மகாநாட்டிலிருந்து நேரடியான இன அழிப்பு நடவடிக்கை

படிப்பகம்

www.padippakam.com



வரை எந்தவிதமான உறுதியான நடவடிக்கைகளையும் மேற் கொள்ளாது பேரினவாதத்தை மறைமுகமாக ஆதரித்து வருகின்றது.

மொத்ததில் சிறீலங்கா அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பையும் தனது இராணுவ அடிமைகளாக மாற்றிவரும் அமெரிக்கா இந்தியாவின் தென் கோடியில் இந்தியாவிற்கு எதிராக இன்னுமொரு ராணுவத் தளத்தைக் கட்டியெழுப்புகிறது. ஆக அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளதும் ஆதரவில் அவற்றின் கட்டுப்பாடிற்குள் இலங்கை என்ற நாடு இரத்தத்தில் தோய்க்கப் படுகிறது.

90இற்கு முற்பட்ட காலப்பகுதியில் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவைச் சூழவர இருந்த நாடுகளில் நிலவிய தனது பிராந்திய மேலாதிக்கத்தை இந்தியா இழந்துவர அமெரிக்கா அதனைக் கைப்பற்றி வருகிறது. உலகமயமாக்கலூடான தேசியப் பொருளாதாரத்தையும் தேசிய முதலாளித்துவத்தையும் நிர்மூலமாக்கும் நோக்கிலான அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளானது இலங்கை இனப்பிரச்சனையை நீண்டு தொடரும் குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

## முடிவுரை...............

காலனியாதிக்கத்திற்குட்பட்ட நாடுகளில் தேசிய இனப்பிரச்சனை தொடர்பான இந்த ஆய்வில் பல சர்ச்சைக்குரிய பிரச்சனைகள் ஆய்விற்கெடுத்துக்கொள்ளப்பட்டபோதிலும் இந்த சிறிய ஆய்வில் இவற்றை மேலும் விரிவுபடுத்த முடியாதென்பது வெளிப்படை. எனினும் குடியேற்றவாதத்தால் சின்னாபின்ன மாக்கப் பட்ட ஒரு நாட்டின் தேசிய இனப்பிரச்சனை என்பது ஐரோப்பிய நாடுகளின் தேசியப் பிரச்சனைகளில் இருந்தும் பால்கன் நாடுகள் போன்ற பல்தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளின் பிரச்சனை களில் இருந்தும் வேறுபட்டதென்பதன் அடிப்படையிலிருந்தே இந்த ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டது.

நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பு முடிவுக்கு வர மூலதன உருவாக்கத்தினூடாக தேசங்களும் தேசியம் என்ற கருத்துருவாக்கமும் மூன்றாமுலக நாடுகளைப் பொறுத்த வரையில் நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பு இன்றும் பேணப்படும் நிலையில் உற்பத்திச் சக்திகளின் நிலையையும் உற்பத்தி உறவுகளின் சார்பு நிலை தொடர்பாகவும் அதன் வரலாற்று வளர்ச்சி தொடர்பாகவும் சுருக்கமாக ஆராயும் இந்த முயற்சி மேலும் மேலும் குழுநிலைவாதப் போக்குகளுக்கப்பால் விவாதங்களுக்கூடாக வளர்த்தெடுக்கப்படும் என நம்புகிறேன்.

முதலாளித்துவப் புரட்சியினூடாக பிரஞ்சு தேசம் உருவான போது தேசியம், தேசம் என்ற கருத்தாக்கம் வளர்த்தெடுக்கப்பட்டதை ஆரம்பத்தில் ஆராய்வதில் இருந்து ஆரம்பிக்கும் இந்த ஆக்கம் தேசியம் தொடர்பான விஞ்ஞானபூர்வமான கருத்தின் உருவாக்கத்தை விபரிப்பதில் இருந்து ஆரம்பிக்கிறது.

மூலதனம் சீராக வளர்ச்சியடையாத நாடுகளில் பல சந்தைகளும் அவற்றை நோக்கி மத்தியத்துவப்படுத்தப்பட்ட மூலதனமும் காணப்

படிப்பகம்

www.padippakam.com



படுவதால் பல்தேசிய நாடுகளாக அவை உருவாகின. குடியேற்ற நாடுகளைப் பொறுத்தவரையில் மூலதன உருவாக்கம் திட்டமிட்டு நசுக்கப்பட்டதாலும் ஏகாதிபத்தியங்களின் தொடர்ச்சியான ஆதிக்கத்தாலும் உற்பத்தி உறவுகளும் அவற்றிற்கிடையேயான முரண்பாடுகளும் எவ்வாறு ஏனைய காலனி ஆதிக்கத்திற்குட்படாத நாடுகளில் இருந்து வேறுபடுகிறது என்றும் தொடர்ச்சியாக ஆராயும் இந்தக் கட்டுரை எவ்வாறு ஏகாதிபத்திய நாடுகள் இந்த சிக்கலான முரண்பாட்டைத் திட்டமிட்டு வரலாற்றைத் திரித்து உருவாக்கின என்பதை வரலாற்று ஆய்வினூடாக விபரிக்கிறது.

நிலப்பிரபுத்துவக் காலத்து வேதமரபும் அந்த சமூக அமைப்பிற்கு அவசியமாக இருந்த மதங்களும் அன்னிய மூலதன சொந்தக்காரர் களதும் அவர்களின் தரகர்களதும் சொந்த நலன்களுக்காக எவ்வாறு தந்திரமாக மாற்றி அமைக்கப்பட்டு திட்டமிடப்பட்டு மக்கள் மத்தியில் முரண்பாடுகள் தூண்டிவிடப்பட்டு தேசங்களதும் தேசிய மூலதன உருவாக்கமும் குடியேற்ற நாடுகளில் எவ்வாறு சிதைக்கப்பட்டன என விளக்கப்படுகிறது.

இந்த முயற்சி என்பது பிரதேசங்களை உரிமை கொண்டாடி தேசங்களினதும் தேசிய இனங்களினதும் எல்லைகளை தேசிய வெறியர்களின் சொந்த லாபத்திற்காக மறுபடி வரைவதற்காகவல்ல! ஏகாதிபத்தியங்கள் எவ்வாறு மக்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தூண்டி கூர்மைப்படுத்தினவென்றும் அதன் தொடர்ச்சியை இன்றும் எவ்வாறு கையாள்கின்றனவென்றும் அதனூடாக தேசியப் பொருளா தார உருவாக்கத்தைத் தடுத்து மக்களைக் கூறுபோட்டு போர்களை உருவாக்கி மனிதப் பிணங்களின் மீது தமது நாடுகளில் உள்ள ஆதிக்கச் சக்திகளின் நலனை பேணுகின்றனவென்றும் கோடிட்டுக் காட்டவே முனைகிறது இந்தக் கட்டுரை.

உலகமயமாக்கலின் பின்னர் தேச எல்லைகளும் அவற்றின் அதிகார சக்திகளும் மறுபடி ஒழுங்கமைக்கப்படுகின்றன. இலங்கை ஒரு பல்தேசிய இன நாடு. மூலதன உருவாக்கத்திற்குப் பின்னதான தேசிய இனங்களின் உருவாக்கம் மன்னராட்சிகாலப் பாரம்பரியத் தோடு தொடர்புடையதாக இருந்தாலும் தேசிய எல்லைகளைத் தேசிய இனங்களே வரையறுக்கின்றன. தேசிய இனங்களுக்கிடையேயான முரண்பாடு என்பது இலங்கையைப் பொறுத்தவரை ஆங்கிலேயர் களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்று. ஏகாதிபத்தியங்களின் சொந்த நலனுக்காக இன்றும் பயன்படுத்தப் படுத்தப்படும் இந்த முரண்பாடானது தேசியப் பொருளாதாரத்தின் சீரான வளர்ச்சியூடாகவே மறைந்துபோக முடியும்.

உலகமயமாக்கலுக்குப் பின்னதான சமூகப் பகைப்புலம் இன்று உற்பத்தி உறவுகளுக்கிடையேயான போராட்ட காலமாகவுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# உசாத்துணை நூல்கள்


**Chapter 1,2 and 3**

- *Du Contrat social ou principe du droit politique* – 1762- J.J.Rousseau
- *Qu'est-ce que le tiers état ?* (What is the third estate?) -1789- Abbé Sieyès
- *Address to the German Nation - 1806* – J.G.Fitche
- *Recueil de documents relatifs à la convocation des états généraux de 1789 -1894*-Brette Armand
- *The Making of Italy 1815–1870*- 1971 - Edgar Holt
- *Nations and Nationalism since 1780* - E. J. Hobsbawm
- *Nations and Nationalism (New Perspectives on the Past)* – 2006 -Ernest Gellner
- *Nationalism in Europe 1789 – 1945* – 1998 –Timothy Baycroft.
- *J.V. Stalin Works (Aug-Dec 1927, Volume 10)*
- *Early Settlement in Jaffna : An Archaeological Survey, Madras* -1987- P.Ragupathy.
- *The Journal of the Ceylon Branch of Royal Asiatic Society* - 1954- Ralph Pieris.
- *South India and Ceylon* - 1963 – K.K.Pillai – University of Madras.

**Chapter 4,5,6**

- *Indian thoughts and it's development* -1960- Albert Schweitzer
- *Brama Sutra Bhashya of Sri Sankaracharya*
- *புற நானூறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
- *Müller 1849-75 (French translation)*
- *Hymns from the Rigveda* (Calcutta, London, 1922) -1917 - A. A. Macdonell


படிப்பகம்

www.padippakam.com




- பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் 1967 - பேராசிரியர் க. கைலாசபதி
- புத்தரின் அற நெறியும் அருளுரையும் - 1990 - தி.இராசகோபாலன்
- வால்காவிலிருந்து கங்கைவரை - 2003 தமிழ்ப்புத்தகாலயம். சென்னை
- *The Brami Inscription of Ceylon* – 1970 – S.Paranavithana.
- *The King dom of Jaffna* – 1978 S.Pathmanathan.
- யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் 1972, க. இந்திரபாலா
- *Dutugemmunu* – 1946 - John M.Seneverathne
- *Mahavamsa* – 1950 - W.Geiger.
- *Culavamsa* – 1925 – W.Geiger.
- *A History of Ceylon* – 1948- S.G.Perera
- *Ancient Ceylon* 1909 – H.Parker
- யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் - 1970, கலாநிதி இந்திரபாலா
- யாழ்ப்பாணச்சரித்திரம் - ஆங்கிலேயர் காலம் - முதலியார் செ. இராசநாயகம்
- தீக நிகாயம் 1988, சுந்தர நிலையம் சென்னை
- *An historical relation of Ceylon* -1681- Robert Knox
- *Histoire de l'Isle de Ceylan* 1701 - J. L. De Lorme.
- *Buddhism Betrayed* 1992 Stanley Thambiah
- *History of Buddhism in India and Tibet* 1995 Rin-Chen-Gru Bu-Ston and Eugene Obermiller
- *The People of the Lion SriLankan Journal of Humanities Vol5 No1,2&3* 1979 R.A.L.H Gunawardena
- *La religion des Intouchables de l'Inde* 2005 Robert Deliège


**Chapter 7**


- *A Biography of Ceylon* -1983 – H.A.I.Goonetileke
- தமிழ் தேசியவாதம் அதன் ஆரம்பத்தோற்றம் பற்றியதோர் ஆய்வு 2003 Dr.Murugar Kunasingam
- *The story of Ceylon* 1985 E.F.C Ludowick


படிப்பகம்

www.padippakam.com



- *Ancient Ceylon* 1999 H.Parker
- *Sri Lanka – The holocaust and after* 1984 L.Piyadasa
- *Ceylon observer - Published* Group of Merchants Colombo 1983.
- *Morning star Published by American Ceylon mission Manipay* 1840,1841.

**Chapter 8,9**

- *Aryas, Aryens et Iraniens en Asie Centrale* 2005 Gérard Fussman, Jean Kellens, Henri-Paul Francfort, et Xavier Tremblay
- *La civilisation de l'indus* 1935 Mac Kay Ernest.
- *Lettres sur l'origine des sciences et sur celle des peuples de l'Asie* 1977 Voltaire.
- *The Essential Max Müller: On Language, Mythology, and Religion* 2002 Jon R. Stone.
- *Fragments historiques sur l'Inde 1893* Voltaire.
- *The Aryan Debate in India* 2005 Thomas Trautmann
- *Sir William Jones: A study in eighteenth-century British attitudes to India* 1968 S.N. Mukherjee.
- *Languages And Nations (Conversations in Colonial South India)* 2006 Thomas R. Trautmann
- *Early India: From Origins to AD 1300,* 2002 Romila Thapar
- *The Secret Doctrine: the Synthesis of Science, Religion, and Philosophy: Index to Volumes 1 and 2* 2001 H. P. Blavatsky
- *Indo-Aryan Controversy: Evidence and Inference in Indian History* 2005 Edwin Bryant
- *A la recherche de Ferdinand Saussure* 2007 Michel Arrivé.
- *The Indus Valley, Baluchistan and Helmand Traditions: Neolithic Through Bronze Age* 1992 Jim Shaffer.
- *The Arya Dharma of Sakya Muni, Gautama Buddha OR The Ethics of Self Discipline.* 1989 Anagarika Dharmapala.
- *Colonel Olcott: His service to Buddhism* 1981 Buddhadasa P Kirthisinghe.

படிப்பகம்

www.padippakam.com



- *The Theosophist October 1890 to April 1891* 2004 Henry S. Olcott
- *La vie extraordinaire de Héléna P. Blavatsky* 1972 A. P. Sinnett
- *Comment étudier la Théosophie selon Mme Blavatsky* 2000 Robert Bowen.
- *Flame in Darkness: The Life and Sayings of Anagarika Dharmapala* 1995 Sangharakshita.
- *http://www.lankalibrary.com/cul/anagarika.htm*
- *Sri Lankan Ethnic Crisis: Towards a Resolution* 2006 R.B. Herath

**Chapter 10,11**

- *Ethnic politics in colonial Sri Lanka* -- 1995 –Nira Wickramasinghe.
- *In Defense of Dharma: Just-War Ideology in Buddhist Sri Lanka* -2002 Bartholomeusz.
- *Tamil culture and civilisation – X.S.Thaninayagam.*
- *Scarred Minds: The Psychological Impact of War on Sri Lankan Tamils* 1998 Daya Somasundaram.
- *Ethnic Attachments in Sri Lanka: Social Change and Cultural Continuity* 2001 Lakshmanan Sabaratnam.
- *Sri Lanka: Third World Democracy (Studies in Commonwealth Politics and History, No 6)* 1978 James Jupp.
- *Sri Lanka: The Arrogance of Power: Myths, Decadence & Murder* 2001 Rajan Hoole .
- *The Broken Palmyra, the Tamil Crisis in Sri Lanka, An Inside Account* 1992 Rajani Thiranagama, Rajan Hoole and the others.

**Chapter 12**

- *India's Globalization: Evaluating the Economic Consequences* 2006 Baldev Raj Nayar.
- *When Corporations Rule the World* 1995 David Korten
- Against Global Capitalism: African Social Movements Confront Neoliberal Globalization 2006 E. Osei Kwadwo Prempeh

படிப்பகம்

www.padippakam.com




- *Naming the Enemy: Anti-Corporate Social Movements Confront Globalization* 2001 Amory Starr.
- *The Rise of the Anti-Corporate Movement: Corporations and the People who Hate Them* 2007 Evan Osborne
- *China and the New World Order: How Entrepreneurship,Globalization, and Borderless Business Are Reshaping China and the World.* 2006 George, Zhibin Gu and William, Ratliff.


♦♦♦

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பிரான்சில் பிரஞ்சு மொழி பேசியவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் அரைவாசிப் பகுதியினரேயாவர். வேறுபட்ட பிரதேசங்களில் வேறுபட்ட மொழிகள் பேசப்பட்ட போதிலும் தேசத்தின் உருவாக்கத்தின் பின்னர் பிரஞ்சு மொழியே தனியான பேச்சுமொழியாக மாற்றமெடுத்தது.

முதன்முதலாக ஐரோப்பா தனது இராணுவ, அரசியல், பொருளாதார ஆதிக்கத்தை மற்றைய நாடுகள் மீது திணித்து அந்த நாட்டு மக்களை பிரித்தாள தொடங்கியபோதே உலகம் சீரழிக்கபட்டது.

பௌத்த தத்துவம் பரவ தொடங்கியபோது அதன் புரட்சிகரமான தத்துவார்த்த பகுதிகளை கண்டு பயந்த ஆளும் வர்க்கத்தினரும், அதன் தத்துவ கர்த்தாக்களாகவும் நெறியாளர்ளாகவும் திகழ்ந்த பிராமணர்களும் கௌதம புத்தரை ஒரு புராண கதாநாயகனாக உள்வாங்கி கொண்டு நவீன சமுக விஞ்ஞானத்திற்கு ஈடான உபநிடதக்காலத்து பௌத்த தத்துவத்தைக் குழிதோண்டி புதைத்துவிட்டனர்.

தேசம் வெளியீடு

படிப்பகம்